# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஆடி 13, 2018. இதழ் - 21



தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!





காதலர் தினம் கொண்டாடப்படுவது சரியா தவறா என்பது பற்றிய வாதங்கள் முன்வைக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் பாரதி காதலைப்பற்றி கூறியவை பற்றி பார்ப்பது சாலப்பொருத்தம்.

பக்கம் - 07



## நக்கீரப் பார்வை

இந்தக் கதை நீங்கள் அறிந்த கதை, தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பிரபலமான

பக்கம் - 17



## இலங்கை இந்திய காங்கிரஸ் : தோற்றமும் மாற்றமும்

இலங்கை இந்திய காங்கிரஸின் தோற்றம் நடேசய்யர் உருவாக்கிவைத்திருந்த அரசிய

பக்கம் - 11



## இரண்டாவது முறை தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள்

**புதிதாக உதயமாகும் புதிய போராளிகள்**

பக்கம் - 09

# ‘மரண தண்டனையை மீள அமுல்படுத்த விளைதல் பிரச்சினைகளை அதிகரிக்கும்’ - சட்ட நிபுணர்

பி.கே.பாலச்சந்திரன்

போதைப்பொருள் கடத்தலில் தொடர்ந்து ஈடுபடும் கடத்தல்காரர்களை தூக்கில் போடுவது என்ற இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவு, போதைப்பொருள் கடத்தல் விவகாரத்தை செயற்திறனற்ற வகையில் கையாள வழி செய்வதுடன் பல சட்டச் சிக்கல்களுக்கும் வழி செய்யும் என்று சட்ட நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு தொகுதியினரை மாத்திரம் தெரிவு செய்து தண்டனையை நிறைவேற்றுவது பிரச்சினைக்குரியது என்று கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மூத்த விரிவுரையாளரான வீ.ரி. தமிழ்மாறன் கூறியுள்ளார்.



ஒரு சிலரை மாத்திரம், அதாவது போதைமருந்துக் கடத்தல்காரர்களுக்கு மாத்திரம் தண்டனையை நிறைவேற்றும் இந்த நடவடிக்கை, அரசியலமைப்புச் சட்டத்தின், சமத்துவத்துக்கான உரிமையை மீறும் செயலாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் 1976 முதல் மரண தண்டனை விதிக்கப்பட்ட எவருக்கும் அது நிறைவேற்றப்படுவதில்லை. போதைப் பொருளை வைத்திருப்பவர்களுக்கும், கடத்துபவர்களுக்கும் அது பொருந்தும். சட்டப்படி 2 கிராமுக்கு அதிகமாக ஹெரோயின் வைத்திருப்பவருக்கு மரண தண்டனை கோரப்படலாம்.

இங்குள்ள சிறை முறைமையும், அதன் உள்ளேயே, அதாவது சிறையில் இருந்து கொண்டே போதை மருந்து கடத்தலை தொடர வழி செய்துள்ளதாகவும் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

சிறையில் இருந்து கொண்டே “வெல்லசுதா” போன்ற பிரபல போதை மருந்து கடத்தல்காரர்கள் நவீன தொலைபேசிகளை கொண்டு போதை மருந்தை கடத்தியுள்ளனர்.

அமைச்சரவை பேச்சாளர் டாக்டர் ராஜித சேனரட்ணவின் தகவலின்படி, இவரைப் போன்ற 19 பேர் மரணதண்டனை வழங்கப்பட்டு காத்திருக்கிறார்கள்.

ஊடகங்களின் வரும் தகவல்களின்படி, சிறைச்சாலை அதிகாரிகளும் இவர்களுக்கு உதவுவதாக தெரியவருகிறது. ஒரு அதிகாரி அவர்களின் பணத்தில் வீடே கட்டியுள்ளாராம். கைதிகளிடம் போதை மருந்தை விற்பதற்காக சிறைக்காவலர்களுக்கும் போதை மருந்து கொடுக்கப்பட்டுள்ளதாம்.


பணமும், போதை மருந்தும் சிறைகளில் எந்தவிதமான தடையும் இன்றி புழங்கியுள்ளன.

அதிகாரிகளும், காவலர்களும் இடைநீக்கம் செய்யப்பட்ட போதிலும் வணிகம் தடையின்றி தொடர்ந்துள்ளது.

ஆகவே சிறையில் இருந்துகொண்டே போதை மருந்து விற்கும் சிலருக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவது பலன் தராது. போதை மருந்து வணிகத்தை ஒழிக்க, முதலில்

தொடர்ச்சி... (பக்கம் -19 )

## அரங்கம் நிறுவனத்தின் விபுலானந்தர் ஆவணப்படம்



எமது அரங்கம் நிறுவனம் கடந்த வருடத்தில் தயாரித்து வெளியிட்ட, சுவாமி விபுலானந்தர் குறித்த முழு நீள ஆவணப்படம் தற்போது யூடியூப்பில் கிடைக்கிறது. எமது மக்களின் ஆய்வுத்தேவைகள் மற்றும் இளம் தலைமுறையினருக்கு எமது முன்னோடிகளை அறிமுகப்படுத்தும், எமது மண்ணின் மைந்தனின் பெருமையை பேசல் ஆகிய நோக்கங்களுக்காக எமது நிறுவனத்தால் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை இணையத்தில் காண விரும்புபவர்கள் https://www.youtube.com/watch?v=z-yqxdc7AXw என்ற இணைப்பில் இதனைப் பெறமுடியும்.

அன்புடன் -சீவகன் பூபாலரட்ணம்-







# வடக்கு, கிழக்கு வீடில்லாப் பிரச்சினையை தீர்க்க அரசு தவறிவிட்டது

வடக்கு கிழக்கு மக்களின் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் தவறி விட்டது என அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்காதது வருத்தமளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

தம்புள்ளை பிரதேசத்தில் செய்தி ஊடகங்களுடன் பேசுகையில் அமைச்சர் மனோ கணேசன் இதனைக் கூறியுள்ளார்.

# வடிச்சல் நீரில் நல்ல விளைச்சலைக் கண்ட விவசாயிகளை அரச அதிபர் பாராட்டினார்



மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்க வேண்டிய 1008 சிறிய குளங்களில் 220 சிறிய குளங்களை மாத்திரமே இதுவரை புனரமைத்திருப்பதாகவும், அதே போல குடிநீருக்கான செலவுகளையும் தாம் செய்ய வேண்டியிருப்பதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட வான் மாயவட்டைத் தெற்குக் கண்டத்தில், மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் நடராஜா சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற காலபோக வேளாண்மைச் செய்கை அறுவடை நிகழ்வில் கலந்துகொண்டு, உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு கமநலப் சேவைப் பிரிவில் 14 விவசாயக் கண்டங்களில் மொத்தம் 1400 ஹெக்டயர் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டது. இதில் மாயவட்டை தெற்குக் கண்டத்தில் 300 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அரசாங்க அதிபர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக விவசாயத்திற்கு முன்னுரிமை கெடுத்துவருகிறோம். அதே போல குடிநீருக்கும், கல்விக்கும் அதிக நிதிகளை அரசாங்கத்திடமிருந்து பெற்று அதனைச் செயற்படுத்த முன்வந்து கொண்டுவருகிறோம் என்று கூறினார்.

'இவ்வாறு வடிச்சல் நீரிலிருந்து குறிப்பிட்டளவு அறுவடையினைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. இருந்தாலும் விவசாயிகளாகிய நீங்கள் வெற்றிகரமாக இதனைச் செயற்படுத்திக் காட்டியிருக்கிறீர்கள்' என்று அவர் விவசாயிகளை பாராட்டினார்.

# சிறுமி துஷ்பிரயோகம் : தந்தை, தாய்க்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசபுரத்தில் தந்தை மற்றும் தாய் இணைந்து அவர்களது 11 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிபதி நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

வெல்லாவெளி கணேசபுரம் பிரதேசத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி தந்தை ஒருவர் தனது 11 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இந்த சம்பவம் தாய்க்கும் தெரிந்துள்ளது. இருந்தும் குறித்த தாய் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது கணவரை பாதுகாத்து வந்துள்ளார். இதனையடுத்து குறித்த சிறுமி வேறு கிராமத்தில் உள்ள தனது சகோதரியிடம் தனக்கு நடந்த கதியை தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சிறுமியின் சகோதரி அவர்களது வீட்டுக்கு பக்கத்திலுள்ள வீட்டிற்கு தெரியப்படுத்தியதையடுத்து பக்கத்து வீட்டார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்த 43 வயதுடைய தந்தையையும் உடந்தையாக இருந்த தாயையும் கைது செய்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்கள்.

# முன்பள்ளி பணியத்தின் பணிப்பாளராக எஸ்.சசிகரன்



மட்டக்களப்ப மாவட்ட முன்பள்ளி பணியகத்தின் பணிப்பாளராக மட்டக்களப்பினை சேர்ந்தவரும், மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தின் தலைவருமான ச.சசிகரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை கடந்த வெள்ளிக்கிழமை(6.7.2018) பொறுப்பேற்றக்கொண்டார்.

மட்டக்களப்ப புகையிரத வீதியில் உள்ள கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் பாலர் பாடசாலை பணியகத்தின் செயற்றிறனை மேம்படுத்தும் வகையில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகமவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளன.

மில்கோ நிறுவனத்தின் முகாமையாளராகவும், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவருமான ச.சசிகரன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு சமூக மட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருகோணமலையில் மூன்றாவது சர்வதேச விமான நிலையம்



இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமான நிலையம் ஒன்றையும் ஒரு கிரிக்கட் விளையாட்டரங்கையும் திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க இலங்கை அரசாங்கம் திட்டமிடுகின்றது.

வங்கக்கடலில் கிழக்கு வாயிலாக திருகோணமலையை மாற்றும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை திட்டமிடப்படுகின்றது.

இந்த பிராந்தியத்தில் திருகோணமலையை ஒரு சுற்றுலா மையமாக உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்து சமுத்திரத்தின் சுற்றுலா மற்றும் வணிக மையமாக இது மாற்றப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வங்கக்கடல் பிராந்திய நாடுகள் அடுத்த 20 வருடங்களில் கணிசமான வளர்ச்சியை பெறும் என்றும் அதற்கு ஏதுவாக திருகோணமலை 2050 அளவில் மாற்றப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மட்டக்களப்பில் புலிகளின் ஆயுதங்களை தேடி இரண்டாவது நாளாக வேட்டை

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் முன்னர் விடுதலைப் புலிகளின் முகாம் இருந்த பகுதியில் ஆயுதங்களை தேடி, இரண்டு நாட்களாக பொலிஸார் தோண்டியதாக வெல்லாவெளி பொலிஸார் கூறினர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள காந்திபுரம் பிரதேசத்தில் கடந்த வாரம் இரவு புதையல் தோண்டு நடவடிக்கை இடம்பெறுவதாக பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிசார் அங்கு சென்றபோது பொலிசாரைக்கண்டு புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தப்பி ஓடியுள்ளனர்

இதனையடுத்து அங்கு இருந்து 3 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மண்வெட்டி அலவாங்குகளை பொலிசார் மீட்டதுடன் அது தொடர்பான விசாரணையில் அந்த இடத்தில் முன்னர் விடுதலைப் புலிகளின் முகாம் இருந்ததாக தெரியவந்ததையடுத்து, அங்கு முன்னர் புலிகள் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகம் கொண்டனர்

அதனையடுத்தே நிலத்தை தோண்டும் நடவடிக்கை நடந்தது.

இதுவரை எந்த விதமான ஆயுதங்களும் மீட்கப்படவில்லை என்று தெரிகிறது.

# பிள்ளையான் : சிறையில் 1000 நாட்கள்



தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கைதான, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இதுவரை 1000 நாட்களைச் சிறையில் கழித்துள்ளார்.

11.07.2018 புதன்கிழமையுடன் ஆயிரம் நாட்களைத் தொடர்ச்சியாக விளக்கமறியல் சிறையில் அவர் கழித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில்; நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது அடையாளந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இச்சம்பவத்தில் அவரது மனைவி உட்பட சிலர் காயமடைந்தனர்.

கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் பிளவு ஏற்பட்டிருந்த கால கட்டத்தில் இந்த படுகொலை சம்பவம் நடந்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக் காலத்தில் செல்வாக்கு மிக்கவராக கருதப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாணசபைக்கான முதலாவது தேர்தலில் போட்டியிட்டு 2008 இல் முதலமைச்சராக தெரிவாகி 2012 வரை அந்தப் பதவியில் இருந்தார்.

# நாஜி ஆதரவு பெண்ணுக்கு ஆயுள் சிறை

ஜெர்மனியில் நாஜிக்களை ஆதரிக்கும் குழு ஒன்றைச் சேர்ந்த பீட் ஷேப்பே எனும் 43 வயதாகும் பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இன வெறியின் காரணமாக 10 கொலைகளில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் நிருபிக்கப்பட்டுள்ளது. அப்பெண் மற்றும் அவரது குழுவினர் நால்வரும் 2000 மற்றும் 2007க்கும் இடையே எட்டு துருக்கிய வம்சாவளியினர், ஒரு கிரேக்க நாட்டவர் மற்றும் ஒரு பெண் காவல் அதிகாரியைக் கொலை செய்தது 2011இல் கண்டுபிடிக்கப்பட்டது.



# அரசின் பலவீனமே பல பிரச்சினைகளுக்கு காரணம்

அடுத்தடுத்த நிகழ்வுகள் அதிர்ச்சியளிப்பனவாக இருக்கின்றன. அடுத்தடுத்த கொலைகள்! அதுவும் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டு நடத்தப்பட்டவை. கடந்த வாரத்தில் பத்திரிகைகளில் பதிவான கொலைகளில் சிங்கள பாடகி ஒருவரது கொலையைத் தவிர ஏனையவற்றில் பெரும்பாலானவை துப்பாக்கிகள் மூலம் நடத்தப்பட்டவை.

அவை குறித்த காட்சிகளும் இப்போது சிசிடிவி கமெராக்களின் துணையுடன் நேரடியாகவே வெளிவரத் தொடங்கிவிட்டதால், காட்சி ஊடகங்களில் அவை ஒலிபரப்பாகும் போது நெஞ்சு துடிக்கிறது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒரு சில தினங்களில் கொல்லப்பட்டதான ஒரு போர் நடந்த ஊராகத்தான் உலகெங்கும் பதிவாகியுள்ளது இலங்கை. ஐநாவும் அதனைக் கூறியுள்ளது.

ஆனாலும், இந்த தொடர் கொலைகள் பீதியை கிளப்பத்தான் செய்கின்றன. யார், எங்கு, எப்போது கொல்லப்படுவார் என்று உணர முடியாத ஒரு நிலை இங்கு காணப்படுகின்றது.

அதனைவிட இன்னுமொரு விடயமும் இங்கு முக்கியமானது. அதாவது, இங்கு நடந்த பல கொலைகளுடன் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களுக்கு தொடர்புள்ளதாக பொலிசாரே கூறுகிறார்கள்.

வெறுமனே கொலைகள் என்பதை விட கொலைகளுடனான போதைமருந்து கடத்தல்காரர்களுக்கான தொடர்பு என்பது பெரும் பயத்தை ஏற்படுத்துகிறது.

அண்மையில் பெருமளவில் போதை மருத்து பிடிபட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இலங்கைக்கு போதை மருந்தோ, கொலைகளோ, துப்பாக்கிகளோ புதியவை அல்லதான். ஆனால், அவற்றுக்கும் ஒரு முடிவு வேண்டுமல்லவா?

பொலிஸாரின் நடவடிக்கைகூட, ஒரு இடத்தில், ஒரு சம்பவம் நடந்த பிறகு, அந்த இடத்தில் சோதனை நடத்துதல் என்ற பாணியில் இருக்கிறதே ஒழிய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக, பாதுகாப்புணர்வை தருவதாக இல்லை.
மறுபுறம் பார்த்தால், அரசியலில் ஈடுபடும் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் போதைப் பொருள் கடத்தலுக்கும் தொடர்பு இருப்பதாக பொலிஸாரே கூறுகின்றனர்.

இந்த நிலைமை எப்படி பொதுமக்களுக்கு நம்பிக்கையுணர்வைத் தரும்?

போதை மருந்து கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்க அமைச்சரவை முடிவெடுத்துள்ளதாக அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். இந்த அறிவிப்பைக் கூட மக்கள் நம்பிக்கையுடன் பார்ப்பதற்கு


**பூபாலரட்ணம் சீவகன்**

பதிலாக, இவை பழிவாங்கலுக்கு பயன்பட்டு விடுமோ என்ற அச்சத்திலேயே பார்க்கத் தலைப்படுகின்றனர். அந்த அளவுக்கு, அரசாங்கம், பாதுகாப்பு படையினர் மீது மக்கள் நம்பிக்கையிழந்து போயுள்ளனர்.

அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா கூட பொலிஸார் மலிவான யுக்திகளை பயன்படுத்தி, பாதாள உலகைச் சேர்ந்தவர்களை ஒழிக்க முடியாது என்றும், பொலிஸார் நம்பகத்தன்மையுடன் செயற்பட்டால் மாத்திரமே அது சாத்தியம் என்றும் கூறியிருக்கிறார்.

இது பாதுகாப்புத் தரப்பினர் மீது அமைச்சருக்கு கூட நம்பிக்கை இல்லை என்பதை நேரடியாக காண்பிக்கிறது. இதற்கு மேலே யார் விமர்சிக்க முடியும்?

கடந்த வாரத்தில் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் குற்றச் செயல்கள் குறைவு என்ற வகையில் கூறப்பட்ட




இராஜாங்க அமைச்சர் ஒருவரின் கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அந்தக் கருத்தில் கூட விடுதலைப்புலிகளை மீளக்கொண்டு வரவேண்டும் என்ற பகுதிதான் சர்ச்சைக்குள்ளானதே ஒழிய, அவர்கள் காலத்தில் குற்றச் செயல்கள் குறைந்திருந்தது என்பது பெரிதும் விவாதத்துக்குள்ளாகவில்லை( அதிலும் விமர்சனம் உள்ளது என்பது வேறு விடயம்).

அதற்கு காரணம் அவர்கள் மீது, அவர்களது நிர்வாகத்தின் மீது இருந்த ஒருவித பய உணர்வு. தவறு செய்தால் கடுமையான தண்டனைக்கு உள்ளாவோம் என்ற பய உணர்வே அதற்கு காரணம்.

குற்றச்செயல்கள் தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என்று ஒரு தடவை குறைபட்டுக்கொண்ட முன்னாள் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூட, நாம் அழுத்தம் கொடுக்கும் வரை பொலிஸார் தானாக நடவடிக்கை எடுப்பதில்லை என்று குறைபட்டுள்ளார். அதாவது அரசியல் தலைமை கடுமையான அழுத்தத்தை தொடர்ந்து கொடுத்து, அவற்றை தொடர்ச்சியாக கண்காணிக்கும் போது மாத்திரமே பொலிஸார் உரிய நடவடிக்கையை எடுப்பார் என்று கூறியுள்ளார்.

அதாவது, நடவடிக்கை எடுக்காவிட்டால் பொறுப்புக்கூற வேண்டும் என்ற பய உணர்வு மாத்திரமே பொலிஸாரை நடவடிக்கை எடுக்கத் தூண்டும் என்பது இதன் பொருள்.

அதாவது அரசியல் தலைமை பலமாக இருந்து, அது
பொலிஸார் உட்பட அமுல்படுத்துபவர்களை அழுத்திக்கொண்டிருந்தால்தான் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் போலும்.

அதற்கு, முதலில் அரசியல் தலைமை பலமாக இருக்க வேண்டும். அதனை வழி நடத்தும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பலமாக இருக்க வேண்டும், மொத்தத்தில் ஆட்சி பலமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பொலிஸார் உரிய நடவடிக்கையை எடுக்க குற்றச் செயல்கள் குறைய வாய்ப்பிருக்கிறது.

இல்லாவிட்டால், மரண தண்டனை போன்ற கடுமையான சட்டங்களை மாத்திரம் கொண்டுவந்தாலும் பலன் கிடைக்குமா என்பது சந்தேகமே.

இப்போதெல்லாம் பலராலும் பேசப்படும் ஒருவிடயம்; மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் குற்றச் செயல்கள் குறைந்திருந்தன என்பதாகும்( அப்போதிருந்த வெள்ளைவான் கடத்தல்கள் இப்போது குறைவு என்பது வேறுவிடயம்). ஆனால், பாதாள உலக நடவடிக்கைகள், போதைப் பொருள் கடத்தல் அப்போது குறைவு என்பது அவர்களது வாதம். அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள நம்மால் முடியாவிட்டாலும் கூட, தற்போதைய பலமில்லாத ஒரு கூட்டு அரசில், போதை மருந்து கடத்தலும், கொலைகளும், பாதாள உலக நபர்களின் நடவடிக்கைகளும் அதிகரித்திருக்கின்றன என்ற ஒரு வாதமும் இங்கு முன்வைக்கப்படுகிறதே.

ஆகவே இது வரப்புயர... என்பதைப் போலத்தான். அரசு பலமாக இருந்து, ஆட்சி பலமாக இருந்து, அதிகாரிகள் மீதான அவர்களது வழிநடத்துகை பலமாக இருந்தாலே குற்றங்கள் குறையும், குற்றவாளிகள் ஒழிவார்கள். இல்லாவிட்டால், அதுவரை மக்கள் பயப் பீதியில்தான் வாழ்வார்கள்.

அரங்கம்

## அரங்கம் செய்திகள் நிறுவன வேலைவாய்ப்புகள்

வேகமாக வளர்ந்துவரும் அரங்கம் செய்திகள் நிறுவனத்தில் பின்வரும் பணிகளுக்கு ஆட்கள் தேவை.

- உதவி ஆசிரியர் (கொழும்பு மற்றும் மட்டக்களப்பு)
- விளம்பர பிரதிநிதிகள்
- அலுவலக உதவியாளர் (மட்டக்களப்பு மற்றும் கொழும்பு)
- வானொலி அறிவிப்பாளர்கள்
- வீடியோ படப்பிடிப்பாளர்கள்





முழு நேர / பகுதி நேர விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

ஊதியம் தகுதிக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி : முகாமையாளர், 227, பார் வீதி, மட்டக்களப்பு.
விண்ணப்ப இறுதித்திகதி ஆகஸ்ட் 05, 2018.

# கதிர்காமம் யாருக்குச் சொந்தம்?

## அரிய கதிர்காமத்தில் உரிய அபிராமன்!



வைகாசி, ஆனி மாதங்கள் வரை "சாப்பிட்டையா?" "குளிச்சியா?" என்பது போல எப்போதாவது சந்தித்துக்கொள்ளும் போது, கிழக்கிலங்கைத் தமிழ்க் கிராமங்களில் சாதாரணமாகக் கேட்கப்படும் இரு கேள்விகள் இருக்கின்றன. "எப்பயாம் சடங்கு தொடங்குது?", "எப்பயாம் கதிராமக் கொடியேத்தம்? நீ நடக்கிறதா?" முன்னையது கண்ணகி அம்மனோடு தொடர்பு கொண்டது. பின்னையது எதனோடு தொடர்புடையது என்று சொல்லத்தேவையில்லை.

கதிர்காமத்துக்கும் கிழக்கிலங்கைக்கும் உள்ள உறவு எந்த விதத்திலும் மறைக்க முடியாதது. அங்குள்ள பெரும்பாலான புகழ்பெற்ற கோவில்களுக்கும், அவற்றைச் சுற்றி உருவான ஊர்களுக்கும் காரணமாக இருந்தவர்கள் கதிர்காமப் பாதயாத்திரிகர்கள்

> **"கட்டகாமக் கிழவி கதிர்காமம் பாராது செத்தது போல"**

தான். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பலரும் கதிர்காமம் வருகை தந்தாலும் அங்கு செல்லும் யாத்திரிகர்களில் எண்ணிக்கையில் முறியடிக்க முடியாதவர்கள், கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர்களே. "கதிர்காமம் நடந்து போதல்" என்பதை, வருடத்துக்கொருமுறை தவறாமல் செய்யவேண்டிய காரியம் போல நியதியாக வைத்திருப்பவர்களை இங்கே காணலாம். குறிப்பிட்ட ஆண்டு 'நடந்து போக' முடியவில்லை என்பதற்காக கதறி அழுபவர்களையும் காணலாம். இக்கட்டுரையாளனின் மாற்றுமத நண்பனொருவன் "அப்பிடி அங்க என்ன இருக்கெண்டுடா அள்ளி விழுந்து கதிர்காமம் நடந்து போறேல்?" என்று வியந்து கேட்டதையும் இங்கு நினைவுகூரத்தான் வேண்டும்.

இந்த மாதம் கதிர்காமம் பற்றிய சுவையான பல செய்திகளையும், வரலாற்றுத் தகவல்களையும் இத்தொடரில் காண இருக்கிறோம். எடுத்த எடுப்பிலே வரலாற்றைப் பார்க்காமல், இந்த வாரம் நாம் காண இருப்பது, பாதயாத்திரை தொடர்பான பாரம்பரிய நடைமுறைகளை!

கதிர்காம யாத்திரை போகவேண்டுமென்றால், முருகனின் அழைப்பு இருக்கவேண்டும் என்பார்கள். பலர் கனவில் "அழைப்பு" கிடைத்தோ, அல்லது தெய்வாதீனமாக சந்தர்ப்பம் கிடைத்தோ தான் யாத்திரை சென்றிருக்கிறார்கள். போகவேண்டும் போகவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் பலருக்கு, கடைசி நேரத்தில் வேறேதாவது தவிர்க்கமுடியாத வேலை வந்துவிடும். இப்படி ஆண்டுக்கணக்காய் "வாற வருசம் கட்டாயம் நடப்பன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் "திருநாளைப்போவார்" பலரை உங்கள் நண்பர்களிலும் கண்டிருக்கலாம். உண்மையில் பிற்போடுகின்ற மனநிலை உடையவர்கள், வைராக்கியம் இல்லாதவர்கள் அந்த யாத்திரையைச் செய்யமுடியாது என்பதற்கு உளவியல் ரீதியாகச் சொல்லப்படுகின்ற காரணம் தான் "அழைப்பு" என்பது. அழைப்பு இல்லாதவர்களை அல்லது அழைக்கத் தகுதி பெறாதவர்களை கிண்டல் செய்வதற்காகவே "கட்டகாமக் கிழவி கதிர்காமம் பாராது செத்தது போல" என்ற பழமொழியை சொல்வார்கள். கட்டகாமம் கதிர்காமத்துக்கு மிக அருகிலுள்ள ஒரு ஊர்.

கதிர்காமப் பாதயாத்திரைக்கென்று சில மரபுகள் உள்ளன. காவிநிற ஆடை தரித்து தவக்கோலத்திலேயே யாத்திரை செய்யவேண்டும். முன்பெல்லாம், வெண்ணிறக் கதர் ஆடைகளை வாங்கிவந்து, வீதியோரங்களில் வளரும் "காவிக்காய்" எனும் தாவரத்தின் விதைகளை இடித்துப் பிழிந்து ஊறவைத்து, காவியாடைகளைத் தயார் செய்வார்களாம். இப்போது காவிநிற வேட்டி, ஆடைகள் கிடைப்பதால் சிக்கல் இல்லை. அடுத்து முக்கியமானவை திருநீறும் உருத்திராக்கமும். உருத்திராக்கத்தை இங்கு "தாவணக்க மாலை" என்று தான் சொல்கிறார்கள். உருத்திராக்கத்தைக் குறிக்கும் தாழ்வடம், அக்கமாலை ஆகியவை இணைந்து உருவான சொல் அது. தாவணக்கம் என்பது தூய உருத்திராக்கம் அல்ல என்று சொல்லும் சிலர், அது உருத்திராக்க இனத்தைச் சேர்ந்த வேறொரு தாவரம் என்கின்றார்கள். முதியவர்களிடம் கேட்டால், கூமுனை – வியாளைப் பகுதிகளில் தாவணக்கங்காய் காய்க்கும் மரங்களைக் காட்டுவார்கள்.

தாவணக்கமாலையை, நம்மோடு யாத்திரை வரும் மூத்த பெரியசாமி ஒருவர், அல்லது நம் குடும்பத்தில் பெரியவர், நமக்கு அணிவிப்பதோடே கதிர்காம யாத்திரை ஆரம்பிக்கின்றது. இதை அணிந்த பின்னர், ஒருவரை ஒருவர் "சாமி" என்றே அழைக்கவேண்டும் என்பது நியதி. அப்பாச்சாமி, அம்மாச்சாமி, மாமாச்சாமி, தாய்மார்சாமி என்பதும் சின்னசாமி, பெரியசாமி என்பதும் யாத்திரை காலம் முழுக்க நாம் காது குளிரக் கேட்கக்கூடிய சொற்கள்.

யாத்திரையில் இளைஞர் – யுவதிகள், சிறுவர்கள் பங்குகொள்வது மிக அண்மித்த கால வழக்கம் தான். முன்பெல்லாம், அறுபதை அண்மித்தவர்கள், பெரும்பாலும் தம்பதியராகத் தான் கதிர்காமம் யாத்திரை செய்வது வழக்கமாக இருந்ததாம். போக்குவரத்து வசதி இல்லை. வசதியுள்ளவர்கள் மாட்டுவண்டியில் பொருட்களைக் கட்டி, பின்னே நடந்துசெல்வார்கள். திரும்பிவரும்போது, கதிர்காமக் கடைகளில் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு மாட்டுவண்டியிலேயே இலகுவாகத் திரும்பலாம்; அதற்கும் வசதியில்லாதவர்கள் திரும்பி வருவதும் பாதயாத்திரையாகத் தான்.

தொற்றுநோய், வனவிலங்குகளின் அச்சுறுத்தல் அதிகம் இருந்த காலம் அது. செல்பவர்கள் திரும்பி வருவர் என்பதற்கு

> **"காவிக்காய்" எனும் தாவரத்தின் விதைகளை இடித்துப் பிழிந்து ஊறவைத்து, காவியாடைகளைத் தயார் செய்வார்களாம்.**

எவ்வித உத்தரவாதமும் இல்லை. இறந்தால் அங்கேயே புதைத்துவிட்டு, மீதிப்பேர் யாத்திரையைத் தொடர்வார்களாம். எனவே, யாத்திரை செல்ல முதனாள் வீட்டில் "அமுது" கொடுத்து உறவினர் எல்லோருக்கும் அன்னதானம் கொடுத்துத்தான் யாத்திரை செல்பவர்கள் பயணத்தை ஆரம்பிப்பார்களாம். இடையிலேயே இறந்துபோனால், அந்தியேட்டிக் கிரியைகள் நிகழாமல் ஆன்மா தவிக்கக்கூடாது என்பதற்குத் தான் இந்த முன்னேற்பாடு. யாத்திரைக்குச் செல்லும் அவர்களுக்கு விடைகொடுக்க ஊரே கண்ணீரும் கம்பலையுமாக திரண்டு

**மைங்கணான் மகிழறிவன்**

நிற்குமாம். அவர்கள் வெற்றிகரமாக யாத்திரையை முடித்துத் திரும்பி வந்தால், அன்று இன்னொரு திருவிழா நாள். மீண்டும் அன்னதானம் கொடுத்து கொண்டாட்டம் பலமாக இருக்கும் என்கிறார்கள், அவற்றை அனுபவித்த முதியவர்கள்.

இன்றெல்லாம் கதிர்காமப் பருவகாலத்தில், கிழக்கின் அனைத்து முக்கிய நகரங்களிலிருந்தும் உகந்தை மற்றும் கதிர்காமத்துக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறது. பாதயாத்திரையானது வடக்கே செல்வச்சந்நிதியில் ஆரம்பித்து கீழைக்கரையோரமாகவே வந்தாலும், மட்டு

> **முன்பெல்லாம், அறுபதை அண்மித்தவர்கள், பெரும்பாலும் தம்பதியராகத் தான் கதிர்காமம் யாத்திரை செய்வது வழக்கமாக இருந்ததாம்**

– அம்பாறை அடியவர்களில் பலர், உகந்தை வரை வாகனத்தில் சென்று அங்கிருந்தே பாதயாத்திரையை ஆரம்பிக்கிறார்கள். 1950களில் எல்லாம், சொந்த ஊரிலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து வரும் யாத்திரிகர்களுடன் இணைந்துகொள்வார்களாம். என் சிறுவயதில், உகந்தைக்கு பதினாறு கிலோமீற்றர் வடக்கே உள்ள பாணமைக்கிராமத்திலேயே பாதயாத்திரை ஆரம்பமானதைக் கண்டிருக்கிறேன்.

பாணமை இன்று சிங்களப்பெரும்பான்மைக் கிராமம். அதன் பழைய பெயர் பாணகை. இன்றும் முதியவர்களில் சிலர் அவ்வாறு பாணமையை அழைப்பதைக் காணலாம். அது "பாலநகை" என்பதன் திரிபு என்கிறார்கள். அதற்கு மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் சுவையான கதை ஒன்று சொல்லப்படுகிறது. மட்டக்களப்பின் தென்பிராந்தியமான உண்ணாசகிரியை ஆண்ட மனுநேய கயவாகு மன்னனுக்கு பிள்ளைப்பேறு இல்லை. கடலில் ஒரு பெண்குழந்தை பேழையில் வந்து அடைந்திருப்பதாக அவனுக்குச் செய்தி வருகிறது. அதைச்சென்று அவன் பார்க்க கலகலவென சிரிக்கிறாள் அந்தப்பாலகி. அந்தக்குழந்தையின் அழகிலும் இராஜகலையிலும் மயங்கும் மன்னன் அது நகைத்த அந்த இடத்துக்கு "பாலநகை" என்று பெயர்சூட்டி அக்குழந்தையை "ஆடக சௌந்தரி" என்றபெயரில் வளர்க்கிறாள். ஆடக சௌந்தரி பின்னாளில் கிழக்கிலங்கையின் முக்கியமான வரலாற்றுப்பாத்திரமாக வளர்கிறாள். கோணேச்சரத்துடன் தொடர்புடைய குளக்கோட்டனின் நாயகியாகச் சொல்லப்படுபவள் இவளே.

பாணமையைத் தாண்டி சுமார் அரைமணி நேரம் காட்டுப்பாதையில் பயணித்ததும், ஒன்பது கிலோ மீற்றர் தொலைவில் வருகின்றது சன்னியாசி மலை எனும் சிறிய குன்று. அதன் அடிவாரத்தில் பிள்ளையார் சிலை வைத்து சிற்றாலயம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வழியாகப் பயணிப்பவர்கள் அங்கு அவல் 'புரட்டி' படைத்து வணங்குவது வழக்கம்.

சன்னியாசி மலைக்கும் கதை இல்லாமலில்லை. வள்ளியைக் மணம் புரிந்து முருகன் கதிர்காமத்திலேயே தங்கிவிட்டதை அறிந்த தெய்வானை அம்மையார், அவரை அழைத்து வருமாறு கூறி, கலியாணகிரி, சன்னியாசி என்னும் இரு துறவியரை அனுப்பிவைத்தாராம். வரும்


தொடர்ச்சி... (பக்கம் -23 )



# தமிழ்-முஸ்லிம் சமூகத்தவரிடையே நல்லிணக்கத்திற்கான வகிபாகம் பகுதி 1

## எழுத்தாளர்களின் பங்களிப்பும் பணிகளும்

*(அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பனில் நடைபெற்ற நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட உரை)*



கலாநிதி அமீர் அலி

*( பொருளியல்துறை - மேர்டொக் பல்கலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா)*

இத்தலைப்பிலே ஒரு பெரும் சிக்கலுண்டு. அதனைத் தெளிவுபடுத்துதல் முதலில் அவசியம். தமிழ் என்பது ஒரு மொழியின் பெயர். முஸ்லிம் என்பது ஒரு மதத்தவரின் பெயர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அனைவரும் மொழிவாரியாக நோக்கின் தமிழரே. எனவே தமிழரென்ற பெயரை மொழிவாரியாக மட்டும் உபயோகப்படுத்தினால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள் மட்டுமல்ல அம்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட அனைவருமே தமிழராகின்றனர்.

அதேபோன்று இஸ்லாத்தைப் பின்பற்றும் எவ்வினத்தவராயினும் அவர்கள் முஸ்லிம்களே. ஆகவே, தமிழரென்பது எவ்வாறு ஒரு தனிப்பட்ட இனத்தவருக்குமட்டும் சொந்தமான பெயராக இருக்க முடியாதோ அதேபோன்று முஸ்லிம் என்பதும் ஒரு தனிப்பட்ட இனத்தவரின் பெயராக இருக்க முடியாது.

இதனைத் தெளிவாகப் புரிந்துகொண்டவர்கள் தமிழ்நாட்டு முஸ்லிம்கள். ஆகவேதான் அவர்கள் தங்களைத் தமிழரென்று மனங்கூசாமல் அழைக்கின்றனர். அத்துடன் நின்றுவிடாமல் இன்னுமொரு படியேறி தாம் திராவிட முஸ்லிம்கள் என்றும் கூறிக்கொள்கின்றனர். எனவே அவர்கள் இனத்தால் திராவிடர், மொழியால் தமிழர், மதத்தால் முஸ்லிம்கள். இதனாலேதான்



ஒரு முறை அண்ணாத்துரை அவர்கள் தமிழக முஸ்லிம்களை "காலணாக்கள்" என வருணித்தார். காலணா இன்றி முழு அணா எவ்வாறு உருவாக முடியாதோ அதேபோன்று முஸ்லிம்கள் இல்லாமல் தமிழகம் இயங்கமுடியாதென்பதை அவருடைய புலமைப் பாணியிலே சுட்டிக்காட்டினார்.

இதனோடு ஒப்பிடுகையில் ஏன் தமிழையே தாய்மொழியாகக் கொண்ட இலங்கைவாழ் முஸ்லிம்கள் தம்மைத் தமிழரென இனங்காணத் தயங்குகின்றனர்? அதேவேளை ஒரு திராவிடரோ சிங்களவரோ சீனரோ இஸ்லாத்தைத் தழுவிவிட்டால், அவர் தன்னை முஸ்லிமென்று அழைப்பதில் எந்தத் தயக்கமும் காட்டுவதில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை இச்சிக்கல் ஏன் தெளிவடையாமல் ஒரு தீராத பிரச்சினையாகவும் நல்லிணக்கத்தைக் குலைப்பதொன்றாகவும் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரிடையே இன்றுவரை நிலைத்திருக்கின்றது?

தமிழ்ப் பேசும் மக்கள் என்ற போர்வைக்குள் முஸ்லிம்களை உள்ளடக்கியமை ஓர் அரசியல் உபாயமேயன்றி அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு வழியல்ல. முஸ்லிம்களின் தயக்கத்துக்குரிய காரணங்களை ஆராய்ந்தபின்னர் எழுத்தாளர்களின் பங்களிப்பையும் பணிகளையும்பற்றி விபரிக்கலாம்.

அதற்கு முன்னர் இத்தலைப்புக்குள் நல்லிணக்கம் என்ற ஒரு வார்த்தையும் இருக்கின்றது. இந்த நல்லிணக்கம் தமிழுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலா தமிழரென்ற இனத்துக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலா என்பதை ஆராயின் தமிழுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நல்லிணக்கம் அன்றுமிருந்தது, இன்றுமிருக்கிறது, இன்னுமிருக்கும். ஆனால், இந்த நல்லிணக்கம் எந்த அளவுக்கு ஆழமானது என்பதிலும் ஒரு தெளிவில்லாமல் இருக்கிறது. இன்று இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமின்றி சிங்களப் பகுதிகளுக்குள் வாழும் முஸ்லிம்களும் தமிழையே தாய்மொழியாகக் கொண்டுள்ளமையையும், அம்முஸ்லிம்களின் மத்தியிலிருந்து அற்புதமான பல தமிழிலக்கியப் படைப்புகள் ஆண்டுதோறும் வெளிவந்து கொண்டிருப்பதையும், மேலும் அவர்களின் மார்க்கச் சொற்பொழிவுகளெல்லாம் தமிழ் மொழியிலேயே பள்ளிவாசல்களில் நடைபெறுகின்றன என்பதையும் நோக்குகையில் தமிழுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயுள்ள நல்லிணக்கம் காலத்தையும் வென்றதொன்று என்பதை மறுக்க முடியாது.

### ஒன்பது மாகாணங்களில் தமிழ் வளர்ப்போர்

---

1970களில் கல்வி மந்திரியாக இருந்த பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் மட்டக்களப்பில் ஒரு பொது மேடையிலே உரையாற்றியபோது அங்கு குழுமியிருந்த இந்து, கிறிஸ்தவத் தமிழர்களை நோக்கி, "நீங்கள் இரண்டு மாகாணங்களில் தமிழை வளர்க்கிறீர்கள், நாங்களோ ஒன்பது மாகாணங்களிலும் வளர்க்கிறோம்" என்று பெருமையுடன் பேசியதை நான் கேட்டேன். அதுமட்டுமன்றி, இன்றும்கூட ஒரு தனிச் சிங்களக் கிராமத்திலே ஒரு தமிழ்ப் பத்திரிகையையோ புத்தகத்தையோ பலரும் கேட்கும்படியாக ஒருவர் குரலெழுப்பி வாசிப்பாராயின் அவர் ஒரு முஸ்லிமாகத்தான் இருப்பார். இவ்வாறு தமிழ் மொழியுடன் இரண்டறக் கலந்து வாழும் இம்முஸ்லிம்கள் ஏன் தம்மை மொழிவாரியாகவேனும் தமிழரென அழைப்பதற்குத் தயங்குகின்றனர்? இது ஒரு புதிராகத் தோன்றவில்லையா?

இந்தப் புதிருக்கு விடை காணவேண்டுமானால் தமிழுக்கு முஸ்லிம்களிடையே என்ன அந்தஸ்து நிலவுகின்றதென்பதை முதலில் விளங்கவேண்டும். இலங்கைக்குள் இஸ்லாம் புகுந்த நாள் தொடக்கம் இன்றுவரை அரபு மொழியே இஸ்லாத்தின் மொழி. ஆதலால் அந்த மொழியின் ஸ்தானத்தில் வேறெந்த மொழியையும் உயர்த்திவைக்க முடியாதென்ற ஒரு கொள்கையை பரம்பரை பரம்பரையாக முஸ்லிம் மதத் தலைவர்கள் போதித்து வந்துள்ளனர். இதனாலேதான் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து வெளிவந்த எத்தனையோ இஸ்லாமியத் தமிழ் நூல்கள் அரபுத்தமிழ் என்ற ஒரு புதிய லிபியில் எழுதப்பட்டன. அது எழுத்துவடிவில் அரபி, ஓசைவடிவில் தமிழ். இன்று அந்த லிபி வழக்கிலில்லை. என்றாலும்கூட மதத்தலைவர்களின் தவறான ஒரு போதனையால் தமிழரென்ற இனத்துக்குள்ள தமிழ்ப்பற்று தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களுக்கு இல்லையென்றே கூறுவேன்.

இதனாலேதான் 1950களில் மொழிப் பிரச்சினை தலைதூக்கியபோது முஸ்லிம் தலைவர்கள் எந்தத் தயக்கமுமின்றிச் சிங்களத்தை ஆதரித்தனர். சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியபோது ஒரு முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதி அரபியிலே அந்த எழுத்தை எழுதி மோட்டார் வாகனங்களில் ஒட்டுமாறு தம் முஸ்லிம் ஆதரவாளர்களைத் தூண்டினார். முஸ்லிம் வைதீக மதவாதிகளைப் பொறுத்தவரை தமிழோ சிங்களமோ ஆங்கிலமோ, அரபி தவிர்ந்த வேறெந்த மொழியோ, அவையெல்லாம் நிச்சயமற்ற இந்த உலக வாழ்வுக்கு மட்டுமே வேண்டியவை. அரபு மொழி மட்டுமே இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் ஒரு மொழி என்ற கொள்கை இன்றும் பரவலாக நிலைத்திருப்பதால், தமிழை முஸ்லிம்கள் தாய்மொழியாகக் கொண்டிருந்தபோதும்கூட அவர்களது தமிழ் மொழிப்பற்று ஆழமானதொன்றல்ல என்பதே எனது வாதம். முஸ்லிம்கள் அரபு மொழியையே கற்கவேண்டும், பேசவேண்டும், எழுதவேண்டும் என்ற பிரச்சாரம் 1980களுக்குப்பின் வைதீகவாதிகளால் பல நாடுகளில் முடுக்கிவிடப்பட்டுள்ளதை இச்சந்தர்ப்பத்தில் மறத்தலாகாது.

எனவே, மொழிவாரியாக நோக்கினும் இனவாரியாக நோக்கினும் நல்லிணக்கம் என்பது தமிழரென்ற ஒரு தனி இனத்துக்கும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களுக்குமிடையே ஒரு பிரச்சினையாக இலங்கையில் தோற்றமெடுத்துள்ளதில் ஆச்சரியமில்லை. இது ஒரு கசப்பான உண்மையென்பதை யாரும் மறுக்கமுடியாது.

இது தொடர்பாக இன்னுமொரு கேள்வியையும் முன்னிலைப்படுத்த வேண்டியுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சிங்களவரும், தமிழரும், முஸ்லிம்களும் மிகநெருக்கமாகவும் பரஸ்பர நல்லிணக்கத்துடனும் வாழ்ந்துவந்த இலங்கையில் எப்போதிருந்து அந்தப் பரஸ்பரச் சூழல் மாறத்தொடங்கியது? குறிப்பாக தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஆயிரமாண்டுகளாக நிலவிவந்த நல்லிணக்கம் எப்படி எங்கே யாரால் நிலைகுலைக்கப்பட்டது? இதற்குரிய விடைகளை விளங்காமல் நல்லெண்ணெத்தை எப்படி வளர்ப்பதென்பதைத் தெளிவாக ஆராய முடியாது. அந்த விடைகளைக் காண வரலாற்றின் பக்கங்களைப் புரட்டுவது அவசியம்.

அவ்வாறு புரட்டும்போது தோன்றுகின்ற ஒரு முக்கிமான வரலாற்றுண்மையை இங்கே சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. இலங்கை முஸ்லிம்கள் ஒரு கலப்பினத்தவர். ஆரம்பத்தில் அரேபியத் தீபகற்பத்திலிருந்தும், பாரசீகத்திலிருந்தும் அவர்களின் மூதாதையர் இலங்கைக்கு வந்திருந்தாலும் காலவோட்டத்தில் பெரும்பாலான முஸ்லிம்கள் இந்திய உபகண்டத்திலிருந்தே வந்து குடியேறியுள்ளனர்.

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் இலங்கையைக் கைப்பற்றியபோது வருடந்தோறும் 500 அல்லது 600 முஸ்லிம்களாவது அங்கிருந்து வந்தனரென்று ஒரு போர்த்துக்கீச வரலாற்றாசிரியர் கூறியுள்ளார். பின்னர், பதினேழாம் நூற்றாண்டில் ஒல்லாந்தராட்சி தொடங்கியபோது இந்தோனேசிய முஸ்லிம் குடும்பங்கள் பல அங்கிருந்து ஒல்லாந்தரால் வெளியேற்றப்பட்டு இலங்கையிலே குடியேற்றப்பட்டனர். ஆகவே, இலங்கை முஸ்லிம்கள் அரேபிய-பாரசீக-இந்திய-மலாய குருதிக் கலவையால் உருவாகிய ஒரு கூட்டம். இது தந்தையர் வழியாக முஸ்லிம்களின் பூர்வீகத்தைக் கிளறும்போது தோன்றும் ஒருண்மை. ஆனால் தாய்வழியிலே அப்பூர்வீகத்தைக் கிண்டினால் வேறோர் உண்மை வெளிவரும். அதாவது ஆதியிலே வந்து குடியேறிய முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் ஆண்களே.

அவர்கள் குடும்பங்களாக தாய், மனைவி, மக்களுடன் வந்து குடியேறவில்லை. மாறாக, இங்குள்ள சிங்கள, தமிழ், முக்குவ, பெண்களைத் திருமணம் செய்தே தமது குடும்பங்களைப் பெரும்பாலும் பெருக்கியிருக்க வேண்டும். எனவே இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை ஆண்வழியில் நோக்குகையில் அது மத்திய கிழக்கிலோ, இந்திய உபகண்டத்திலோ, மலாயதீவுக் கூட்டுக்குள்ளேயோ போய்முடியலாம். ஆனால், தாய்வழியில் நோக்குகையில் அது ஒரு சிங்களத்தியிலோ தமிழச்சியிலோதான் முடிவடையும். அவ்வாறாயின் இலங்கை முஸ்லிம்கள் அங்குவாழ் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் மச்சான்களும் மாமன்களுமாகின்றனரல்லவா?

இதை ஏற்றுக்கொண்டால் பொது பல சேனையும், சிஙஹ லேயும், யாழ்நகரிலே புதிதாக உருவாகத் துடிக்கும் சிவ சேனையும் முஸ்லிம்களை நோக்கி, " நீங்கள் அரேபியாவுக்குச் செல்லுங்கள் " என்று கூறுவதில் ஏதேனும் அர்த்தமுண்டா? இலங்கை இன்று எதிர் நோக்கும் பேரினவாதச் சூழலில் தமிழ் - முஸ்லிம் நல்லிணக்கத்தைப்பற்றிக் கலந்துரையாடும் நாம் இந்த வரலாற்றுண்மையை மனதிற் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# நடந்தாய் வாழி களனி கங்கை ...... அங்கம் 09

# எங்கள் தேசத்தின் தார்மீகத்தலைவர்(?) பிறந்த இல்லத்தில் ஒரு நாளிதழின் நெடும்பயணம்!

களனி கங்கை தீரத்தில், இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் 1943 ஆம் ஆண்டு நடந்த சட்ட சபைத்தேர்தலில் ஒருவர் வெற்றிபெற்றார். குறிப்பிட்ட களனி பிரதேசத்திலிருந்து முதல் முதலாக அவர் தெரிவாகும்போது அவரது வயது 37. இலங்கையில் நீதித்துறை சார்ந்த ஒரு பெரியவருக்கும் செல்வந்த குடும்பத்திலிருந்து வந்த ஒரு பெண்மணிக்கும் முதலாவது ஆண் குழந்தையாக பிறந்தவர்தான் அந்த களனி தொகுதியை பின்னாளில் பிரதிநிதித்துவப்படுத்தியவர்.



1977 Cabinet of Sri Lanka

அவர் பிறந்த இல்லம் எது...? என்பதைச் சொன்னால் எவருக்கும் ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருக்கலாம். ஆனால், அதுதான் உண்மை! அந்த இல்லம் கொழும்பு வடக்கில், களனி கங்கைக்கும் ஆமர் வீதிக்கும் நடுவில் வரும் கிராண்ட்பாஸ் வீதியில் 185 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது.

இன்றும் நீங்கள் அந்த இல்லத்தின் முகப்பினை பார்க்கலாம். அந்த இல்லத்தில், நீதிக்கும் செல்வச்செழிப்பிற்கும் பெயர் பெற்ற அந்தக்குடும்பம் வாழ்ந்த காலத்தில் 1906 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி பிறந்த குழந்தையின் பெயர் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்தனா.

இவரை ஜே.ஆர். எனவும் ஜே.ஆர். ஜெயவர்தனா எனவும் அழைப்பர். 1977 இல் நடந்த பொதுத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றதையடுத்து, தார்மீக சமுதாயம் அமைப்பதுதான் தனது நோக்கம் என்றும் சொல்லி, அதனை தனது தாய் மொழியில் தர்மிஷ்ட சமாஜய என வர்ணித்தார். ஆனால், அந்த தார்மீக ஆட்சியில் நடந்த பல சம்பவங்களை பார்க்கும்போதும், அகில இலங்கை எங்கும் நிகழ்ந்த வன்முறைகள், தீவைப்புகள், படுகொலைகள் அனைத்தையும் சீர்தூக்கிப்பார்க்கும்போதும், அதுதான் அவர் கனவு கண்ட தார்மீக சமுதாயமா..? எனக்கேட்கத்தோன்றும்.

அதனால் அவரது அரசியல் எதிரிகள் அவரை "மிஸ்டர் தர்மிஸ்டர்" எனவும் அழைத்தனர். பதினொரு பிள்ளைகளில் மூத்த புதல்வனாக அவர் பிறந்த இல்லம்தான் ஏறக்குறைய 86 ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் வீரகேசரி நாளிதழ் வெளியாகும் கட்டிடம்!

இலங்கை பிரித்தானியரின் ஆளுகைக்குள் இருந்த காலப்பகுதியில் பிறந்திருக்கும் ஜே.ஆர்., ஒரு கத்தோலிக்க குடும்பப் பின்னணியை கொண்டிருந்தவர். அவரது பெயரிலிருந்தே அதனையும் தெரிந்து கொள்ளமுடிகிறது. அவர் மட்டுமல்ல, சொலமன் டயஸ் பண்டாரநாயக்கா, ஃபீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரும் கத்தோலிக்கப் பின்னணி கொண்டிருந்தவர்கள்தான்.


ஜே.ஆரின் அரசியல் பிரவேசம் 1938 இல் தொடங்குகிறது. இலங்கை தேசிய காங்கிரஸில் இணைந்து தீவிரமாக அரசியலில் ஈடுபட்டு, முதலில் புதுக்கடை வட்டாரத்திலிருந்து கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவாகி, அதன் பின்னர் களனி சட்டசபைத்தொகுதியின் பிரதிநிதியாக வந்தார்.

சட்டசபை உறுப்பினராக, சுதந்திரத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக, யூ. என்.பி. அரசுகளின் பதவிக்காலங்களில் நிதியமைச்சராக, இராஜாங்க அமைச்சராக, அக்கட்சி தோல்வி கண்டபோது 1970 இல் எதிர்க்கட்சித்தலைவராக, பின்னர் 1977 இல் அறுதிப்பெரும்பான்மையுடன் வென்றபோது முதலில் பிரதமராக அதனையடுத்து நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியாக வளர்ந்தவர். அந்திம காலத்தில், ஜனாதிபதி பதவிக்காலம் முடிந்ததும், அமைதியாக அரசியலை விட்டு ஒதுங்கி, 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி மறைந்தார்.

அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி, மேற்கொண்ட நடவடிக்கைகள் இலங்கை அரசியலில் மிகுந்த கவனத்திற்குரியவை. அதிசிறந்த ராஜதந்திரி. அதிகம் பேசமாட்டார். ஆனால், அவர் வாய்திறந்தால் அங்கிருந்து கொட்டும் வார்த்தைகளில் பழுத்த அனுபவம் பேசும். அதனால் பாரதப்பிரதமர் இந்திராகாந்தி முதல் பல உலகத்தலைவர்கள் அவரை " நரி" எனவும் அழைத்துள்ளனர்.




எனினும் பண்டாரநாயக்கா போன்று அவருக்கு தேசியத்தலைவர் என்ற மகிமை கிட்டவில்லை. எனினும் அவர் ஏனைய தலைவர்கள் போன்று வாரிசு அரசியலை தனது குடும்பத்திற்குள் நுழைக்கவில்லை. டீ. எஸ். சேனாநாயக்காவின் சகோதரர் ஆர். ஜீ. சேனாநாயக்கா, புதல்வர் டட்லி சேனாநாயக்கா, பேரன் ருக்மன் சேனாநாயக்கா ஆகியோரும், பண்டாரநாயக்கா குடும்பத்திலிருந்து



ஜே.ஆர்.ஜெயவர்தனா

அவரது மனைவி ஸ்ரீமாவோ மற்றும் மகள் சந்திரிக்கா, அவரது கணவர் விஜயகுமாரணதுங்க, மகன் அநுரா பண்டார நாயக்கா ஆகியோரும், பிரேமதாசாவின் குடும்பத்திலிருந்து சஜித் பிரேமதாசா, மகிந்த ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து முதலில் ஜோர்ஜ் ராஜபக்ஷ, பின்னர் சாமல், சகோதர்கள் கோதா, பஸில், மகன் நாமல் ஆகியோர் அரசியல் பிரவேசம் செய்தார்கள்.

ரஸஞானி

ஜே.ஆர். ஜெயவர்தனாவின் துணைவியார் எளிமையாக வாழ்ந்தவர். மகன் ரவி ஜெயவர்தனாவை அரசியல் வாரிசாக்காமல், ஒரு விமானியாக்கி, போர்க்காலத்தில் விசேட அதிரடிப்படையை உருவாக்கும் சூத்திரதாரியாக்கினார்.

அமரர் பண்டாரநாயக்காவின் நினைவாக கொழும்பு 7 இல் சீன அரசாங்கம் பிரமாண்டமான சர்வதேச மாநாட்டு மண்டபம் அமைத்துக்கொடுத்திருக்கிறது. தனக்குப்பின்னர் தனது நினைவாக தான் நீண்ட காலம் அரசியல் செய்த தேசம் ஏதாவது நினைவு மண்டபம் அமைத்தால், அதற்கு தான் பிறந்த 185இ கிராண்ட் பாஸ் வீதி இல்லத்தையே தெரிவுசெய்யவேண்டும் என்ற கனவும் விருப்பமும் ஜே.ஆரிடம் குடியிருந்தது.

அந்த இல்லம் வீரகேசரி பத்திரிகை வெளியிடும் நிறுவனமாக மாறியதற்கும் கதைகள் இருக்கின்றன. இந்தியா - தமிழ்நாட்டில் தனவணிகர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் செறிந்து வாழ்ந்த செட்டி நாட்டு மண்ணில் ஆவணிப்பட்டி என்ற கிராமத்தில் பிறந்து, வளர்ந்து கொழும்புக்கு வர்த்தகம் செய்யவந்திருக்கும், பெரி. சுப்பிரமணியம் செட்டியார், 1930 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி வீரகேசரி என்ற பத்திரிகையை வெளியிட்டார். அவரது புதல்வர்களின் பெயர்கள்: அரசகேசரி, வீரகேசரி.

தங்கள் பிள்ளைகளின் பெயர்களில் வீடு அமைப்பது, வர்த்தக நிலையங்கள் தொடங்குவது, பத்திரிகை - இதழ்கள் வெளியிடுவது முதலான கலாசாரம் அனைத்து இனத்தவர்களிடமும் இருக்கிறது.

செட்டியாரின் வீரகேசரி, தொடக்கத்தில் தமிழ் தனவணிகர்களின் ஸ்தாபனங்கள் படிப்படியாக தொடங்கிய கொழும்பில் செட்டியார் தெரு என இன்றும் அழைக்கப்படும் வீதியில்தான் ஒரு கட்டிடத்தில் வெளியானது.

ஒரு பத்திரிகை காரியாலயம் இயங்குவதாயின், ஆசிரிய பீடம், அச்சுக்கோப்பாளர் பிரிவு, அச்சு இயந்திரப்பிரிவு - ஒப்புநோக்காளர் பிரிவு, நிருவாக பீடம், அங்கு விநியோகம் - விளம்பரப்பிரிவு - கணக்காளர் பிரிவு என பல பகுதிகள் இடம்பெறும். இவை அனைத்தும் முதலில் செட்டியார் தெருவில் ஒரு கட்டித்திற்குள்தான் அமைந்திருந்தன.


வீரகேசரி பத்திரிகை முதலில் தலைநகரிலும் பின்னர் படிப்படியாக வெளியூர் பதிப்புகளையும் வெளியிடத்தொடங்கியதும், அங்கு ஊழியர்களின் எண்ணிக்கையும் பெருகத்தொடங்கியது. செட்டியாருக்கு வேறு இடம் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது.

அக்காலப்பகுதியில் இலக்கம் 185 இல் அமைந்திருந்த இல்லத்தில் வாழ்ந்த குடும்பம் கொழும்பு தெற்கிற்கு இடம்பெயர்ந்தமையால் குத்தகை அடிப்படையில், அந்த இல்லம் கைமாறியது.

செட்டியார், அந்த இல்லத்தை குத்தகை அடிப்படையில் வாங்கி, அங்கிருந்து வீரகேசரி பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டார். அவர் அதனை வாங்கிய நேரம் நல்லநேரமாக இருந்திருக்கவேண்டும். 1931 - 1932 காலப்பகுதியிலிருந்து கடந்த 86 வருடங்களாக வீரகேசரி 185 ஆம் இலக்க இல்லத்திலிருந்து வெளியாகிக்கொண்டிருக்கிறது.

குறிப்பிட்ட குத்தகை முறை பல தலைமுறைகளையும் கடந்து, நிருவாக பீடங்கள் இயக்குநர் சபைகள் மாறினாலும் வீரகேசரியும் அதன் சகோதர வெளியீடுகளும் இடம்பெயராமல் அந்த இல்லத்திலிருந்துதான் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

தான் பிறந்து தவழ்ந்த அந்த இல்லம் எப்படி இருக்கிறது என்பதைப்பார்ப்பதற்காக நீண்ட காலத்திற்குப்பின்னர் (1977 இற்குப் பின்னர்) ஜனாதிபதியாக அங்கு வருகை தந்தார் ஜே.ஆர். ஜெயவர்தனா. அவருடன் அச்சமயம் பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாசவும் வந்தார்.



S.M.Karrmekam

அவர்களின் நோக்கம் அங்கு 1906 ஆம் ஆண்டு பிறந்த குழந்தையின் கனவை நிறைவேற்றுவதற்காகவே என்பதே எமது ஊகம். வீரகேசரி நிருவாகத்திற்கு அரசமட்டத்திலிருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. மட்டக்குளிய பிரதேசத்தில் நிலம் வாங்கி அங்கு புதிய கட்டிடம் அமைத்து வீரகேசரிக்கு

தொடர்ச்சி... (பக்கம் -23 )



## தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# பாரதியின் காதல் கவிதைகள்



காதலர் தினம் கொண்டாடப்படுவது சரியா தவறா என்பது பற்றிய வாதங்கள் முன்வைக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் பாரதி காதலைப்பற்றி கூறியவை பற்றி பார்ப்பது சாலப்பொருத்தம்.

இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த கவிதைச் சாதனையாளர் பாரதி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இங்கு அவருடைய அகத் துறைப் பாடல் உள்ளடக்கச் சிறப்புகளைக் காண்போம்.

பாரதியின் மொத்தப் படைப்புலகில் காதல்பெறும் இடம் சிறியதே; எனினும் சீரியது; குழைவும் கசிவும் கனிவும், பெண்ணை மேன்மைப் படுத்தும் இலட்சியமும் கொண்டது. தமிழ் மரபு காதலைப் பாடுவதுடன் காதலைப் போற்றுவதும் கூட. "நிலத்தை விடப் பெரியது, வானை விட

நீதிராஜா வர்ணன்

உயர்ந்தது, கடலைவிட ஆழமானது" எனத் தன் காதலைப் பற்றிக் குறுந்தொகைத் தலைவி சொல்கிறாள் (குறுந்.3).

இது ஒருவகையில் காதல் உணர்வைப் பெருமைப்படுத்துவது. எனினும் தலைவி கூற்றில் வருவது. பாரதி காதலைப் போற்றியும் வாழ்த்தியும் கூறுவன அவர் கூற்றிலேயே வருவன. காதலின் பெருமையை உரக்கக் கூவிப் பறைசாற்றிச் சொல்வதில் பாரதி ஒரு புதுமையைச் செய்கிறார்.

ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்.
(பாரதியார் கவிதைகள். ப.582)

காதலினால் மானிடர்க்குக் கலவி யுண்டாம்......
ஆதலினால் காதல்செய்வீர் உலகத் தீரே!
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்!
(மேலது.ப.292)

இவ்வகையில், இடைக்காலத்தில் சில சமயவாதிகளால் தாழ்மைப் படுத்தப்பட்ட பெண்ணின்பத்தை மேன்மைப் படுத்துகிறார் பாரதி. இவையெல்லாம் தமிழ் அகத்துறைக் கவிதை மரபில் இடைக்காலத்தில் நேர்ந்த கோணல்களை நிமிர்த்தப் பாரதி மேற்கொண்ட புரட்சி முயற்சிகள்.


......வானோர்க்கேனும்
மாதரின்பம் போற்பிறிதோர் இன்பமுண்டோ?
(மேலது. ப. 292)

என்கிறார். கடவுளைக் காதல் துணையாகப் பாவனை செய்யும் மரபையும் தாண்டிக் காதலியையே கடவுளாகக் காணும் ஒரு பார்வையை முன்வைக்கிறார்.

காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்.
(மேலது. ப.292)

காதலை ஆன்மிகத்துக்குச் சரி இணையாகப் பார்க்கிறார் பாரதி. இந்த அளவுக்குக் காதல் உணர்வின் புதுமையை, இனிமையை, செழுமையை, தூய்மையை வலியுறுத்திப் பாடிய தமிழ்க்கவிஞர் எவருமில்லை.

பாரதி பாடிய காதல் பாடல்கள் முழுமையும் கண்ணனைக் காதலியாகவோ (கண்ணம்மா) காதலனாகவோ பாவித்துப் பாடிய பாடல்களே. இவ்வகையில் ஆழ்வார்கள் வழியில் பாடப்பட்டவையே. ஆயினும் ஆழ்வார் பாடல்களின் இறையுணர்வுத் தீவிரத்தை மட்டுப்படுத்திக் காதலுணர்வுத் தீவிரத்தைத் தம் கவிதையில் மேலும் ஒளிபெறச் செய்திருக்கிறார் பாரதி. அதனாலேயே "கண்ணம்மா"வாக்கியிருக்கிறார் கண்ணனை. "கண்ணம்மா" பாடல்கள் சிலவற்றைச் "செல்லம்மா" என மனைவியை விளித்துப் பாடியதுண்டு என அறிகிறோம். ஆக உண்மைக் காதல் அனுபவத்தையே முதன்மைப்படுத்தியும் இறைக்காதல் எனும் பாவனைக் காதல் அனுபவத்தை அதற்கு வலுவான பின்களமாக்கியும் பாரதியின் கவிதைகள் பிறந்தன எனக் கொள்ள முடியும். "கண்ணம்மா என் குழந்தை" எனும் கவிதை "பராசத்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு" என்ற குறிப்புடன் எழுதியுள்ள கவிதை. இது காதல் கவிதை அன்று; அதே நேரம் பராசக்தியை எந்த இடத்திலும் நினைவுக்குக் கொண்டுவராமல் முழுமையாகக் குழந்தைச் செல்வ இனிமையைப் பாடுவது. பாரதியின் "கண்ணம்மா" பாடல்களும் இவ்வாறே முழுமையான காதல் கவிதைகளாகப் பிறந்தவை. கண்ணம்மா என்ற பெயர்க் குறிப்பு இல்லாவிட்டால் இவை சங்கக் கவிதை போலச் "சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாத" மரபான, நாடக அமைப்பிலான காதல் கவிதைகளே. சங்கக் கவிதைகளுக்குத் துறை அமைப்புத் தரப்பட்டிருப்பது போலவே, தம் கவிதைகளுக்குப் பாரதி, "காட்சி வியப்பு", "நாணிக்கண் புதைத்தல்", "குறிப்பிடம் தவறியது" என்பன போன்ற துறை



அமைப்புகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மோனத் திருக்குதடீ - இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே.
நானொருவன் மட்டிலும் - பிரிவென்பதோர்
நரகத் துழலுவதோ?
(மேலது. ப.407)

என்ற கவிதை அடிகளில் "ஓர்யான் மன்ற துஞ்சா தேனே" என்ற குறுந்தொகைத் தலைவியின் உணர்வு (குறுந்.5) இங்குத் தலைவனின் உணர்வாகப் பிரதிபலிப்பாகியிருப்பதை உணரலாம்.

...... என்றன்
வாயினிலே அமுதூறுதே - கண்ணம்மா
என்ற
பேர்சொல்லும் போதிலே - உயிர்த்
தீயினிலே வளர் சோதியே - என்றன்
சிந்தனையே என்றன் சித்தமே!
(மேலது. ப.51)


இந்தக் கவிதைகள் எல்லாவற்றிலும் பாரதி படைத்த காதலி பெண், சக்தி, அழகு, காதல் எல்லாம் வேறுபாடற்றுக் கலந்தமைந்த படிமம். ஆகவே இந்த வகையான காதல் கவிதை பாரதி படைத்த புதுப்படைப்பு என்றே சொல்லவேண்டும். பாரதிக்குப் பின்னர்ப் பாரதிதாசனும் அவருக்குப் பின்வந்தோரும் பாரதியின் இப்புதுமையைத் தொடரவில்லை எனக் காணமுடியும்.

# அறம் உணர்த்தும் தமிழ் இலக்கியங்கள்

--- எம்.பாலசுப்பிரமணியன், செயலாளர், வள்ளல் அழகப்பர் தமிழ் இலக்கிய பேரவை, காரைக்குடி ---

ஜெர்மன் மொழியை விஞ்ஞான மொழி என்றும், ஆங்கிலத்தை வியாபார மொழி என்றும், தமிழ் மொழியை "பக்திமொழி" என்றும் பல அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

மற்ற மொழி இலக்கியங்களை காட்டிலும், தமிழில் அறம் உணர்த்தும் இலக்கியங்கள் மிகுதி. தமிழ், இயற்கையோடு இணைந்த இனிய மொழி. முயன்று வெளிப்படுத்த வேண்டிய தேவையின்றி, வாயை திறந்தவுடன் சிறு முயற்சியால் பிறப்பன. பல்லாயிரக்கணக்கான ஆண்டு வழிவழியே தொடர்ந்து இலக்கிய செறிவுடையதாய், இலக்கண கட்டுக்கோப்பு சிதையாமல் வளர்ந்து வருகிறது நம் தமிழ் மொழி.



அற ஒழுக்கம் : தமிழ் மொழியில் அமைந்துள்ள இலக்கியங்கள் மனித குலத்தை இன்புறுத்தி அதன் வழியே அற ஒழுக்கத்தை உணர்த்தும் வலிமை உடையதாக விளங்குகின்றன. மக்கள் ஆறறிவு உடையவர்கள். விலங்கு, பறவை முதலியன ஐந்தறிவு உடையன. மக்களுக்குரிய ஆறாவது அறிவினால் உண்டாவது தான் அற ஒழுக்கம். அற ஒழுக்கமே மக்களுக்கும், விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு. விலங்குகள் கண்ட இடத்தில் கண்டதையெல்லாம் மனம் போனபடி செய்யும். மனிதன் அவ்வாறு செய்வதில்லை. இன்னவை இன்ன முறையில் செய்ய வேண்டுமென்று வரையறுத்து வாழ்கின்றான். இலக்கியங்கள் இவ்வாழ்க்கை முறையைத்தான் மனித மனத்திற்கு உணர்த்துகின்றன.

மக்களாக பிறந்தவர்கள் எல்லோரும் உயர்வாக மதிக்கப்படுவதில்லை. அவர்களில் அற ஒழுக்கம் உடையவர்களே உயர்ந்தவர்கள் என மக்களால் மதிக்கப்படுகிறார்கள். அற ஒழுக்கம் உள்ள ஒருவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகிறது. அவன் வாழ்க்கையில் மென்மேலும் உயர்கிறான். போற்றத் தவறுவதில்லை. அற ஒழுக்கம் என்றால் என்ன? என்று நாம் வரையறுத்து கூற முடியாது. நம் இலக்கியங்களில் பெரியோர்களால் நல்ல செயல்கள் எது, எதுவென்று கூறப்பட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் அற ஒழுக்கம் என்று கருதிட வேண்டும். மனம், மொழி, மெய்களை தீய நெறியில் செல்ல விடாமல் தடுத்து நன்னெறியில் நிறுத்த, நம் இலக்கியங்கள் துணை புரிகின்றன. தூய்மையான பழக்க வழக்கங்கள், எண்ணம், செயல், பொய் சொல்லாதிருத்தல், திருடாதிருத்தல், பிறருக்கு தீங்கு செய்யாதிருத்தல், இன்னா சொற்களை சொல்லாதிருத்தல், பிறரிடத்தில் அன்பும், அருளும் கொண்டிருத்தல், இவைபோல என்னென்ன செயல்கள் உண்டோ, அவ்வளவையும் நம்முடைய இலக்கியங்கள் நம்மை செய்யப் பழக்குவதே அற ஒழுக்கம் என்று கூறலாம்.

தொடர்ச்சி... (பக்கம் -21 )

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

# நெற்களங்களாகிய கொங்கிறீட் வீதிகள்!

'துன்பப்பட்டு நெல் உற்பத்தி செய்வது நாம், நம்முடைய நெல்லினையெடுத்து, அரிசாக்கி விற்பவர்கள் நெல்லுக்கான விலையை நிர்ணயிக்கும் நிலை.

கொங்கிறீட் வீதியும் இல்லையெண்டால், நம்மட கெதி? என்னவாயிருக்கும்.' என



மண்முனைப் பாலத்திற்கு அருகில் உள்ள தரிப்பிட கட்டடத்திற்குள் இருந்து கொண்டு வெள்ளையனும் வேலப்பனும் பேசிக்கொண்டிருந்தனர். பாலத்திற்கு முன்னுள்ள கொங்கிறீட் வீதியில் சிறுபோகத்தில் செய்து பெற்ற நெல்லினை காயவைத்துவிட்டு காவல் பார்த்துக்கொண்டிருக்கையிலே இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை எனும் பகுதி விவசாயத்தினையே நம்பி வாழ்கின்ற பகுதி. இங்கு விவசாய செய்கையில் நெல் உற்பத்தியே அதிகம் செய்கை பண்ணப்படுகின்றன. 2018ம் ஆண்டின் ஆரம்பத்தில் மழை குறைவாக பெய்ததினால் இவ்வருடத்திற்கான சிறுபோகச் செய்கை குறைந்தளவிலே மேற்கொள்ளப்பட்டது. குளத்தில் தேக்கி வைக்கும் நீரின் அளவிற்கேற்பவே விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றமையும் வழமை. அதற்கேற்றால் போலதான் மழை பெய்யுமோ? பெய்யாதோ? என்ற அச்சத்தில், நெற்செய்கை வழமையையும் விட குறைந்தளவிலே இவ்வருடம் செய்கைப்பண்ணப்பட்டது. ஆனால் நெல்விதைத்து சிறு காலத்தின் பின் அதிக மழைபெய்ததினால் குளத்தின் நீர்மட்டமும் அதிகரித்து, உன்னிச்சை போன்ற வான்கதவுகளும் திறக்கப்பட்டு நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியதுடன், வரம்புக்களை அடித்துச்சென்ற சம்பங்களும் இடம்பெற்றன. இதனால் விவசாயிகளும் சினங்கொண்டதுடன், ஆவேசமும் அடைந்தனர். இதைத்தான் வெள்ளையனும் கூறிக்கொண்டிருந்தான்.

வெள்ளமேற்பட்டால், அணைக்கட்டுக்களை வெள்ளநீர் உடைப்பதும், விவசாயிகள் இணைந்து மீண்டும் மணலினால் கட்டுவதும் பழக்கிப்போனதொன்று. விரக்தி ஏற்பட்டாலும், செய்த விவசாயித்தினை கைவிடாது, செய்கின்ற மனநிலையே விவசாயிகளுக்கு உண்டு. துன்பங்கள் ஒன்று சேர்கின்ற போது, அடுத்த முறை நெல் உற்பத்தியில் ஈடுபடுவதில்லை எனக்கூறுவார்கள். பின் திரும்பவும் ஆரம்பித்துவிடுவார்கள். நம்மட மொழியில் சொல்வதென்றால், "ஆடியோடி, வேலைசெய்த கால் சும்மாவிருக்காது". என்ன கஸ்டம் ஏற்பட்டாலும் விவசாயம் செய்யாமல் இருக்கமாட்டார்கள். கடந்த காலங்களில் வெள்ளம் ஏற்பட்டு ஓரிரு மூடை நெல்லுடன் வீடு வந்து சேர்ந்தும், அதற்காக வாங்கிய கடனை அடைக்க முடியாத நிலையிருந்தும் மீண்டும் அடுத்த வருடம் விவசாயம் செய்தமையே வரலாறு. இவ்வாறு நம்மட விவசாயிகளின் கதைகளை கதைத்துக்கொண்டே செல்லலாம். அதைப்பற்றி பேசாமல், இப்போ நம்ம அனுபவிக்கின்ற துன்பத்தினைப் பாரு என்றான் வெள்ளையன்.

துன்பப்பட்டு, கடன்பட்டு நெல் உற்பத்தியை செய்து, நான்கு மாதங்களாக யானையையும், மாடுகளையும், குருவிகளையும் ஏனைய விலங்குகளையும் உள்விடாது, உயிரையும் பணயம் வைத்து காவல்புரிந்து விவசாயம் செய்து, அறுவடை நடைபெற்று உரியவிலைக்கு கொடுக்க முடியாமலிருக்கின்றோம்.

துன்பப்பட்டு நெல்உற்பத்தி செய்வதுநாம், நம்முடைய நெல்லினையெடுத்து, அரிசாக்கி விற்பவர்கள் நெல்லுக்கான விலையை நிர்ணயிக்கும் நிலை. நாம் என்ன செய்தும் நம்மட கையிலே ஒன்றுமில்லை. அறுவடை ஆரம்பித்தால் காலடிக்கே பல தரகர்கள் ஓடிவருகின்றனர். விலையை பேசுகின்றனர். விலையினை கேட்டால் கொடுப்பதற்கு விருப்பமில்லை. வாங்கிய கடனை நினைத்தால் விற்காமல் வைத்திருக்க முடியாது, அறுவடை செய்த உடனே நெல் கொள்வனவாளர்கள் மூடையில் கட்டி நெல்லையெடுத்துவிட்டு கையிலே பணத்தினை வழங்கிவிட்டு செல்கின்றனர். வாங்கிய பணத்தினை வயலில் இருந்தே பிரிக்க ஆரம்பித்தால் வீடு செல்லும் போது, கையிலே ஒரு ரூபாய் பணமும் இருக்காது. வீட்டிலே நெல் இருந்தால் கூட சோற்றுக்கு பஞ்சம் இல்லையென்பார்கள். இப்பெல்லாம் அரிசி, கடையில் வாங்கும் நிலையே. பணமில்லையெண்டால் சோறில்லை என்ற நிலையாச்சு.

நெல்லுக்கான விலை அதிகரிக்கும் போது, நெல்லை வைத்திருப்பதற்கு களஞ்சியசாலைகளும் இல்லை. காயவைப்பதற்குரிய களங்களும் இல்லை. ஆனாலும் நெல்லைக்களஞ்சியப்படுத்தி வைத்திருக்க ஐந்து தசாப்தங்களுக்கு முந்திய காலங்களில் பட்டறைகளை வீடுகளுக்கு முன்னால் அமைத்திருந்ததாகவும், அதனுள்ளே நெல்கள் பாதுகாத்து வைக்ககப்பட்டிருந்ததாகவும் முதியவர்கள்

**படுவான் பாலகன்**

கூறுகின்றனர். இப்போதெல்லாம் அப்படி வைத்திருக்க முடியாது. அதற்கான வளங்கள் இல்லாமையும், சாத்தியமற்றது போன்ற காரணங்களினாலே அவை புழக்கத்திலிருந்து சென்றிருக்கின்றன என்றும் பேசிக்கொள்கின்றனர். நெல் காயவைப்பதற்கென படுவான்கரைப்பகுதிலே களங்கள் இல்லை. இதனால்தான், கொங்கிறீட் வீதிகளில், மைதானங்களில் நெல்லினை காயவைத்து, ஒருசிலர் களஞ்சியப்படுத்தி வைக்கின்றனர். காயவைக்கின்ற வீதிகளில் வாகனங்கள் அதிகம் செல்வதினால், நெல், அரிசியாகின்ற நிலையும் காணப்படுகின்றது. அதற்காக காயவைக்காமலும் இருக்கமுடியாது. அவ்வாறு காயவைக்காமல் களஞ்சியப்படுத்தினால், நெல் பயன்பாட்டுக்கற்றதாகிவிடும்;.

விதை நெல்லுக்காக இவ்வாறு காயவைத்து களஞ்சியப்படுத்தும் நெல்லையே பயன்படுத்துகின்றனர். கொங்கிறீட் வீதியும், மைதானங்களும் இல்லையெண்டால் விதைநெல்லுக்கும் மிகவும் கஸ்டப்பட வேண்டிய நிலைக்கு படுவான்கரைப் பகுதி விவசாயிகள் உள்ளாவர். இதுபற்றி வருடாந்தம் நடைபெறும் விவசாய ஆரம்ப கூட்டங்களில், விவசாயிகள் பேசுகின்றனர். ஆனால் களங்கள் அமைக்கப்பட்டதாகவில்லை. களங்களும், களஞ்சியசாலைகளும் உருவாக்கப்படுமானால் விவசாயிகளும் பாதி விலைக்கு நெல்லினை விற்காமல், அதிகவிலைக்கு விற்பனை செய்து இலாபத்தினைப்பெற்று வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திக்கொள்வர். அவ்வாறு வசதி, வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால், மீண்டும், மீண்டும் மீண்டுவரமுடியாத கடனாளிகளாகவே விவசாயிகள் இருந்து கொண்டிருப்பர் என்று கூறிக்கொண்டே காயவைத்த நெல்லில் நின்றுகொண்டிருந்த காகங்களை கூச்சலிட்டு துரத்திக்கொண்டிருந்தான் அந்த விவசாயி.

# வேதாளத்தின் விக்கிரமாதித்தன்



Osloவிற்கு 10 வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்தபோது என்னிடம் ஒரு சிறு பயணப்பொதியும் 80 கிலோ ஆகிருதியும் மட்டுமே எனது சொத்துக்களாக என்னுடன் வந்தன.

இந்த 10 வருடங்களில் எக்கச்சக்கமாய்

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

குப்பைகளைச் சேர்த்துவிட்டேன்.

ஒரு மரத்தின் கீழ் குந்தியிருந்தபோதுதான் புத்தனுக்கு திடீர் என்று ஞானம் பிறந்தது என்கிறார்கள்.

எனக்கும் ஏறத்தாழ அப்படித்தான். எனது மாளிகையின் படியில் பக்கத்துவீட்டுக்காரனின் மரக்கிளைகள் தந்த நிழலில் தேனீரைச் சுவைத்தபடி குந்தியிருந்தபோது "வரும்போது எதைக் கொண்டுவந்தாய், போகும்போது எதைக்கொண்டுபோகப்போகிறாய்" என்றான் Oslo முருகன்.

எனது சொத்துக்கணக்கின் ஐந்தொகைகை பற்றாக்குறைகளினால் நிரப்பப்பட்டிருந்தாலும், எனது அசையாச் சொத்துக்கள் அதிக இடங்களைப் பிடித்துக்கொண்டிருந்தன.

குப்பைகளைக் கழித்தபின் 4 பெட்டிகளில் புத்தகங்களையும், ஒரு பெட்டியில் குழந்தைகளின் சித்திரங்கள், விளையாட்டுப்பொருட்கள், அவர்கள் தந்த பரிசுகள் என்பனவும், ஒரு சிறு பயணப்பொதியினுள் உடைகளும் மிஞ்சியிருந்தன.

குளிப்போம் என்று குளியலறைக்குள் புகுந்தேன். உடல் எடைத் தராசு கண்ணிற்பட்டது. ஏறி நின்றேன். மோசமில்லை.

மறுநாள், வீட்டினைக் கழுவி, புத்தகப் பெட்டிகளை வாகனத்தில் ஏற்றி நண்பர்வீட்டில் பத்திரப்படுத்தினேன்.

மீண்டும் வீடுவந்து சுற்றிப்பார்த்தேன். அனைத்தும் சுத்தமாய் இருந்தன.

நண்பரின் வாகனத்தினுள் இருந்த ஒரு பயணப்பொதியில் எனது சொத்துக்கள் இருந்தன.

தூக்கிக்கொண்டு நடக்கக்கூடியளவு சொத்துக்களைத்தான் இப்போதும் சேகரித்திருக்கிறேன் என்பது ஆறுதலான விடயம்.

வாகனம் நகரத்தொடங்கியது. நீண்ட பச்சைப்பசேல் என்ற வயற்பகுதியைக் கடந்து வீதியில் ஏறியபோது 2008ம் ஆண்டைவிட இப்போதைய சஞ்சயன் 7 கிலோ குறைந்திருப்பது நினைவிற்கு வந்தது. பாதகமில்லை.

இந்தப் பத்தாண்டுகளில் சொத்துக்கள் அதிகம் சேர்க்கப்படவில்லை. ஆனாலும் நினைவுகளினதும், சாதக பாதக அனுபவங்களினதும் கனதி கணிசமாய் அதிகரித்திருக்கிறது.

வாழ்தல் என்பது அதுதானே.

Osloவின் வடக்குத்திசை நோக்கி நகர்ந்தவொரு பேருந்தில் சில 10 நிமிடங்கள் பயணித்தபின் இறங்கிக்கொண்டேன்.

ஒரு வெள்ளைக் கோடு ஆகாயத்தைப் பிளந்துகொண்டிருந்தது.

வேதாளத்தை வெட்டி விழுத்திய விக்கிரமாதித்தன் மீண்டும் அதனை தோளிற் சுமந்தபடி நடக்க ஆரம்பித்தான். இம்முறை என்ன கதைசொல்வோம் என சிந்திக்க ஆரம்பித்தது வேதாளம்.

Life begins at the end of your comfort zone.





# இரண்டாவது முறை தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள்

## புதிதாக உதயமாகும் புதிய போராளிகள்

2009க்குப் பிறகு உருவாகிய தமிழ் அரசியலில் "முன்னாள் போராளிகள்" என்றொரு புதிய சொல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2009 வரையும் களத்தில் நின்று போராடிய விடுதலைப்புலிகளே இந்தச் சொல்லின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டனர். (1980 களில் ஈழப்போராட்டத்தில் ஈடுபட்ட அத்தனை பேரும் போராளிகளாகவே கருதப்பட்டனர்).

போரினால் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள், இந்தச் சொல்லின் மூலம் ஓய்வு நிலைக்குத் தள்ளப்பட்டதாக உணர்த்தப்பட்டது. அதாவது களத்திலிருந்து அகற்றப்பட்டதாக.

இதற்குப் பிறகு போராட்ட (கால) அரசியற் களத்தில் முதல் நிலையில் இருந்த விடுதலைப்புலிப் போராளிகள், இரண்டாம் மூன்றாம் நான்காம் ஐந்தாம் நிலையினர் என்றாக்கப்பட்டனர்.

அவர்கள் அரசியல் ரீதியாக எதையும் தீர்மானிக்க முடியாது, சமூகத்தில் எத்தகைய செல்வாக்கையும் செலுத்த முடியாது என்றாக்கப்பட்டது. அப்படிச் செயற்பட முனைவோர் அரச சார்பானவர்களாகவும் வெளிச்சக்திகளால் கையாளப்படுவோராகவும் சித்தரிக்கப்பட்டனர். அதற்குரிய முறையில் திட்டமிட்டுச் சந்தேகங்களும் உருவாக்கப்பட்டன.

முன்னர் ஏனைய இயக்கத்தினர் எவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டனரோ அதே வகையான அடையாளப்படுத்தல் இவர்களுக்கும் நிகழ்ந்தது. இதைச் செய்ததும் செய்து கொண்டிருப்பதும் வேறு யாருமல்ல, இன்றைய தமிழ் அரசியலாளர்களே. தாம் முதல் நிலையைப் பெற வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்கின்றனர்.

ஆகவே, இரண்டாவது தடவையாகவும் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர்.

முதற்தோற்கடிப்பு அரசினாலும் சர்வதேச சக்திகளினாலும் நிகழ்ந்தது என்றால், இரண்டாவது தோற்கடிப்புத் தமிழ் அரசியற் தரப்பினரால் நிகழ்ந்தது, இன்னும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

வேடிக்கை என்னவென்றால், இதில் தமிழ்த்தேசியவாதச் சக்திகளும் ஐ.தே.க, சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்ற பெருந்தேசியவாதக் கட்சிகளின் தமிழ்ப்பிரதிநிதிகளும் வேறுபாடற்ற நிலையில் சேர்த்தி என்பது.

இவர்கள் எல்லோரும் இன்று "புதிய போராளி"களாகி விட்டனர்.

இவர்கள் தங்களுடைய அரசியல் தேவைகளுக்கேற்ற வகையில், தம்மைப் புதிய போராளிகளாகக் காட்டுவதற்காகப் புலிகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். ஆனால், இந்த விசயத்தை மிகக் கவனமாகவும் மிக நுட்பமாகவும் கையாண்டனர். இதன்படி தமது தேவைக்காகப் பயன்படுத்த விளைந்தது, தப்பி, மிஞ்சியிருக்கும் புலிகளை அல்ல. களமாடிய, காயப்பட்டு விழுப்புண்களை ஏற்ற, தியாகங்கள் பல செய்த புலிகளை எல்லாம் புறமொதுக்கி விட்டு, 2009 க்கு முந்தியகாலப் புலிகளையே பயன்படுத்தினர்.

அதாவது அந்த இயக்கத்தில் போராடி வீழ்ந்த "மாவீரர்"களையும் விடுதலைப்புலிகள் என்ற இயக்கத்தின் பெயரையும் அந்த இயக்கம் உருவாக்கிய அடையாளங்களையும் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இன்னும் அப்படியே பயன்படுத்தியும் வருகின்றனர். இதில் இவர்களில் யாரும் கூச்சப்படவோ வெட்கப்படவோ இல்லை. (ஆதாய அரசியலில் இதையெல்லாம் பார்க்க முடியுமா? அப்படிப் பார்த்தால் லாபங்கள் கிடைக்குமா?" என்ற வடிவேலுவின் நகைச்சுவைக் கிண்டலே. அதிலுள்ள உண்மையே நினைவுக்கு வருகிறது).

இதற்காகச் சிலர் புலிகளின் வாரிசுகள் தாமே என்றனர். சிலர் புலிகளின் ஆதரவாளர்கள் தாம் என்று காட்டமுற்பட்டனர். சிலர் தாம் எப்போதுமே புலிகளின் அபிமானிகள் என்றார்கள். சிலரோ தங்களைத்தான் புலிகள் அங்கீகரித்தனர் என்றனர்.

இதற்காகப் பிரபாகரனைப் போலப் "போஸ்" கொடுத்தார் ஒருவர். புலிகளின் மாவீரர் துயிலுமில்லங்களில் போய் நின்றார் இன்னொருவர். புலிகளின் பாடல்களைத் தனது அரசியல் பரப்புரை மேடைகளில் ஒலிக்கச் செய்தார் வேறொருவர். புலிகளின் அரசியல் வாரிசு தானே என்றார் இன்னொருவர். இப்போது "புலிகள் மீண்டும் வரவேண்டும் என்றிருக்கிறார் வேறொருவர். "எங்கள் தலைவரே இன்றைய தேசியத் தலைவர்" என்றது ஒரு அணி. எங்கள் சின்னத்தையே புலிகள் தெரிவு செய்திருந்தனர் என்றது இன்னொரு குழு.

இப்படியே புலிகளை வைத்து ஒரு மாபெரும் அரசியல் நாடகம் நடந்து கொண்டிருக்கிறது.

> **முன்னர் ஏனைய இயக்கத்தினர் எவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டனரோ அதே வகையான அடையாளப்படுத்தல் இவர்களுக்கும் நிகழ்ந்தது**

இதற்குக் காரணம் போராட்ட அரசியலின் தேவையை மறுக்க முடியாததே. அதை அதற்குரிய முறையில், அதற்குரிய பண்புடனும் குணாம்சத்தோடும் தொடர முடியாதவர்கள், முன்னர் போராடிய சக்தியாகிய புலிகளின் அடையாளத்துடன் தம்மை இணைத்து அடையாளப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதனால் "புலிகள்" என்ற பெயரின் நிழலில் நிற்பதற்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு தரப்பும் படாத பாடுகளைப்படுவது நடைமுறையாகியுள்ளது. இவர்களுக்கு புலிகள் இயக்கம் ஊறுகாயாகி விட்டது.

இப்படியே "புதிய போராளிகள்" என்ற வேஷத்தைப் போட்டுக் கொண்டு அரசியற் கூத்தாடுகின்றனர் இந்தக் "கோமாளிகள்".

தங்களுடைய கொள்கையைச் சொல்லி, அதை நடைமுறைப்படுத்தி மக்களிடத்திலே ஆதரவைப் பெறுவதில்லை இவர்கள். தங்களுடைய செயற்பாடுகளை நிரூபித்து செல்வாக்கைப் பெறுவதற்கு முயற்சிப்பதுமில்லை. தங்களுடைய அரசியல் திறனையும் சாணக்கியத்தையும் பயன்படுத்தி எதிர்த்தரப்பை, அரசாங்கத்தை முறியடித்து முன்னேறுவதும் இல்லை. பாதிக்கப்பட்ட, பின்தங்கிய நிலையிலிருக்கும் மக்களின் வாழ்க்கையை உயர்த்தி, அதன் மூலம் ஆதரவைப் பெறுவதில்லை.

பதிலாகப் போராட்டத்திலும் போர்க்களத்திலும் உச்சமான அர்ப்பணிப்புகளைச் செய்த விடுதலைப்புலிகளை "முன்னாள் போராளிகள்" என்றாக்கி விட்டுத் தாம் "புதிய போராளிகள்" ஆகியிருக்கின்றனர். அப்படிப் "புதிய போராளிகள்" ஆகியவர்கள், புதிய அரசியற் களத்தைக் கைப்பற்றி, அதிகாரம் செய்கின்றனர்.

> **தமிழ்ச்சமூகத்தின் அரசியலானது, பிரமுகர் அரசியலாக × மக்கள் அரசியலுக்கு அப்பாலானதாக மாறிவிட்டது.**

அதிகாரம் கிடைக்காதவர்கள் அதற்காகப் போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தப் "புதிய போராளிகள்" இதுவரையிலும் போராட்டக்களத்தில் செயற்படாதவர்கள். போரினால் ஏற்பட்ட இழப்புகளையோ, துயரத்தையோ அதனுடைய அனுபவத்தையோ பெறாதவர்கள். ஒரு போதும் தடுப்புக்கோ சிறைக்கோ செல்லாதவர்கள். சனங்களோடு கலந்து வாழாதவர்கள்.

பதிலாக போராட்டத்திற்கும் போர்க்களத்திற்கும் அப்பால், தமது வாழ்க்கையைக் கட்டமைத்திருந்தவர்கள். 2009 வரை அல்லது அதற்குப் பிறகுகூட அரச உத்தியோகத்திலிருந்தவர்கள். அல்லது உத்தியோகத்திலிருந்து ஓய்வு நிலையைப் பெற்றவர்கள். அல்லது பெரு வணிகத்தில் ஈடுபட்டவர்கள். அதாவது தாமும் தமது குடும்பமும் தமது செல்வாக்கான வாழ்க்கையும் என்றிருந்தவர்கள். பொதுப்பணி, பொதுவாழ்க்கை, அர்ப்பணிப்பு, தியாகம், இழப்பு, துயரம் என்ற எதனோடும் எத்தகைய தொடர்பையும் உறவையும் கொண்டிருக்காதோர்.

2009 க்குப் பிறகு உருவாகிய பலவீனமான அரசியற் சூழலைப் பயன்படுத்தி, அதற்குள் தம்மைச் சாமர்த்தியமாகப் புகுத்திக் கொண்டனர் இந்தப் "புதிய போராளிகள்". இதனால் 2009 க்குப் பிறகு முற்று முழுதாக தேர்தல் அரசியலே உருவாகியது.

இது, இதுவரையிலான போராட்ட அரசியலுக்கு, விடுதலை அரசியலுக்கு மாறானது. எதிரானதாகும். அல்லது அதைப் பலவீனப்படுத்துவதாகும். குறைந்தபட்சம், போருக்குப் பிந்திய அரசியலைக் கூட இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் (புதிய போராளிகள்) முன்னெடுக்கவில்லை.

போருக்குப் பிந்திய அரசியலானது பாதிக்கப்பட்ட சமூகத்தை மீளமைத்திருக்க வேண்டியது. அப்படிச் செய்திருந்தால் இன்று தமிழ்ச்சமூகம் வலுப்படுப்பட்டிருக்கும். காயங்களை ஆற்றியிருக்கும். தன்னுடைய நிர்க்கதி நிலையை மாற்றியிருக்கும். தொடர்ந்தும் விடுதலை அரசியலை நோக்கித் தளம்பலின்றித் தொடர்ந்திருக்கும்.

இதற்கு யதார்த்தத்தை உணர்ந்த சிந்தனை வேண்டும். மக்கள் மீதான நேயம் வேண்டும். அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளும் அதற்கான அரசியல் பொறிமுறையும் வேண்டும். தம்மை முழுமையாக மக்களோடு கரைத்து உழைக்க வேண்டும்.

பிரமுகர் அரசியலில் இதற்கான இடமில்லை. 2009 க்குப் பிறகு உருவாக்கப்பட்டது போராட்ட அரசியலோ விடுதலை அரசியலோ இல்லை. அது முற்று முழுதாகத் தேர்தல் அரசியல். எனவே, தேர்தல் அரசியலுக்குரியவாறு பிரமுகர்கள் களமிறக்கப்பட்டனர். அல்லது பிரமுகர்கள் களமிறங்கினர். இதுவே இன்றைய வீழ்ச்சியும் சீரழிவுமாகும்.

உண்மையில் இவ்வாறு உருவாகியிருக்கக் கூடாது. நீண்ட பெரும்போருக்குப் பிந்திய சூழலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசியல் என்பது மிகக் கவனமாகவும் அர்ப்பணிப்புள்ளோரினாலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். புதிய அரசியற் சிந்தனையுடையோரினால் முன்னெடுக்கப்பட்டிருக் வேண்டும். அவ்வாறானவர்களை இனங்கண்டு தேர்வு செய்திருக்க வேண்டிய பொறுப்பிலிருந்து மக்களும் தவறிவிட்டனர். யதார்த்தவாதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். அதாவது

**கருணாகரன்**

தமக்குரிய அரசியல் தலைமைகளை உருவாக்கவும் அவ்வாறானவற்றை ஆதரிக்கவும் தவறியுள்ளனர்.

தேர்தல் அரசியலோ மக்கள் அரசியலுக்கு நேர்மாறானவர்களையே உற்பத்தி செய்தது. அது "பிரமுகர் அரசியலாளர்" களையே தேடியது. அவர்களையே நம்பியது. இது

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 10




**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

முன்பு கல்முனைக்கு தெற்கே தரவைப்பிள்ளையார் கோயில் வீதிக்கும் தற்போது "செயிலான் வீதி" என அழைக்கப்பெறும் வீதிக்கும் இடையேயான இடப்பரப்பில் பிரதான வீதியை அண்டி தரவைப்பிள்ளையார் ஆலயத்திற்கான மடமும் அதற்குரிய வளவும் அதைச் சுற்றி சுமார் நூறு தமிழ்க் குடும்பங்களும் இருந்தன. இப்பகுதியில் வாழ்ந்தோருக்குக் கல்முனை 3ம் குறிச்சிக் கிராமத்தலைவரே கடமைகள் செய்து வந்தார்.

முதலாவதாக நடந்த கல்முனை பட்டினசபைத் தேர்தலின் போது கட்டவிழ்த்துவிடப்பெற்ற வன்செயலினால் தரவைப் பிள்ளையார் கோயில் வீதிக்கும் செயிலான் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் பாதிப்புற்று பயத்தினால் இடம்பெயர்ந்தனர். இவர்களின் ஒரு பகுதியினர் மன்னாருக்குச் சென்று குடியேறினர்.

கல்முனை பட்டின சபையின் முதலாவது நடவடிக்கை தமிழ்க் குறிச்சியான கல்முனை 2ம் குறிச்சியில் அமைந்திருந்த கண்னகி அம்மன் ஆலயத்திற்கு அருகில் கடற்கரையோரம் 2ஏக்கர் நிலம் முஸ்லிம் மையவாடிக்கு ஒதுக்கப்பட்டது. முஸ்லிம் கிராமமான கல்முனைக் குடியில் கடற்கரையோரம் நிலம் இருக்கும் போதுதான் இது தமிழர்களுக்கு எதிராகவும் தமிழர் வாழ்விடங்களுக்கு முஸ்லிம் ஊடுருவலை நோக்காகக் கொண்டும் வேண்டுமென்று செய்யப்பெற்றது.

மட்டுமல்லாமல் கல்முனைக் குடியிலே முஸ்லிம்களுக்கென்றிருந்த சந்தையை 1950 இல் மூடிவிட்டு முஸ்லிம் உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனைப் பட்டின சபையின் அனுசரணையுடன் தமிழர்களின் கல்முனைச் சந்தையில் முஸ்லிம்கள் ஊடுருவி அங்கிருந்த தமிழ், சிங்கள வர்த்தகர்களை இடம்பெயரச் செய்தார்கள்.

1967ம் ஆண்டு கல்முனைக் கலவரம்

1967ம் ஆண்டு கல்முனை 1ம் குறிச்சியைச் சேர்ந்த கடற்கரைப் பகுதியின் அரச காணிகளில் சுமார் 300 முஸ்லிம் குடும்பங்கள் அத்துமீற் குடியேற்றப்பட்டு இப்பகுதிக்குக் "காரியப்பர் புரம்" என்றும் பெயரிடப்பட்டது. தமிழர்கள் அதனை எதிர்பார்த்தார்கள். அதனால் ஏற்பட்ட கலவரத்தின் போது கல்முனையின் தென் எல்லையான கல்முனை 3ம் குறிச்சியைச் சேர்ந்த தமிழர்கள் தாக்கப்படும், பொருட்கள் நாசமாக்கப்பட்டும், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும், அவர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்ந்து விடப்பட்டதால் அம் மக்கள் அகதிகளாகி அன்டைய தமிழ் கிராமங்களில் தஞ்சமடைந்தனர். கலவரம் அடங்கிய பின் தங்கள் வாழ்விடங்களுக்கு திரும்பிய தமிழர்கள் பலர் பயணத்தின் காரணமாக குறைந்த விலைக்கு முஸ்லிம்களுக்கு தங்கள் வீடு, வளவுகளை விற்றுவிட்டு வேறு இடங்களுக்கு செல்லலாயினர். இவ்வாறு இடம்பெயர்ந்த சிலர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையை சேர்ந்த கறுவாக்கேணியில் குடியேறி வாழத்தொடங்கினர். சுமார் 250 வருடங்களுக்கு முன்னர் தமிழர்கள் கல்முனை, கல்முனை குடி, சாய்ந்தமருது ஆகிய இடங்களில் எல்லாம் பரந்து வாழ்ந்தனர். 1960ல் சாய்ந்தமருது கிராமசபைத் தேர்தல் ஒன்றை அடுத்தும் பின்னர் 1967ல் ஏற்பட்ட கலவரங்களில் அடுத்தும் கல்முனை குடியிலும் சாய்ந்தமருதிலும் வாழ்ந்த தமிழ் குடும்பங்கள் அனைத்தும் இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தனர். இப்பகுதியில் இன்றும் காணப்படும் ஆலய இடிபாடுகள் இதற்கு சான்றாகும்.

இதே போன்று 1954ல் சம்மாந்துறை வீரமுனையிலிருந்து பல தமிழ் குடும்பங்கள் மல்வத்தைக்கு இடம்பெயரவும், அக்கரைப்பற்றிலிருந்து சுண்ணாம்பு சுடும் தமிழ் தொழிலாளர் குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயரவும் 1960, 1967 களில் நிந்தவூர் தமிழ் குறிச்சியிலிருந்து தமிழ் குடும்பங்கள் வெழியேறவும் இது போன்ற இனக்கலவரங்களே காரணமாயிருந்தன. வீரமுனை சம்பவத்தையிட்டு மறைந்த கவிஞர் இராஜபாரதி அவர்கள் "தீயுண்ட வீரமுனை" என்று குறுங்காவியம் ஒன்றையும் படைத்தனர். அது மட்டுமல்ல 1968ல் பெப்ரவரி நடைபெற்ற கல்முனைத் தொகுதி இடைத்தேர்தலில் தமிழரசுக் கட்சியில் நிறுத்தப்பெற்ற முஸ்லிம் வேட்பாளரை ஆதரித்து வாக்களித்த தமிழர்கள் மட்டுமல்ல தமிழரசுக்கட்சி வேட்பாளர் மருதமுனையை சேர்ந்த எஸ்.மசூர் மௌளானாவை ஆதரித்த மருதமுனை முஸ்லிம்களும் கூட கல்முனைக்குடி, சாய்ந்தமரு முஸ்லிம்களால் அச்சுறுத்தப்பட்டார்கள். கல்முனையில் கலவரங்கள் ஏற்படவும் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்படவும் காரணமாயிருந்தது, முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனை பட்டின சபையின் உருவாக்கமும் அப்பட்டின சபை மேற்கொண்ட தமிழ் விரோதப் போக்குமேயாகும்.

இந்த பின்னணியிலேதான் தரவைப் பிள்ளையார் கோயில் வீதியை பிரிக்கும் எல்லையாகக் கொண்டு கல்முனை பட்டின சபையை இரண்டாகப் பிரித்து தென்பகுதியை முஸ்லிம் பெரும் பெரும்பான்மை பட்டின சபையாகவும் வட பகுதியை தமிழ் பெரும்பான்மை பட்டின சபையாகவும் உருவாக்குமாறு கல்முனைத் தமிழர்கள் 1960களில் இருந்தே கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

1967 கல்முனை கலவரத்தின் பின்னர் இக் கோரிக்கையின் அவசியம் வெகுவாக உணரப்பெற்றது. காலஞ்சென்ற தோ. அந்தோனிப்பிள்ளை (தமிழரசுக்கட்சியை சேர்ந்தவர்) அப்போதைய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் (தமிழரசுக் கட்சியின் சார்பில் ஐ.தே.கட்சியுடனே கூட்டரசாங்கத்தில் இடம்பெற்றிருந்தவர்) மு.திருச்செல்வம் அவர்களிடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்தும் இந்நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பெறவில்லை. அதிகாரத்தில் இருந்த போதுகூட தமிழரசுக் கட்சி இதில் அக்கறையற்று இருந்தமை கிழக்கு மாகாண தமிழர்கள் மீது குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழர்கள் மீது அக்கட்சிக்கு ஆத்மார்த்தமான அக்கறை இருக்கவில்லை என்பதன் வெளிப்பாடே ஆகும்.

மேலும் கல்முனை நகரை அண்டியதாக அமைந்திருந்த சிறிய நீர்ப்பாசன குளங்களின் படுக்கைகள் அரசியல் செல்வாக்குகளுடன் முஸ்லிம் மதத்தவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டு, அவை மண் நிரப்பப்பட்டு கடைத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டன. நீர்ப்பாசன தேவைக்காகவும் மழைக்காலத்தில் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும் பயன்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி முஸ்லிம் வர்த்தகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
கல்முனை நகரை முஸ்லிம் மயப்படுத்தும் நோக்கமே இது. அரசியல் செல்வாக்கும் பொருளாதார பலமும் அற்ற தமிழர்களால் இதனை தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழரசுக் கட்சி அறவே அக்கறையற்று இருந்தது.

1977க்கு பின்னர் கல்முனை

1977ம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் (1976ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் நிர்ணயத்தின் படி)

| பொத்துவில் தொகுதி (இரட்டை அங்கத்தவர்) | சம்மாந்துறைத் தொகுதி | கல்முனைத் தொகுதி | அம்பாறைத் தொகுதி |
|---|---|---|---|
| எம்.எம்.ஏ ஜலால்டின் (ஐ.தே.க) | எம்.ஏ.அப்துள்மஜித் (ஐ.தே.க) | ஏ.ஆர். மன்சூர் (ஐ.தே.க) | பி.தயாரட்ண (ஐ.தே.க) |
| ம.கனகரட்ணம் (த.வி.கூ) | | | |

1977 ம் ஆண்டு தேர்தலுக்கு பின் 1983ல் நடைபெற வேண்டிய பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறாது பாராளுமன்றக் காலத்தை மேலும் ஆறு வருடங்கள் நீடிப்பதற்காக பொதுமக்களிடையே சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பெற்று அதில் ஜே.ஆர் ஜயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.க வெற்றியீட்டியதால், 1977ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 1989 வரை நீடிக்கப்பெற்றது.

1977 – 1989 காலப்பகுதியில் ஜனாப் ஏ.ஆர்.மன்சூர் அவர்கள் கல்முனை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்ட அமைச்சராகவும் பின்னர் அமைச்சராகவும் இருந்தார்.

இக்காலத்தில் கல்முனை முதலாம் குறிச்சியில் வாடிவீடு, கிறவல் குழி மற்றும் சவக்காலையை அண்டிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றப்பெற்று, இக் குடியேற்ற பிரிவிற்கு "இஸ்லாமாபாத்" என பெயரிடப்பெற்றது. இப்பகுதி முன்னர் இலங்கை போக்குவரத்து சபைக்கு என ஒதுக்கப் பெற்றிருந்ததாகும்.

அதேபோன்று கல்முனை நகரில் கத்தோலிக்க தேவாலயத்துக்கு பின்னால் தேவாலயத்துக்கு சொந்தமான பள்ளப்பூமி (இப் பூமியில் முன்பு கிறிஸ்தவ இல்லச் சிறுவர்களுக்கான உணவுத் தேவைக்காக வேளாண்மை செய்யப்பெற்றது) அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பெற்றது. இ.போ.ச அலுவலகம் மடுவம் மற்றும் அரச அலுவலகங்கள் அமைக்கப்பெற்றதுடன் கல்முனை – மணல்சேனை வீதியையும், கல்முனை – மட்டக்களப்பு பிரதான வீதியையும் குறுக்காக இணைத்து புதிய பாலம் ஒன்று நிர்மாணிக்கப்பெற்றது. அதற்கு ஹிஜ்ரா வீதி என பெயரிடப்பட்டது.

இந்த இடத்தில் ஒரு விடயத்தை பதிவு செய்ய வேண்டியது அவசியமாகிறது. அது என்னவெனில் சுதந்திர இலங்கையில் கல்முனை வரலாற்றை எடுத்துப்பார்த்தால் கல்முனை தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக எம்.எஸ்.காரியப்பர் விளங்கிய காலத்திலும் அதன் பின்னர் ஏ.ஆர். மன்சூர் காலத்தில் தமிழர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கிய பல திட்டமிடப்பெற்ற பாரபட்சமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன. ஒப்பீட்ட அளவில் கல்முனை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக எம்.சி.அகமட் அவர்கள் விளங்கிய காலத்தில் தமிழர்களுக்கு விரோதமான செயற்பாடுகள் குறைவாக இருந்தன. ஆனால் பின்னாளில் அதாவது 1989 ம் ஆண்டிற்கு பின்னர் அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு பாரபட்சமான பல விடயங்களை "பாம்புக்கு நோகாமல் கம்புக்கும் நோகாமல்" என கச்சிதமாக திட்டமிட்டு அரசியல் சாதூரியத்துடன் தமிழர் விடுதலை கூட்டணியுடன் நல்லுறவை பேணிய வண்ணம் முன்னெடுத்தவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்ரஸ் கட்சியின் ஸ்தாபக தலைவரும் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சருமான எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்களே ஆவார். அவர் பணியை தற்போது ஹக்கிமும் மேற்கொள்கிறார். அதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு துணை போகிறது.

--- தொடரும் ---



# இலங்கை இந்திய காங்கிரஸ் : தோற்றமும் மாற்றமும்

## குடியுரிமை பறிக்கப்படும்போது பாராளுமன்றத்தில் இருந்த மலையக மக்கள் பிரதிநிதிகள்




## மலைகளைப் பேசவிடுங்கள்

**மல்லியப்புசந்தி திலகர்**

இலங்கை இந்தியகாங்கிரஸின் தோற்றம் நடேசய்யர் உருவாக்கிவைத்திருந்த அரசியல் சித்தாந்தத்துக்கு சவாலை ஏற்படுத்தியது. நடேசய்யரும் இந்தியாவில் இருந்து வந்தவர்தான் ஆயினும் இலங்கை வந்து சேர்ந்த தமிழ்நாட்டுத் தமிழர்கள் தங்களை இலங்கையர்களாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே நடேசய்யரின் சித்தாந்தமாக இருந்துள்ளது. நடேசய்யரின் எழுத்துக்களில் செயற்பாடுகளில் அவரது துணைவியார் மீனாட்சியம்மையின் பாடல்களில் அதற்கான ஆதாரங்கள் தாராளமாகவே உண்டு. உரை என்ற வகையில் ஒரு உதாரணத்தைக் கூறலாம். அதுதான் இலங்கை வந்த மகாத்மா காந்தியை சந்திப்பதையே மறுத்திருக்கிறார் கோ.நடேசய்யர். அதற்கு காரணம் தனிப்பட்டதானதல்ல.

இலங்கை வந்து சேர்ந்துவிட்ட லட்சக்கணக்கான தொழிலாளர் மக்களை இலங்கைக்குரியவர்களாக இருக்க விட்டுவிடுங்கள் என்பதுதான் நடேசய்யரின் காந்தி சந்திப்பு மறுப்புக்கு காரணம் என சொல்லப்படுகின்றது. எனினும் பின் பலரதும் சமாதானத்தின்பேரில் சந்தித்ததாகவும் சொல்லப்படுகின்றது. அத்தகைய சந்திப்பில் நடேசய்யர் நிச்சயமாக மகாத்மா காந்தியுடன் இந்த கருத்தைப் பகிர்ந்திருக்க வேண்டும். அது பற்றிய ஆதாரங்களை தேட வேண்டியுள்ளது.

நடேசய்யரின் இந்த உறுதியான மன எண்ணம்தான் தான் அரசியல் செயற்பாட்டை ஆரம்பித்து 1920 தொடங்கி 1930 வரையான பத்தாண்டு காலப்பகுதியில் நூறாண்டு கால அடிமை வாழ்க்கைக்குள் இருந்த மலையகத் தமிழ் மக்கள் 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பின்படி வழங்கப்பட்ட இலங்கைக்கான சர்வஜன வாக்குரிமையை பெறக் காரணமாகியுள்ளது.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக்கிடைக்கப்பெற்ற 1948ல் பறிக்கப்பட்ட வாக்குரிமையை மலையக மக்களுக்கு வாக்குரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டதாக சொல்வது அபத்தமானது. (அவ்வாறு வாக்குரிமையை மீளப்பெறுவதற்கு அந்த மக்கள் நடாத்திய போராட்டம்தான் மலையக மக்களின் நாட்டுரிமை போராட்டம் என்பதை பின்னர் நிறுவுகின்றேன்). அது அரசியல் நலன் சார்ந்து முன்வைக்கப்படும் கருத்து. 1931 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மலையகத்தமிழ் மக்கள் வாக்குரிமையை வென்றிருக்காவிட்டால் 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைவதற்க முன்பதாகவே 1936 – 1947 காலப்பகுதியில் நடேசய்யர் (ஹட்டன்), பெரி.சுந்தரம் (மஸ்கெலியா), வைத்திலிங்கம் (தலவாக்கலை) என்ற வரிசை சட்டசபையில் அங்கம் வகித்திருக்க முடியாது. 1947 – 1952 ஆண்டுகால இடைவெளியின் முதலாவது பாராளுமன்றில் (First Parliament) (இப்போது நான் அங்கம் வகிப்பது எட்டாவது பாராளுமன்றம்) எட்டு உறுப்பினர்கள் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருந்துள்ளனர். கே.ராஜலிங்கம் (நாவலப்பிட்டி), சௌமியமூர்த்தி தொண்டமான் (கம்பளை), சி.வி. வேலுப்பிள்ளை (தலவாக்கலை) குமாரவேல் (கொட்டகலை) ஆர்.மோத்தா (மஸ்கெலியா) எஸ்.எம்.சுப்பையா (பதுளை) கோ.ராமானுஜம் (உடுதும்பர - கண்டி) ஆகியோரோடு இடைத்தேர்தலில்
ஏ.அஸீஸ் அவர்களுமாக எட்டு பாராளுமன்ற உறுப்பிர்கள் இருக்கத்தக்கதாகத்தான் மலையக மக்களின் வாக்குரிமை இலங்கை பாராளுமன்றில் பிரஜாவுரிமை சட்டத்தின் ஊடாக (1948ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம்) மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிபோனது. இதற்கு துணைபோன "இலங்கைத் தமிழ்" தலைமைகள் பற்றிய விவாதம் வேறானது.



எனவே 1977 க்குப் பின்னதாக பறிக்கப்பட்ட வாக்குரிமையை மீளப்பெற்ற காலத்தை யாருடைய அரசியல் தேவைக்காகவும் மலையக மக்களின் வாக்குரிமை பெற்ற காலமாகக் காட்ட முயல்வது மலையக அரசியல் வரலாற்றில் 1920 முதல் 1977 வரையான அரை நூற்றாண்டுக்கு மேலான வரலாற்றை மறுதலிப்பதாகிவிடும். 100 ஆண்டு காலம் அடிமை வாழ்வில் வைத்திருந்த அதே பிரித்தானியரிடம் இருந்தே அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் இலங்கைக்கான குடியுரிமையைப் பெறும் அளவுக்கு அரசியல் மயப்படுத்திய நடேசய்யரின் ஆளுமையை இலகுவாக கடந்துசெல்ல முடியாது.

1947ஆம் ஆண்டு மரணமடையும் வரையான அவரது உடல்நிலை காரணமாக அவரது தேர்தல் தோல்வி அமைய அவரை யாரும் தோற்கடித்துவிட்டதாக காட்ட முயல்வதும் அந்த ஆளுமையை மறைக்க எடுக்கும் முயற்சியே. உண்மையில் 1947ல் வெற்றியடைய முடியாத அளவுக்கு அவர் சுகவீனமுற்றிருந்தார் என்பதுவே சரியானது. ஆனால் அவர் மலையக அரசியல் வரலாற்றில் தோல்வி அடைந்தவர் இல்லை.

இலங்கை இந்திய காங்கிரஸின் வருகை இவரது இழப்பிற்கு மாத்திரமல்ல அதுவரை மலையக தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுத்துவந்த தனித்தேசிய கருத்தாக்கம் இலங்கை மக்களாக தம்மை எண்ணும் அரசியல் கருத்தாக்கம் சவாலுக்கு உள்ளானது. எந்த காரணத்துக்காக இலங்கை வந்த காந்தியை நடேசய்யர் சந்திக்க மறுத்தாரோ அதற்கான அழுத்தமான காரணம் 1939 ல் இலங்கை வந்த நேருவினால் நிறைவேறியது.
கொழும்பைத் தளமாகக் கொண்டு ஏ.ஈ.குணசிங்கவுடன் தொழிற்சங்க செயற்பாட்டில் ஈடுபட்டுவந்த நடேசய்யர் தனியாகப் பிரிந்து சென்று இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை உருவாக்க காரணமே கொழும்பு தளத்தில் இடம்பெற்ற இனவாத நிலைப்பாடுகளே.

கொழும்பைத் தளமாகக் கொண்ட வணிகர்களான இந்தியர்களுக்கு ஏற்பட்ட இனவாத சிக்கல்களே அவர்களை இந்தியாவிடம் முறையிடச் செய்திருக்கின்றன. அப்போது பிரதமர் அல்லாத ஜவஹர்லால் நேரு இலங்கை வந்து இந்திய வணிகர்களுடன் கலந்துரையாடியுள்ளார். அப்போது அந்தக் கூட்டம் எண்ணிக்கையில் நூறைக்கூட கடக்காது, மிகச் சொற்பமாக இருந்துள்ளது. இந்த பலம் போதாது என்று உணர்ந்த நேரு இவ்வளவு அளவில்தான் இந்தியர்கள் இலங்கையில் வாழ்கிறார்களா என்ற கேள்வியை எழுப்பிய போதுதான் "அங்கே மலைப் பகுதியில் தொழிலாளர் கூட்டமாக" சில லட்சங்கள் வாழ்வதாக முதலாளிகளால் கைகாட்டப்பட்டிருக்கிறது. அதுபற்றி தேடி அறிந்த நேரு அந்த மக்களுடனான நடேசய்யரின் அரசியல் தொழிற்சங்க பணிகளையும் அறிந்து அவர்களையும் அணைத்ததாக "இந்திய, இலங்கை காங்கிரஸை" உருவாக்க உபதேசம் செய்துள்ளார்.

அதன் உருவாக்கத்தின் சில ஆண்டுகளிலேயே முதலாளிகளான வணிகர்களின் தேவை வேறாகிவிட அமைப்பு மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கான அரசியல் அமைப்பாக மாற்றம் பெற்றது. "இலங்கை இந்திய காங்கிரஸ்" என்ற கட்சியினூடாகவே இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் ஏழு பேர் அங்கம் வகித்திருந்தனர். பின்னர் 1948 ல் வாக்குரிமை பறிபோனதோடு இலங்கை இந்திய காங்கிரஸின் அரசியல் தேவை எழவில்லை. வாக்குரிமை இல்லாதபோது அரசியல் கட்சியின் பயன்பாடு என்ன என்ற நிலையில் அதுவே தொழிற்சங்கமாக மாத்திரம் இயங்கத்தொடங்கியது.

இப்படித்தான் இலங்கை "இந்திய" காங்கிரஸ், இலங்கைத் "தொழிலாளர்" காங்கிரஸ் என்ற தொழிற்சங்கமானது. அப்போது அதன் ஸ்தாபக தலைவராக இருந்தவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அல்ல மலையக காந்தி என வர்ணிக்கப்படும் 1947 ல் பாராளுமன்றில் இருந்த நாவலபிட்டி தொகுதி உறுப்பினராகவிருந்த கே.ராஜலிங்கம் என்பது இலகுவாக மறக்கப்பட்டுவிட்டது. இந்த பின்னணி கொண்ட உருவாக்கத்தாக்கம்தான் இன்றும் இலங்கை தொழிலாளர்
காங்கிரஸின் கொடி இந்திய தேசிய கொடியை ஒத்து நிற்பதற்கான காரணமாகும்.

(தொடரும்)



# பட்டறிவு

# நோர்வேயில் மனித குலத்தை மீட்கும் விதை வங்கி

இந்தப் பூமியின் அழிவு பற்றி தினசரி புதிய புதிய வடிவத்தில் பீதி கிளப்பப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். அந்த பீதி வெறும் புனைவல்ல. அது நமக்கு கசப்பான ஆனால், விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கபட்டுக்கொண்டிருக்கும் அறிவியல் உண்மை.


அதில் உள்ள மிகப்பெரிய சோகம் என்னவென்றால் அறியாமையால் கடந்துபோகக் கூடிய மனிதக் கூட்டத்தை விளங்கிக் கொள்ளலாம் ஆனால் அறிந்தவர்கள் கூட அசட்டையாக தமது தற்காலிக இலாபத்துக்காக மேலும் இந்த அழிவை வேகப்படுத்திக் கொண்டிருப்பது தான் இதன் ஆபத்து பற்றி உணர்ந்த பாமரர்களையும் கையறுநிலையில் சிந்திக்க வைத்துக்கொண்டிருக்கிறது.

இந்த அழிவைப் பற்றி பேசுவதல்ல இந்தக் கட்டுரை ஒரு வேளை இயற்கையாகவோ, செயற்கையாகவோ இந்த உலகம் அழிவுக்கு உள்ளானால் மறுபடியும் உயிர்கள் தழைக்க என்ன செய்ய முடியும் என்பது பற்றிய மாற்று வழிகளையும் தொடிக்கொண்டிருக்கிறார்கள் இன்னொருபுறம்.

பூமி வெப்பமயமாதல், ஓசோன் படலத்தில் ஓட்டை, சூழலில் மாற்றம் ஏதோ ஒரு காரணத்தால் ஒரு வேளை உலகம் அழிந்தால்?, விவசாயம் அழிந்து, பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டால்?, உலகம் அழிந்து அதில் தப்பிழைக்கும் சிறு மனித கூட்டம் உணவில்லாமல் உயிருக்குப் போராடினால்?

இது போன்ற கேள்விகளுக்கு பதிலைத் தான் நோர்வேயின் வடக்கில் இன்னும் சொல்லப்போனால் வட துருவ பகுதியில் ஸ்வால்பார்ட் (Svalbard) என்கிற இடத்தில அமைக்கப்பட்டுள்ள “உலக விதைப் பெட்டகம்”. இதனை இன்னொரு பெயராலும் அழைப்பார்கள் “பேரழிவுப் பாதுகாப்புப் பெட்டகம்” (Doomsday Seed Vault).





பேரழிவுப் பாதுகாப்புப் பெட்டகம்

இது போன்ற விதைப் பெட்டகம் உலகில் வேறு சில நாடுகளிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் நோர்வேயில் அமைக்கப்பட்டுள்ளத்து தான் உலகின் பெரிய விதை வங்கி. உலகம் முழுவதும் இருந்து பல நாடுகள் பல வகையான விதைகளை அந்த வங்கிக்கு அன்பளிப்பு சேமிக்கச் செய்திருக்கின்றன. இதன் அமைவிடம் இந்த உலகின் அழிவில் இருந்து தப்பக்கூடிய சாத்தியம் அதிகபட்சம் இருக்கக்கூடியதாக நம்பப்படும் இடம். அதன் சீதோஸ்ண நிலை கூட இந்த விதைகளை பல்லாண்டுகள் பாதுகாக்கக்கூடியது என்கிற அறிவியல் பூர்வமான வழிமுறைகளுடனேயே அமைக்கப்பட்டிக்கிறது.

ஸ்வால்பார்ட் நோர்வேக்கு வெளியில் வடதுருவத்தில் தனிப்பெரும்தீவாக

என்.சரவணன்

இருக்கிறது. கிட்டத்தட்ட இலங்கையின் பரப்பளவில் உள்ள தனித் தீவு இது. (ஸ்வால்பார்ட் ஸ்ரீ 61,022 மஅ2 , இலங்கை ஸ்ரீ 65,610 மஅ2).
வருடத்தில் மூன்று மாதங்கள் முழுமையான இருளில் தான் இந்தப் பிரேதேசம் இருக்கும். அதுபோல நள்ளிரவுச் சூரியனுடன் வசந்த காலத்தில் ஒரு மாதத்துக்கு மேல் இருக்கும். மொத்த சனத்தொகையே 2667 பேர் மட்டும் தான். அதிலும் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் நோர்வேஜியர்கள் அல்லாதவர்கள். அங்கே எந்த மரங்களையும் காண முடியாது. வசந்த காலத்தில் புற்களோடு சேர்ந்து வளரும் சிறு மலர்களைப் பறிப்பது கூட தண்டனைக்குரிய குற்றம் என்று எங்களிடம் மேயர் தெரிவித்தார். பனிக் கரடியின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக அங்குள்ளவர்கள் துப்பாக்கி வைத்திருப்பது சர்வ சாதாரணம். ஆர்க்டிக் கண்டத்தை ஆராய்வதற்கான சர்வதேச பல்கலைக்கழகமும் இங்கு தான் இருக்கிறது.

இன்றும் இந்தத் தீவின் மற்ற பகுதியில் சோவியத் யூனியனுக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கங்களும், சோவியத் யூனியனின் ஒரு குட்டி நகரமும் இருக்கிறது. அங்கே லெனினின் பாரிய சிலைகளைக் கண்டு ஆச்சரியமடைந்தோம். சோவியத் யூனியன் ஆக்கிரமித்து வைத்திருந்த பகுதியை அப்படியே அவர்களின் பயன்பாட்டுக்கு உடன்படிக்கையின் பேரில் அனுமதித்திருகிறது நோர்வே.

## விதை வங்கி

ஸ்வால்பார்ட்டிலுள்ள ஒரு மலையை 120 மீற்றர் தூரம் வரை குடைந்து உள்ளே அறைகளைக் கட்டி அமைக்கப்பட்டிருக்கிறது இந்த விதை வங்கி. மைனஸ் 18 பாகையில் இந்த விதை வங்கி பேணப்படுகிறது. எனவே இங்கு அந்த விதைகள் இயற்கையாகக் கெடாமல் பாதுகாக்க முடிகிறது.

இந்தத் திட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டளவில் 8.8 அமெரிக்க டொலர் மில்லியன்களை நோர்வே செலவு செய்திருந்தது. ஆனால் கடந்த பெப்ரவரி மாதம் இந்த விதை வங்கியின் பாதுகாப்பு பற்றிய ஒரு சிக்கல் எழவே, அதனை மீள ஒழுங்கமைப்பதற்காக 13 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியது நோர்வே அரசு.

2006 ஆம் ஆண்டு ஸ்கண்டிநேவிய நாடுகளான நோர்வே, ஸ்வீடன், பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லேண்ட் ஆகிய நாடுகளின் தலைவர்கள் வந்து கூட்டாக அடிக்கல் நாட்டினார்கள். இது திறக்கப்பட்டது 2008 ஆம் ஆண்டு. இதற்கிடைப்பட்ட 2007ஆம் ஆண்டு அது கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது அங்கே கிட்டத்தட்ட 15 பத்திரிகையாளர்களைக் கொண்ட குழுவுடன் நானும் சென்றிருந்தேன். சுற்றுச்சூழல் துறைக்கு பொறுப்பான எரிக் சொல்ஹைம் எங்களுடன் வந்தார். இலங்கையில் போர் நிலவியபோது சமாதானத் தூதுவராக இருந்த அதே எரிக் சொல்ஹைம் தான். அந்தப் பயணம் ஒரு சுற்றுச் சூழல் பயணம், சில நாட்கள் அங்கு தங்கியிருந்து வட துருவத்தில் பனிகள் உருகும் பிரதேசங்கள் வரை பயணித்து உண்மை நிலையைக் கண்டறிந்தோம். அது ஒரு ஓகஸ்ட் மாத வசந்த காலப் பகுதியாக இருந்ததினால் இருபத்திநான்கு மணிநேரமும் நள்ளிரவுச் சூரிய வெளிச்சத்தை அனுபவித்தோம் எங்கள் பயணமும் கடினமாக இருக்கவில்லை.

உலகம் முழுவதும் பல வகையான தாவரங்கள் அழிந்து, அடிச்சுவடே இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. இங்கே 13000 வருட பாரம்பரியமுள்ள விதைகள் வரை சேமிப்பில் உள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் மட்டும் 76,000 மாதிரி விதைகள் அங்கு சேர்க்கப்பட்டன. ஆகவே இப்போது 4.5 மில்லியனுக்கும் மேற்பட்ட விதை மாதிரிகள் அங்கு உள்ளன. 76 நாடுகள் இவ்வாறு விதைகளை வைப்பிலிட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லப்போனால் கோதுமை வகைகள் 140,000, அரிசி வகைகள் 150,000, பார்லி வகைகள் 70,000 இதில் அடங்கும்.

நம் இலங்கை மாத்திரம் 2527 விதமான மாதிரி 1,777,566 விதைகளை வைப்பு செய்திருக்கிறது (இந்தியா 72,161 மாதிரிகளைக் கொண்ட 94,931,359 விதைகள்). இப்படி வைப்பு செய்யப்பட்ட விதைகளை மறுபடியும் மீளப் பெறும் உரிமை வைப்பு செய்த அந்தந்த நாடுகளுக்கு உண்டு. அவர்களின் இணையத்தளத்தில் இதுபற்றிய விபரங்கள் நாளாந்தம் துல்லியமாக புதுப்பிக்கப்படுகிறது. நீங்களும் பார்வையிடலாம் (http://www.seedvault.no/).

மீளப் பெற்ற முதலாவது நாடு

தொடர்ச்சி... (பக்கம் -21 )

## பழைய மாணவர் ஒன்றுகூடல்



கனடா நாட்டில் வாழும் கொழும்பு விவேகாநந்தா கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒன்று கூடல் கனடாவின் மார்க்கம் மாநிலத்தில் மில்னி பூங்காவில், கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதன் போது பிடிக்கப்பட்ட படம்.












## மூதாதையரின் காலடிகள்

# கடற்கரைச்சேனை, சம்புக்களி, பத்தினியம்மன் குளிர்த்தி வேள்வி!

“வம்பலர் தேவியே செம்பியர் பதிவாகி
வம்பொடு பாண்டியன் மறுநீதி கேட்க
வெம்பியே உன்தனம் வெட்டிநீ எறிய
வினைகளொடு துட்டர்படை
கோதாரி மாள
நம்பிக்கை கொண்டு நல்
வைகாசித் திங்கள்
நித்திலம் நீயேகி பூசைமடை வாங்கி
சம்புக் களியுறையும் சிலம்பணியு மாதே
சக்திநீ பத்தினி சீக்கிரம் வாவா!““
--கொட்டியாரன்--

கண்ணகி வழிபாடு ஈழத்தில் தொன்மையான நம்பிக்கைகளில் ஒன்று. வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் தமிழ் சிங்கள மக்களிடையே காலம் காலமாக தொடரும் ஒரு பண்பாட்டு படர்ச்சி.

தமிழ் மக்களிடையே மட்டக்களப்பு அம்பாறை வடக்கு பிரதேசங்களில் கண்ணகி எனவும் திருகோணமலையில் பத்தினி கண்ணகி எனவும் வழிபடும் மரபு காணப்படுகிறது.

திருகோணமலையில் குளக்கோட்டு மன்னன் காலத்திலேயே பத்தினி வழிபாடுகள் காணப்படுகின்றன. கந்தளாய் குளக்கட்டோடு இருக்கும் குளக்கட்டு பத்தினியை இதற்கு ஆதாரமாக கொள்ள முடியும். பாலம்பட்டாறு பத்தினியதையும் இந்த மரபோடு இணைத்தே பார்க்க வேண்டும்.

கண்ணகி பற்றிய முதல் காவியமான சிலப்பதிகாரம் உரை சால் பத்தினியென்று விழிப்பது பத்தினி என்ற சொல்லின் பழமையயை உணர்த்தி நிற்கிறது. கிழக்கின் முதுசமாகக் கொண்டாடப்படும் கண்ணகி வழக்குரை கண்ணகி என்ற பெயரிலேயே கால் பதித்து நிற்கிறது.

கண்ணகி கதை என்பது தமிழ் நிலத்துடன் பல்லாயிரம் வருச பண்பாட்டின் தொடர்ச்சியே. சங்க இலக்கியமான நற்றிணை

“ஒரு முலை திருகிய திருமா உன்னி“


என குறித்து நிற்பதும் மலை வேடுவர்கள் சொல்லிய கதைகளை வைத்துக் கொண்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை படைத்தார் என்பதும் இது தமிழ் நிலத்தின் மிகத் தொன்மையான கதை என்பதை நிருபித்து செல்கிறது. அத்தோடு சிலப்பதிகாரம் குறிக்கும் சாலினி எனும் பாத்திரம்

“கொங்கைச் செல்வி குடமலையாட்டி“

என்று தொடர்வதும் கண்ணகியின் தெய்வீகப் பண்பை வலியுறுத்தி நிற்கிறது.

தமிழ் சிங்கள மக்களிடையே கண்ணகி கலாசாரம் பரவி இருந்தாலும் சில ஒற்றுமைகளை கொண்டிருந்தாலும் ஒவ்வொரு பண்பாட்டுக்கும் தனித்துவமான பண்புகளுடன் கண்ணகி கொண்டாடப்படுகிறாள்.
கண்ணகி ஈழ நிலத்துடன் அறாத தொடர்ச்சியயை பெற்றிருப்பதும் அதன் தொடர்ச்சி இன்று வரை நீள்வதும் ஒரு தொன்மை கலாசாரத்தின் வரலாறே.

ஏழாயிரம் வருசத்துக்கு முந்திய பகுறிளியாற்று படுக்கைகளும் தமிழ்



நிலத்தின் நீட்சியை பேச அழிந்து போன தமிழ் இலக்கியங்களும் கொண்டாடிய ஒரு கதையாகவே கண்ணகி கதை இருந்திருக்கிறது. கடல் கோளினால் தாய் நிலத்திலிருந்து பிரிந்த ஈழ நிலத்தோடு கண்ணகி கதையும் சேர்ந்து வந்திருப்பதற்கான சாத்தியங்கள் நிறையவே உண்டு.

கஜபாகு மன்னன் சேரன் செங்கூட்டுவன் நடத்திய கண்ணகிக்கு சிலையெடுத்த விழாவுக்கு சென்றபோது கண்ணகி சிலையும் சந்தணப் பேழையும் கொனர்ந்ததாகவும் அதுவே கண்டி பத்தினி கோயிலில் வழிபாட்டு பண்பாடாக நீள்வதாகவும் அதன் மூலமே சிங்கள மக்கள் மத்தியில் பத்தினி வழிபாடு பரவியதாகவும் நம்பப்படுகிறது.

சிங்கள கிராமங்களில் காவல் தெய்வமாகவே



கண்ணகி போற்றப் படுகிறாள் பெரும்பாலும் விகாரைகளை அண்டிய இடங்களில் பத்தினிக்கு கோயிலகள் உள்ளன. வீடுகளில் பத்தினி தெய்யோ வழிபாட்டு சடங்குகள் வருடம் தோறும் நிகழ்த்தப் படுவதும் இங்கு கவனத்துக்குரியது.

வற்றாப்பளையில்ல் கண்ணகி வழிபாடு வந்ததற்கான தனியான கதை சொல்லப் படுகிறது. இன்று வற்றாப்பளை கண்ணகி வழிபாட்டில் இருவிதமான மரபுகளும் காணப்படுகின்றன கண்ணகி கதை படித்தலும் கோவலன் கதை கூத்தும் உடுக்கடி பாடலும்



ஆகமம் சாராத தமிழ் வழிபாட்டை பேச, வருடம் தோறும் வைகாசிப் பொங்கலாய் கொண்டாடப்பட. மறுபுறம் ஆரிய மயப்பட்ட

**பால.சுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசாரப் புலம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**

வழிபாட்டு நடைமுறைகள் வருடம் தோறும் பின்பற்றப்படுவது முரண் நகையே.

வடக்கில் நாவலர் காலத்தில் கண்ணகி கோயில்கள் ராஜராஜேஸ்வரி அம்மனாக மாற்றப்பட பல கிராமங்களில் இன்னமும் கண்ணகி வழிபாடு ஈழ நிலத்துக்குரிய தனித்துவமான முறைகளோடு வருடம் தோறும் வைகாசி மாதத்து சிறப்பு நிகழ்வுகளாக தொடர்கிறது.

கிழக்கு மாகாணத்தில் பாணம தொடக்கம் தென்னமரவாடி வரை நீளும் தமிழர் பண்பாட்டில் கண்ணகி கலாசாரம் பெரு



மரபாக நீள்கிறது கிராமம் தோறும் கண்ணகிக்கு கோயிலகளும் வருடம் தோறும் கதவு திறந்து ஏழு நாட்கள் சடங்காக வாழ்வோடு இணைந்த பண்பாடாக தொடர்கிறது.

ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு கதைகள் சொல்லப்படுவதும் அதையொட்டி பாடப்படும் இலக்கியங்களும் இங்கு முக்கியம் பெறுகின்றன. கண்ணகி காவியம், ஊர் சுற்றுக் காவியம், கண்ணகி வழக்குரை, கண்ணகி காவியம், என இலக்கிய மரபாக செழுமை பெறும் ஒரு பண்பாட்டு அடையாளமாக இன்று வரை தொடர்கிறது.

கண்ணகி குளிர்த்தியே கிழக்கு மாகாண கண்ணகி வழிபாட்டின் முக்கிய பேசு பொருளாகும். சேனையூர் கட்டைபறிச்சான் பிரதேசத்தை அண்டிய வயல் பிரதேச குளங்களை அண்டி குளக்கட்டு பத்தினி வழிபாடு வயல் நில வாழ்வின் நம்பிக்கையாக நீட்சி பெறுகிறது. குளக்கட்டு பத்தினி இங்கும் ஒரு காவல் தெய்வமாகவே பார்க்கப்படுகிறாள். பச்சப் பாக்கு பச்ச வெத்திலை வைத்து வருசம் தோறும் மடை வைத்து வழிபடும் முறை இன்றும் தொடர்கிறது. பச்சை வெத்திலை பச்சை வாழைப்பழம் சூழலியலை நேசிக்கும் ஒரு குறியீடு எனவும் விளங்கிக் கொள்ளலாம்.

சம்புக்களி பத்தினி அம்மன் வைகாசி மாதத்துப் பொங்கலும் இந்த மரபின் நீட்சியே. பரம்பரை பரம்பரையாக சேனையூர் காளியப்பு பூசாரி அவர்கள் குடும்பத்தினரால் கடற்கரைச்சேனை சேனையூர் கட்டைபறிச்சான் மக்களின் ஆதரவுடன் ஒரு பரிகல வேள்வியாக பத்ததி முறை சார்ந்த வழிபாடாக தொடர்ந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

1970களில் ஒரு பரிபாலன சபை அமைக்கப் பட்டு காலத்துக்கு காலம் புதிய நிர்வாக சபைகள் மூலம் நிர்வகிக்கப்பட்டு தொடர்கிறது. திரு.திருநாவுக்கரசு தலைமையில் புதிய மாற்றங்களைப் பெற்றதும் பின்னர் திரு.சித்திரவேலாயுதத்தால் புனர்நிர்மாணம் பெற்றதும் இன்று இளைஞர்கள் தலைமைத்துவத்தில் புதிய பண்பாட்டு மலர்ச்சியாக தொடர்வதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் பத்தினி வழிபாட்டில் பரிகல வேள்வி முறை சம்புக்களி பத்தினி அம்மன் வழி பாட்டிலேயே காணப்படுகிறது.

இங்கு பாடப்படும் கண்ணகி குளிர்த்தி இசை மரபு ஈழத் தமிழர்களின் தனித்துவமான இசை மரபின் மூலங்களை கொண்டுள்ளது.

ஈழ பண்பாட்டியல் வரலாற்றில் பல்லாயிரம் வருச பண்பாட்டின் நீட்சியாகவே சம்புக்களி பத்தினி பண்பாடு காணப்படுகிறது.

“வைகாசி திங்கள் வருவேன் என்று வரிசைக்கிசைந்து விடை கொடுத்தார்“

என வரும் கண்ணகி குளிர்த்தி பாடல் வரிகளுக்கு ஏற்ப வைகாசிப் முழு நிலவு நாளை அடியொற்றி வரும் திங்கட்கிழமை சேனையூர் வர்ணகுலப் பிள்ளையார் கோயிலிலிருந்து மாலை மடைப்பெட்டி எடுத்து, இரவிரவாக சடங்குகள் நடத்தப்பட்டு உப்பு நீரில் நெய் திரி கொண்டு விழக்கேற்றி, விடிகாலையில் பொங்கல் தொடர குளிர்த்தி பாடலும் பரிகல பூசையுமாய் சடங்கு நிறைவுறும் கடற்கரைச்சேனை, சம்புக்களி, பத்தினியம்மன் குளிர்த்தி வேள்வி.



# கலைஞர் கௌரவிப்பும் சிறப்புமலர் வெளியீடும்.



மட்டுநகர், ஆரையம்பதி மண்ணின் கலை அமைப்பான “கா“ கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கிழக்கிலங்கையினதும் ஆரையம்பதியினதும் மூத்த கலைஞரான மு.கணபதிப்பிள்ளையவர்களின் (வயது 96) கலையிலக்கியச் சேவையைப் பாராட்டிக் கௌரவித்து சிறப்பு மலர் வெளியீடும் நிகழ்வு, ஆரையம்பதி கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை(30) இடம்பெற்றது.

கிழக்குப்பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மா.உதயகுமார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். ஆரையம்பதி பிரதேச சபை தவிசாளர் கௌரவ சோ.மகேந்திரலிங்கம், பிரதேச செயலாளர் திருமதி. ச.நமசிவாயம், மட்டக்களப்பு கல்வியில் கல்லூரி பீடாதிபதி சி.ராஜேந்திரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கிழக்கு பல்கலை ஓய்வு நிலை பேராசிரியர் செ.யோகராசா, வட-கிழக்கு மாகாண முன்னாள் கலாசார பணிப்பாளர் செ.எதிர்மன்னசிங்கம், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.றஞ்சிதமூர்த்தி ஆகியோர்



சிறப்பு அதிதிகளாகவும், ஆரையூர் ஆற்றல் பேரவைத் தலைவர் பூ.பிரசாந்தன், மட்டு தமிழ்ச்சங்க செயலாளர் வே.தவராசா, மூத்த நாடக நெறியாளர் க.செல்லத்தம்பி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

கா கலை இலக்கிய வட்டத் தலைவர் ச.மணிசேகரனின் வரவேற்புரையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாவட்ட செயலாளர் மா.உதயகுமார், கா கலை இலக்கிய வட்டம் மற்றும் மூனாக்கானா ஆகியோரிடமிருந்து மூனாக்கானா தொடர்பான சிறப்பு மலரின் முதற் பிரதிரதியாக பெற்றுக்கொண்டதுடன் சிறப்புமலர் பார்வையினை மகுடம் சஞ்சிகையாசிரியரும் மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவருமான வி.மைக்கல் கொலினும் கலைகளினூடாக மூனாகானா தொடர்பாக கவிஞர் ஆரையூர் இளவலும் இலக்கியத்தினூடாக மூனாகானா சார்ந்து பேராசிரியர் செ.யோகராசாவும் உரையாற்றியிருந்தார். கலைஞர் மூனாக்கானா ஏற்புரையினையும் கா இலக்கிய வட்டத்தின் செயலாளரும் வணக்கம் ஆரையம்பதி இணையத் தளத்தின் இயக்குனருமான சொக்கலிங்கம் பிரசாத் நன்றியுரையினையும் ஆற்றியிருந்தார்கள்.
(களுவாஞ்சிக்குடி நிருபர்)

# ராஜசிங்கன் கட்டிய கோயிலுக்கு செப்புக் கூரை வேய்ந்தவர்



கப்புறாளைமார்களுடன் விநாயகமூர்த்தி ஆச்சாரியார்



கந்தனின் கூரையை செப்பனிட்ட தச்சுச் தொழிலாளியும் உதவியாளரும்

**கி.மு.** 500-ம் ஆண்டளவில் விஜயன் அமைத்த கோயில் என யாழ்ப்பாண வைபவமாலை, எல்லாளன் மன்னனை வெல்வதற்காக துட்டகைமுனு கி.மு 101 கோயில் அமைத்தான் என்று கந்தஉபாத என்ற சிங்கள நூல் என பல்வேறுபட்ட தொன்மக்கதைகள் கதிர்காம முருகன் கோயிலை அமைத்தற்கான காலகோடுகளை



களிமண் சிற்பம் செய்யும் விநாயகமூர்த்தி ஆச்சாரியார்



கந்தனின் கூரையை செப்பனிட்ட தச்சு தொழிலாளி

காட்டி நிற்கின்றன. இப்போது நாம் காணும் ஆலயம் இரண்டாம் இராஜசிங்கனால் 1634 ஆம் ஆண்டு கட்டப்பட்டது என பொதுவாக சரித்திர ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

என்ன கதிர்காமம் கோயில் பற்றி பேசுகிறோம் என்று சிந்திக்கின்றீர்களா..?

சொல்லுகின்றேன் தொடருங்கள்...

அண்மையில் ஓவியர் குலராஜ் அவர்களுடன் உரையாடிய போது நம்மவர் பற்றிய தகவல் ஒன்றை பகிர்ந்திருந்தார்.

“கதிர்காமக் கந்தனுக்கு செப்புக் கூரை வேயும் திருப்பணிக்கு பங்களிக்க விரும்பிய இல்ங்கை மக்கள் ஒரு ரூபா நிதி உதவி செய்யுங்கள்” -- இது 1955 ஆம் ஆண்டில் தமிழ் சிங்கள தேசிய பத்திரிகைகளில் வெளிவந்திருந்த விளம்பரம்.


இவ் விளம்பரத்தை கொடுத்தவர் மட்டக்களப்பு விநாயகமூர்த்தி ஆசாரியார்.

விளம்பரம் பார்த்து பலர் பணம் அனுப்ப ஒவ்வொரு ஒரு ரூபா மணி ஓடரையும் மாற்றி பெரும் தொகையை திரட்டினார் விநாயகமூர்த்தி.



செப்பு தகட்டால் வேயப்பட்ட கதிர்காமம கூரை

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு செப்பு தகடுகளை வரவழைத்து அவற்றை சீராக்கி, மட்டக்களப்பில் மரம் அறுத்து தகட்டையும் அதற்குரிய



வயலின் இசைக்கும் விநாயகமூர்த்தி ஆச்சாரியார்

மரங்களையும் கதிர்காமத்திற்கு கொண்டு சென்றார். அத்தோடு ஓடுகளை வேய்வதற்கு மட்டக்களப்பை சேர்ந்த இரண்டு தச்சு வேலைக்காரர்களை அழைத்தும் சென்றிருக்கின்றார்.

ஏற்கனவே இருந்த ஓடுகளை அகற்ற கந்தனின் கூரையில் ஏறிய போது ஒருதடவை அல்ல இருதடவை தவறி கிழே விழுந்துதிருக்கின்றார்கள் மட்டக்களப்பில் இருந்து சென்ற அந்த தொழிலாளிகள். அவர்களை மட்டக்களப்புக்கு திருப்பி அனுப்பிவிட்டு கதிர்காமத்தில் தங்கியிருந்த விநாயகமூர்த்தியை, கப்புறாளை காலையில் சந்தித்து ‘‘திசமாராமயில் இருக்கும் தச்சு தொழிலாளி ஒருவரின் பெயரை கூறி, அவரை அழைத்து ஓடுகளை வேயுமாறு கந்தனின்

**பிரசாத் சொக்கலிங்கம்**

உத்தரவு” என தகவல் கூற. குறித்த தொழிலாளியை அழைத்து செப்பு கூரையை வேய்ந்து முடித்தாராம் விநாயகமூர்த்தி ஆச்சாரி. மிகவும் வயது முதிர்ந்த அந்த தொழிலாளியுடன் காப்புறாளைகளும் இணைந்து பணிபுரிந்தனராம்.

மட்டக்களப்பு கணபதிப்பிள்ளை - ஆரையம்பதி ராசம்மா அவர்களின் மூத்த புதல்வனாய் பிறந்த விநாயமூர்த்தி சிறந்த நகைவேலைக் கலைஞர். சுடுமண் சிற்பங்கள் செய்வதில் திறமை வாய்ந்தவர் என்பதோடு மட்டக்களப்பின் வயலின் வாத்தியம் இசைப்பதில் முன்னோடியாகவும் திகழ்ந்திருக்கின்றார். இவரின் மகன் ஈஸ்வரராஜா திரைச்சீலை வடிவமைப்பதில் வல்லவா அவரது மகன் குலராஜ் நாடறிந்த ஓவியர். என விநாயக மூர்த்தி ஆச்சாரியின் கலைப் பரம்பரை இன்றும் தொடர்கின்றது.

ராஜசிங்கன் கட்டிய கோயிலுக்கு செப்பு கூரை வேய்ந்த பக்தன் ஆனார் விநாயகமூர்த்தி ஆச்சாரி

# பன்குடாவெளியில் – 90...



**ச**ம காலத்தில் ஈழத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் உலகமறிந்த இளம் ஓவியக் கலைஞர்களுள் ஒருவராக மட்டக்களப்பைச் சேர்ந்த சுசிமன் நிர்மலவாசன் அவர்கள் திகழ்கின்றார். ஓவியப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியராகவும், பல்கலைக்கழக பகுதி நேர வளவாளராகவும் விளங்கும் சு.நிர்மலவாசன் அவர்கள் இடையறாது தொடர்ச்சியாக ஓவியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்.


மட்டக்களப்பிலும் கொழும்பிலும் வடக்குக் கிழக்கின் பிற மாவட்டங்களிலும் தனியாகவும் குழுவாகவும் இவர் காண்பியக் கலைக் காட்சிகளை நடத்தி வருகின்றார். நிர்மலவாசன் அவர்கள் தொடர்ச்சியாக இயங்குவதன் காரணமாகவும், தனது சிறந்த ஓவியப் படைப்புக்களுடாகவும் தேசிய அளவிலும் சர்வதேச மட்டத்திலும் அறியப்பட்ட ஈழத்தின் இளம் ஓவியர்களுள் ஒருவராக தடம் பதித்துள்ளார்.

து.கௌரீஸ்வரன்

கடந்த 2016 ஆம் வருடம் இந்தியாவின் கோவா மாநிலத்தில் நடைபெற்ற சர்வதேச மட்டத்திலான துணைக்கண்டங்களுக்கிடையிலான ஓவியக் கண்காட்சிக்கு இலங்கையிலிருந்து தெரிவாகிய கலைப்படைப்புக்களுள் இவருடைய ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை இவரின் சர்வதேச பிரபல்யத்திற்கு எடுத்துக் காட்டாகவுள்ளது.



நிர்மலவாசனின் காண்பியப் படைப்புக்களில் மிகப் பெரும்பாலானவை ஈழத்தின் சமகால வாழ்வியல் அனுபவங்களின் கலைத்துவ வெளிப்பாடுகளாக




அமைந்துள்ளன. குறிப்பாக போரும் அது தந்த விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளமையினை உய்த்துணர முடிகின்றது.
பின்னை நவீனச் சூழலில் ஓவியக் கலையின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தும் படைப்புக்களாக நிர்மலவானின் கலையாக்கங்கள் விளங்கி வருகின்றன.

இந்த வகையில் இவருடைய மற்றுமொரு காண்பியக் கலைக் காட்சி மட்டக்களப்பின் பன்குடாவெளி எனும் ஊரில் எதிர்வரும் 15.07.2018 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 09:00 – பி.ப 06:00 மணி வரைக்கும் கண்ணாடிப் போடியார் வீட்டுச் சூழலில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சிக்கான ஒத்துழைப்புக்களை மூன்றாவதுகண் நண்பர்களும், பன்குடாவெளி எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தினரும், பன்குடாவெளி இந்து இளைஞர் மன்றத்தினரும் வழங்கியுள்ளார்கள்.

இந்த காண்பியக் கலையின் காட்சியினுடைய தலைப்பு 90 (தொண்ணூறு) என்பதாகும். இத்தலைப்பு இக்காண்பியக் கலைப் படைப்பாக்கத்தின் உட்பொருளையும், அதன் முக்கியத்துவத்தினையும் உணர்த்துவதாக உள்ளது எனலாம்.

அதாவது ஈழத்தின் வரலாற்றில் அசாதாரண கால கட்டத்தில் மட்டக்களப்பில் 1990 ஆம் ஆண்டு பல்வேறு கசப்பான அனுபவங்களைத் தந்த வருடமாக, அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்களால் என்றும் மறக்க முடியாத அனுபவங்களின் ஆண்டாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் கணவன்மாரை இழந்த பெண்களை அதிகளவில் உருவாக்கிய ஆண்டாக, பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மார்களை அதிகமாக்கிய ஆண்டாக, இடப்பெயர்வுகளையும், அகதி வாழ்வையும் விரிவாக்கம் செய்த, வளமான வாழ்வைச் சீரழித்த... இன்னுமின்னும் பல்வேறு கசப்பான அனுபவங்களை உருவாக்கிய வருடமாக ஈழத்தமிழர்களின் நவீன வரலாற்றில் குறிப்பாக கிழக்கு மகாணத்தின் வரலாற்றில் 1990 ஆம் ஆண்டு விளங்கியது.

இந்தக் கசப்பான அனுபவங்களின் காலத்தில் மட்டக்களப்பில் பன்குடாவெளி கொடுத்த அனுபவங்களை அடியொற்றி அக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த சு.நிர்மலவாசன் அவ்வூரில் முக்கியம் பெற்றிருந்த கண்ணாடிப்போடியார் வீட்டில் தனது படைப்புக்களை காட்சிக்கு உட்படுத்துகின்றார். இக்கலைப் படைப்புக்களின் பூரண விளக்கத்தையும் அதனால் உருவாகக்கூடிய அனுபவங்களையும் அவ்வூரின் அந்த வீட்டுச் சூழலில் பெறுவதே பொருத்தமானது என்ற அடிப்படையில் இக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே! கலையாக்கங்களிலும் அதுசார்ந்த செயற்பாடுகளிலும் அக்கறை செலுத்தும் அனைவரும் பன்குடா வெளி எனும் அழகிய ஊரில் நடைபெறவுள்ள இக்கலையாக்க காண்பியக் காட்சியைப் பார்த்து அது தரும் அனுபவங்களைப் பகிர்ந்து நமது சூழலில் ஆக்கபூர்வமான கலையாக்க வல்லமைகளை வலுப்படுத்துவோமாக...

## அமரர் தங்கத்துரையின் 21 ஆம் ஆண்டு நினைவு நாள்




மூதூரின் முத்து எனவும் கொட்டியாரத்து அரசியல் தலைமகன் எனவும் போற்றப்பட்ட மூதூர் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபையின் முன்னாள் தலைவருமான அமரர் தங்கத்துரை அவர்களின் 21 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 15.07.2018 ஞாயிற்றுக்கிழமை கலை 9 மணிக்கு கிளிவெட்டி மகாவித்தியாலய அரங்கில் அனுஸ்டிக்கப்படுகிறது. மூதூரின் அரசியல் வரலாற்றில் 1970 ஆம் ஆண்டு ஒரு புரட்சிகர மாற்றத்திற்கு வித்திட்டு, அரசியல் உரிமைகளுக்காகவும் அபிவிருத்திக்காகவும் எப்படி செயல்படுவது என்று கற்றுத் தந்தவர் அரசியல் தலைவர் திரு. தங்கத்துரை அவர்கள்.

(சேனையூர் நிருபர்)

## சிறுநீரகம் தேவை

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.
தொடர்புகளுக்கு : 0771837646





# நக்கீரப் பார்வை

## நக்கீரன் சிவபெருமான் கதை
## நக்கீர ஞாயம் பேசியவள் கண்ணகி

**இ**ந்தக் கதை நீங்கள் அறிந்த கதை, தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பிரபலமான கதையும் கூட. இக்கதை திருவிளையாடற் புராணத்தில் இடம்பெறுகிறது. பாண்டிய மன்னனுக்கு ஒரு சந்தேகம் வந்து விடுகிறது. சந்தேகம் தன் மனைவி கூந்தலில் வீசும் வாசம் செயற்கையா, இயற்கையா என்பதுதான், தன்சந்தேகத்தைத் தீர்க்கும் கவிஞர்களுக்குப் பரிசளிப்பதாக மன்னன் முரசறைகிறான். ஏழைப் புலவனான தருமி எப்படியாவது அப்பரிசை அடைய துடிக்கிறான். அவனுக்குச் சிவபெருமான், ஓர் கவிதை எழுதிக்கொடுக்கிறார். ஒரு வண்டை விளித்து "பூக்களில் தேனை உறிஞ்சுவதை வாழ்வாகக் கொண்டுள்ள வண்டே பாண்டிய மன்னன் மனைவியின் கூந்தலைவிட நறுமணம் வீசும் வேறு ஏதாவது மலரைக் கண்டுள்ளாயா?"என்று கேட்பதாக அப்பாடல் அமைகிறது. இதன்படி பாண்டிய மன்னன், "மனைவிகூந்தல் வாசம்" இயற்கையானது என்று கூற வருகிறார்

புலவரான சிவபெருமான்

---

இப்பாடலை தருமி கொண்டு சென்று அரசவையிற் பாடிக்காட்டுகிறான். அரசன் தன் ஐயம் தீர்த்தமைக்கு தருமிக்கு பரிசு வழங்க முன் வந்தபோது, நக்கீரன் எனும் தலைமைத் தமிழ்ப்புலவர் அதனைத் தடுத்து, அப்பாடலில் பொருள் குற்றம் உள்ளதெனவும், அது பரிசுக்குரிய பாடல் அல்ல எனவும் கூறுகிறார். தருமி சென்று புலவர் வேடத்திலிருந்த சிவ பெருமானை சபைக்கு அழைத்து வருகின்றான். சபையில் கவிதையின் பொருள் சம்பந்தமாக சிவபெருமானுக்கும், நக்கீரனுக்குமிடையே வாக்குவாதம் உண்டாகிறது. பெண்களின் கூந்தலுக்கு இயற்கை வாசம் இல்லை மலர்கள் சூடுவதாலும், வாசனைத் திரவியங்கள் பூசுவதாலும் வரும் செயற்கை வாசமேயுண்டு என வாதிடுகிறான் நக்கீரன் "நீ வழிபடும் சிவபெருமானின் மனைவி உமாதேவியின் கூந்தலில் வீசும் வாசமும் அப்படியோ" என அதிகாரத் தொனியில் மிரட்டிய சிவனைப் பார்த்து "அதுவும் அவ்வாறே" என்கிறான் நக்கீரன். நக்கீரனை பணிய வைக்க தன் நெற்றிக்கண்ணைக் காட்டுகிறர் சிவபெருமான். அதற்கும் பயப்படாமல் நக்கீரன் "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே"என அஞ்சாது கூறிப் பணிய மறுக்கிறான். அவனைப் பணிய வைக்க கடவுள் எனும் தன் அதிகாரத்தைப் பிரயோகிக்கிறார் சிவபெருமான். அவனைப் பொற்றாமரைக் குளத்தில் வீழ்த்தி அருளும் வழங்குகிறார்.



சிவபெருமான், எதிர்த்துக் கேள்விகேட்ட ஒரு புலவனைத் தன் அதிகாரத்தினால் சிவபெருமான் மிரட்டிப் பணிய வைத்த இந்தக் கதை, சிவனின் திருவிளையாடல்களில் ஒன்றாக திருவிளையாடற் புராணத்தில் வருகிறது. சிவனின் திருவிளையாடல்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. இக்கதையை நாம் ஓர் தொன்மக்கதை எனலாம்.

தொன்மம் தொன்மம் என்றால் என்ன? தொன்மம் என்பதற்கு இயற்கை அல்லது வரலாற்றுக் கூறு தொடர்பான செய்திகளை உட்கொண்டதும், இயற்கையிகந்த செயல் நிகழ்ச்சி பற்றியதுமான பொய்யான புனைந்துரை என்று வரைவிலக்கணம் தரப்படுகின்றது. பொய்யான புனைந்துரையாயினும் அதற்குள் அச்சமூகத்தின் வரலாறு இயற்கை பற்றிய அச்சமூகத்தின் நோக்கு என்பன ஆழமாகப் புதைந்து கிடக்கும். இப்புனைந்துரைகள் அரசர் பற்றியும் இருக்கும். தெய்வம் பற்றியும் இருக்கும். அரசர்பற்றி வருவனவற்றை பழமரபுக்கதைகள் (Legends) என்றும் தெய்வம் பற்றியுள்ளவற்றை தொன்மங்கள் (Myths) என்றும் குறிப்பிடுவர். இத் தொன்மங்கள் மிகப்பழமையானவை சமூகத்தின் அடிமனதில் ஆழப்பதிந்தவை. அச்சமூகத்தை உள்நின்றியக்கும் சக்தி வாய்ந்தவை. உண்மையைவிடத் தொன்மம் சக்தி வாய்ந்தது. (myth Is Powerful Than truth) என்பர் தொன்மத்துக்காக உயிரைக் கூடக்கொடுப்பர். ஒரு சமூகத்தினை இனத்தினை அல்லது ஓர் இனக்குழுமத்தினை அறிந்து கொள்ள அவற்றின் பண்பாடு நடத்தை உளவியல்களைப் புரிந்து கொள்ள அச்சமூகத்தின் இனத்தின் அல்லது இனக்குழுமத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள தொன்மங்கள் (Myths) உதவுகின்றன.




இத் தொன்மங்கள் வாய்மொழியாகவும் வழக்கிலிருக்கும். இத்தொன்மங்கள் பற்றிய ஆய்வு பண்டைய சமூகத்தின் கூட்டு மனதை, அச்சமூகத்தின் உளவியலை, அச்சமூகம் இயங்கிய முறைமைகளைப் புரிந்துகொள்ள உதவுவன மாத்திரமன்றி, அச்சமூகத்தின் இன்றைய செயற்பாடுகளையும் புரிந்து கொள்ள உதவுபவை. இத் தொன்மம் நமக்குத் தரும் செய்தி என்ன?

தொன்மத்தின் உட்கரு

---

இத்தொன்மத்தை நுணுகி நோக்கினால் நக்கீரன் சொன்ன வாதத்தை தன்மனைவியான இன்னொரு கடவுளான உமையின் துணைகொண்டு முறியடிக்க முயற்சிக்கிறார் சிவபெருமான். பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட பிரச்சனை அவன் மனைவியின் கூந்தல் வாசனை பற்றியதே. அதன்படி நக்கீரன் வாதமே சரியானது. கவிதையில் அவன் காண்பது பொருட் குற்றமே. பொருட் குற்றத்தைச் சரியான படி சுட்டிக்காட்டிய நக்கீரன் நெற்றிக்கண் என்ற அதிகாரத்தால் அடக்கப்படுகிறான் நெற்றிக்கண் இங்கு அதிகாரத்தைக் குறிக்கிறது.

தன்னோடு வாதிட்ட நக்கீரனை வாதில் அல்லவா சிவன் வென்றிருக்க வேண்டும். வாதிட்டு வெல்ல முடியாத இடத்து அதிகாரத்தைப் பிரயோகித்து அடக்கும் அதிகாரம் மிகுந்த ஒரு சமூக மனப்பாங்கே இக்கதையில் தெரிகிறது. அதிகாரம் செலுத்தும் சிவனுடனேயே அதிகாரம் செலுத்தும் பான்டிய மன்னனும் சேர்ந்து கொள்கிறான். அதிகாரத்துடன் அதிகாரம்தானே சேரும். நக்கீரனுக்குச் சார்பாகப் பேசச் சபையில் யாரும் இல்லை. இரண்டு பெரும் அதிகாரங்களுக்கு அவர்கள் பயந்து வாய் மூடி விடுகிறார்கள். எனினும் தனியனாக அந்த நேர்மையும் துணிவும் மிக்க புலவன் நக்கீரன் வாதிடுகிறான். இதனைத் தான் நக்கீரப் பார்வை என அழைக்கிறோம்.
தனக்கு முன் நின்று வாதிடுவோர் அதிகாரம், ஆள்பலம் பெற்றவர் என அறிந்தும், இவ்விவாதத்தால் தனக்கு ஆபத்து வருமென அறிந்தும் கிஞ்சித்தும் பயப்படாமல் அந்த அதிகாரத்துக்கு எதிராகக் குரல் தரும் வாதமே நக்கீர வாதம். நெற்றிக்கண்ணைச் சிவபெருமான் காட்டி பயமுறுத்திய போதும் அப்பார்வைக்கு, எதிராகத் தானும் சிவனை அஞ்சாது பார்த்த அப்புலவனின் பார்வையே நக்கீரப்பார்வை. சரியான எதிர்வாதங்கள், வாதங்களால் அன்றி அதிசயச் செயல்களினாலும், அற்புதங்களாலும் முறியடிக்கப்பட்டமைக்கு எமது சமய வரலாற்றில் இடம்பெற்ற அனல் வாதம் புனல் வாதங்கள் சான்றுகளாயுள்ளன. வாதத்தை வாதத்தால் வெல்ல முடியாமல், அதனை இறைவனின் அற்புதங்களுக்குள் முடக்கி விட்ட மரபும் எம்மத்தியில் உண்டு.

எதிர்ப்பதில் ஆபத்தென்றால் பணிந்து போ

---

இது எதனையும் கேள்வி கேட்காது வளரும் தலைமுறைகளை உருவாக்க துணை புரிகிறது. துணிச்சலாக நின்று கேள்வி எழுப்பிய நக்கீரனே தன் இரு கரம் கூப்பி, இது இறைவனின் திருவிளையாடல் என வியக்கிறான். உண்மையில் வியந்தானா? அல்லது இனியும் எதிர்ப்பின் ஆபத்துண்டு எனப் பயந்து பணிந்தானா? என்ற வினா சுவராஸ்யமானது. பணிந்த அந்தத் துணிச்சல்காரன் மனம் பணிந்த போதே, உள்ளுக்குள் கொதித்திருக்கும் அல்லது நகைத்திருக்கும் என்று நாம் கற்பனை செய்யலாமா? விமர்சனக் கொள்கை என்றவோர் கொள்கை 19 ஆம் நூற்றாண்டில் உருவாகியது. அதனை ஆங்கிலத்தில் CRITICAL THEORY என அழைப்பர். மேற்கு நாட்டின் சில பல்கலைக் கழகங்களில் இக்கல்வி கற்பிக்கப்படுகிறது. சமூகத்தை அரசியலை, தொன்மத்தை, நிகழ்வுகளை அதன் ஆழ அகலங்களோடும் ஆணிவேர்களைக் காணுதலோடும் அமைந்த கல்வி அது. பிரச்சனையின் ஆழ அகலங்களைக் காண ஒரு துறை அறிவு மாத்திரம் போதாது; பல்துறை அறிவு தேவை. நமது பண்பாடும், நமக்குப் போதிக்கப்படும் கல்வியும் ஒரு துறை அறிவு தரும் பண்பாடாகவும் கல்வியாகவுமேயுள்ளன.

வினா எழுப்பாத சமூகம்

---

சிறுவயதிலிருந்தே வினா எழுப்பாத சமுகமாக நாம் கட்டமைக்கப்பட்டுள்ளோம். வீட்டில் வினா எழுப்பினால் குழப்படிப்பிள்ளை என்ற பட்டம், வகுப்பில் வினா எழுப்பினால் மோசமான மாணவன் என்ற பட்டம், சமூகத்தில் வினா எழுப்பினால் கலகக்காரன் எனும் பட்டம். இவ் வினா எழுப்புபவர்களின் வீடுகளில் தாய், தந்தை, பெரியோர் எனும் அதிகாரமும். பாடசாலைகளில் ஆசிரியர் எனும் அதிகாரமும் சமூகத்தில் பண்பாடு, சட்டம் என்பனவும் அதிகாரங்களும் அடக்கி விடுகின்றன. எதிர்ப்புக்கூடி அது கிளர்ச்சியானால் அதனை அடக்க வேறு வழிமுறைகளுமுண்டு. மேற்குறிப்பிட்ட சிவன் – நக்கீரன் தொன்மக்கதை தமிழ்ச்சமூகத்தின் எதிர்வாதம் புரியாது அதிகாரத்திற்கு அடங்கிப்போகும் பெரும்பலோனோரின் உளவியலைக் காட்டும் கதையாகவே காணப்படுகிறது.

எதிர்வாத ஆளுமைகள்

---

நமது புராணங்களுக்குள்ளும் இதிகாசங்களுக்குள்ளும் எதிர் வாதம் புரிந்த ஆளுமைகளையும் நாம் காண்கிறோம். கண்ணகி கதை இதற்கோர் சிறந்த உதாரணமாகும். அதிகாரம் மிகுந்த மன்னனை அதட்டி வழக்குரைத்து, நக்கீர ஞாயம் பேசியவள் அவள். தன்னை ஏற்காத போது "மன்னனும் நீயோ வள நாடும் உன்னதோ" என்று நக்கீர ஞாயம் பேசி மன்னனுக்கு ஏசி விட்டு துண்டை உதறித் தோழில் போட்டுக் கொண்டு புறப்பட்டவன் கம்பன். வெள்ளைக்கார அரசுக்கு எதிராக நெருப்புப் பொறி பறக்கும் நக்கீரத் தனமான தேசபக்தப்பாடல்களைப் பாடியவன் பாரதி. அவற்றை இனம் கண்டு வெளிக்கொணரும் நக்கீர விமர்சகர்கள்தான் நம்மத்தியில் இல்லை.



## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# தமிழர் வாழும் தேசங்கள் எங்கும் அறியப்பட்ட இலக்கியப் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு

“பெண்களது இலக்கிய மரபை நிறுவுதல் என்பது எப்பொழுதும் சவால்களை எதிர்கொள்வதாகவே இருக்கிறது. பல இடைவெளிகள், கேள்விகள் என்றும் இருந்துகொண்டே உள்ளன.

சங்க இலக்கியம் தொட்டு இன்றுவரை இந்நிலை தொடர்கிறது. சங்கப்பாட்டுகளில் எத்தனை பெண்களுடையவை...? சங்கப்புலவர்களில் எத்தனைபேர் பெண்கள்...? என்ற மயக்கம் இன்னும் முற்றாகத் தீர்ந்து விடவில்லை. பெயர் தொடர்பான மயக்கமே இது. ஆணா? பெண்ணா? என்கிற மயக்கம் தற்காலம் வரை தொடர்கிறது.”

பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, 2007 ஆம் ஆண்டு வெளியான பெயல் மணக்கும் பொழுது (ஈழத்துப்பெண் கவிஞர்கள் கவிதைகள் - தொகுப்பு அ. மங்கை) நூலுக்கு எழுதியிருந்த பின்னுரையில் மேற்கண்ட வரிகளைப் பார்க்கலாம்.

ஈழத்தில் பெண் எழுத்துக்களை குறிப்பாக இளம் தலைமுறை பெண்படைப்பாளிகளை எமக்கு அறிமுகப்படுத்தியிருக்கும், எம்மத்தியில் இன்றும் அயர்ச்சியின்றி இயங்கும் ஆளுமையான சித்திரலேகா மௌனகுரு அவர்களை சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் சந்தித்தேன். கலை, இலக்கியம், கல்வி மற்றும் ஊடகத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்தவர்கள் வாழ்ந்த ஒரு அழகிய மாடி வீட்டில்தான் சித்திரலேகா - மௌனகுரு தம்பதியரையும் கண்டேன். தற்பொழுது மீன்பாடும் தேனாட்டில் அழகிய வாவிக்கரையோரத்தில் தமது கணவர் பேராசிரியர் மௌனகுரு அவர்களுடன் ஓய்வெடுத்துவரும் அவர், அக்காலப்பகுதியில் இலங்கை வானொலி கலைக்கோலத்தில்



இலக்கிய உரைகளை நிகழ்த்தியபோது கேட்டிருக்கின்றேன்.

பெயல் மணக்கும்பொழுது - அது வெளிவந்த ஆண்டின் (2007) இறுதியிலேயே எனக்கு படிக்கக் கிடைத்தது. பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுப்பதில் நேரும் நெருக்கடிகள், அச்சங்கள் பற்றியெல்லாம் விரிவாகச் சொல்கிறார் அதனைத் தொகுத்திருக்கும் அ. மங்கை. பெண்கள் குறித்து பெண்களுக்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கும் தயக்கம் நீடிக்கிறது. பெண்கள் தாயாகவும் தாரமாகவும் இருக்கும்பொழுதும் நெருக்கடிகளை சந்திக்கிறார்கள். கல்வி, கலை, இலக்கியம், அரசியல், சமூகப்பணி, விழிப்புணர்வு - மனித உரிமை வேலைத்திட்டங்கள் முதலானவற்றில் ஈடுபடும்பொழுது அவர்கள் வசம் அதிகாரம் வந்துவிடக்கூடாது என்பதிலும் ஆணாதிக்க சமுதாயம் கவலைகொள்கிறது.

இந்தப் பின்னனிகளிலிருந்துதான் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்களின் ஆளுமைப்பண்பிற்குரிய பின்புலத்தை அவதானிக்க முடிகிறது.
பாரதியின் கவிதை வரிகள் பலவற்றுக்கு பல ஆளுமைகள்தான் ஊற்றுக்கண். சித்திரலேகாவின் வளர்ச்சியிலும் இந்த அம்சங்களை காணமுடிகிறது.

வடபுலத்தில் சாதி ஆதிக்கத்திற்கு எதிராக குரல்கொடுத்த அவரது தந்தையின் கருத்தியல்களினால் சிறுவயதிலேயே ஆகர்சிக்கப்பட்டிருக்கும் அவர், பெற்றவர்கள் கிழக்கில் வாழத்தலைப்பட்டவேளையில், மட்டக்களப்பில் பிறந்து வின்சன்ட் மகளிர் கல்லூரியில் பயின்றவர். அங்கு தனது ஆசிரியைகளிடம் கல்வியை மாத்திரம் கற்றுக்கொள்ளாமல் பெண்கள் பற்றிய அறிவார்ந்த சிந்தனைகளையும் பெற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிரவேசித்த பின்னர், அவரிடத்தில் இலக்கியம், அரசியல், பெண்ணியம் சார்ந்த பார்வைகள் மேலும் ஆழமும் விரிவும் பெற்றிருக்கின்றன. பேராசிரியர் கைலாசபதி, குமாரி ஜயவர்தனா முதலானோரின் ஆளுகை இவரது ஆற்றல்களை வெளிப்படுத்தியும் நெறிப்படுத்தியுமிருக்கிறது. நெதர்லாந்தில் சமூக விஞ்ஞானத்திற்கான நிறுவனத்தில் அபிவிருத்தி சம்பந்தமான கற்கை நெறியில் இணைந்து பெண்களும் அபிவிருத்தியும் என்ற பாட நெறியில் முதுகலை மாணி பட்டம் பெற்றிருக்கும் சித்திரலேகா, அங்கும் தனது விரிவுரையாளர்களிடமிருந்து அனைத்துலக பெண்களின் பிரச்சினைகளையும் , பல உலக நாடுகளில் பெண்கள் தொடர்பான கோட்பாடுகளையும் தெரிந்துகொள்கிறார்.
இவ்வாறு தனது அறிவையும் ஆற்றலையும் தொடர்ச்சியாக விரிவுபடுத்திக்கொண்டிருக்கும் இயல்பு அவரிடம் குடியிருப்பதனால்தான் நெருக்கடியான காலகட்டங்களிலும் தெளிவோடும் தீர்க்கதரிசனத்தோடும் அவரால் செயல்பட முடிந்திருக்கிறது.
நானறிந்தவரையில் அவர் முன்னேடுத்த சொல்லாத சேதிகள் கவிதைத்தொகுப்பு முயற்சி காலம் கடந்தும் பேசப்படுகிறது.

மிகவும் நெருக்கடியான காலகட்டங்களில், குறிப்பாக போர்நெருக்கடிகளுக்கு மத்தியிலிருந்துகொண்டு ஈழத்து பெண் எழுத்துக்களை அறிமுகப்படுத்தினார். சித்திரலேகா 1986 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பெண்கள் ஆய்வு வட்டத்தின் சார்பில் தொகுத்து வெளியிட்ட சொல்லாத சேதிகள் கவிதைத்தொகுப்பு இன்றும் இலக்கியப்பரப்பில் பேசுபொருளாகவே வாழ்கிறது.

இலங்கையிலும் தமிழகத்திலும் மாத்திரமின்றி உலகின் எந்தப்பகுதியிலும் தமிழ்க்கவிதை தொடர்பாக நடைபெறும் மாநாடுகள், கருத்தரங்கு உரைகளிலும் - எழுதப்படும் ஆய்வுகளிலும் சொல்லாத சேதிகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது. சித்திரலேகாவிடம் நாம் காணும் மற்றும் ஒரு சிறப்பியல்பு: அவருடைய இயங்குதளம். தானும் இயங்கி மற்றவர்களையும் இயங்கவைக்கும் தன்முனைப்பற்ற இயல்பு. 1976 இல், பேராசிரியர் கைலாசபதி, யாழ். பல்கலைக்கழகத்தில் முன்னின்று நடத்திய நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கு, ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு மைல்கல். இரண்டு நாட்கள் நடந்த அந்த ஆய்வரங்கில்தான் கொழும்பில் முன்னர் நான் சந்தித்த சித்திரலேகாவை மீண்டும் கண்டேன்.

சிவத்தம்பி, மௌனகுரு, நு.ஃ.மான், சிவநேசச்செல்வன், சண்முகதாஸ், சண்முகலிங்கம், மு. நித்தியானந்தன், துரை மனோகரன், நிர்மலா, ஏ.ஜே.கனகரத்தினா , கிருஷ்ணராஜா, நா. சுப்பிரமணியன் முதலான பலருடன் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த அசோகமித்திரனையும் இவர்களுடன் சித்திரலேகாவையும் அங்கு காணமுடிந்தது.

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

சித்திரலேகாவும் வேறும் சில ஆசிரியர்களும் மாணவிகளும் இணைந்து உருவாக்கிய பெண்கள் முன்னேற்றச்சங்கம், பெண்ணியம் சார்ந்த விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. அதிலிருந்து பெண்கள் ஆய்வு வட்டம் உருவாகியிருக்கிறது. இந்த வட்டத்தினால், மௌனகுருவின் சக்தி பிறக்குது, குழந்தை சண்முகலிங்கத்தின் தியாகத்திருமணம் முதலான நாடகங்கள் அரங்காற்றுகை கண்டுள்ளன.

சித்திரலேகா, சர்வதேச ரீதியில் பல பெண்ணிய ஆளுமைகளுடன் இணைந்து பயின்ற அனுபவமும் - இலங்கையில் மூவினத்தையும் சேர்ந்த பெண்களுடன் இயங்கிய முழுமையான அனுபவமும் பெற்றவர்.

இறுதியாக இவர் தொடர்பான செய்தியும் எமக்கு கிட்டியிருக்கிறது. இலங்கையில் புதிய அரசு பதவியேற்றதும் தொடங்கப்பட்டிருக்கும் நல்லிணக்கம் தொடர்பான செயலணியில் சித்திரலேகா இணைந்துள்ளார்.

இலங்கையில் நீடித்து முற்றுப்பெற்ற போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கு இலக்காகிய மக்களுக்காகவும், ஐ.நா. மனித உரிமைப்பேரவை நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அமைய இச்செயலணி தொடங்கப்பட்டுள்ளது.
தனது வளர்ச்சியில் மற்றவர்களின் ஆளுகையை இன்று வரையில் போற்றிவரும் சித்திரலேகா, தனது மாணாக்கரிடத்தில் தமது ஆளுகையை செலுத்தியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.
யாழ். பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியனவற்றில் இவரின் விரிவுரைகள் கேட்டுப்பயின்ற பல மாணவர்களிடம் இவரின் சிந்தனைத்தாக்கம் நீடித்திருக்கிறது.

இவருடைய இரண்டு மாணவிகளான தேவகௌரி, சூரியகுமாரி ஆகியோரிடம் கேட்டால், தம்மை விமர்சனத்துறையில் நெறிப்படுத்தியதில் சித்திரா மிஸ் அவர்களுக்கு முக்கிய பங்கிருக்கிறது என்பார்கள்.

“விமர்சனம் என்பது மேலோட்டமானது அல்ல. உன்னிப்பாக அவதானித்து எழுதப்படுவது. அந்த அவதானிப்பில் கூர்மை இருத்தல் வேண்டும் என்றும் சுருக்கமாகச் சொல்வதாயின் கழுகுப்பார்வை வேண்டும் என்றும் வலியுறுத்தி பயிற்றுவித்தவர் அவர். எங்களுக்கு மிகவும் பிடித்தமான விரிவுரையாளர்தான் சித்ரா மிஸ் ” - என்று இவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இவ்வாறு தான் கற்றவர்களிடமிருந்தும் கற்பித்தவர்களிடமிருந்தும் அபிமானம் பெற்றிருக்கும் சித்திரலேகா மௌனகுரு , பெண்களின் சமத்துவத்தை ஊக்குவித்தமைக்காக ஐ.நா.வின் அகதிகளுக்கான தூதுவர் அலுவலகத்தின் (U.N.H.C.R) விருதினையும் பெற்றவர்.
சித்திரலேகா, இருபதாம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கியம் என்னும் நூலை நு.ஃ.மான், மௌனகுரு ஆகியோருடன் இணைந்து எழுதியிருக்கிறார். கொழும்பில் இயங்கிய “விபவி” நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சுதந்திர இலக்கிய விழாவில்



சமர்பித்த இலங்கைத்தமிழரின் புலம்பெயர் இலக்கியம் என்னும் ஆய்வையும் எமக்கு நூல் வடிவில் வரவாக்கியிருக்கிறார்.

அத்துடன் சில மொழிபெயர்ப்பு நூல்களையும் எமது சமூகத்திற்காக தந்துள்ளார். இவர் எழுதியிருக்கும் பாரதியின் பெண்விடுதலை (இலக்கியம்-கருத்து-காலம்) பெண்ணிலைச்சிந்தனைகள் , பேரழிவுகளுக்கு பெண்கள் முகம் கொடுத்தல், உயிர்வெளி - கவிதைகள் (தொகுப்பு) டாக்டர் மேரி ரட்னம், (மொழிபெயர்ப்பு) முதலான நூல்கள் பற்றிய மேலதிக விபரங்களை நூலகம் இணையத்தளத்தில் படிக்க முடியும்.

தர்மசேன பத்திராஜாவின் இயக்கத்தில் வெளியான காவலூர் ராசதுரையின் பொன்மணி திரைப்படத்தில் பொன்மணியின் அக்காவாகவும் இவர் நடித்திருக்கிறார்.

பன்முக ஆற்றலும் ஆய்வறிவும் மிக்கவராக எம்மத்தியில் இன்றும் இயங்கிக்கொண்டிருக்கும் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்கள் கடந்து வந்திருக்கும் பாதை எமக்கு முன்மாதிரியானது. அதில் சர்வதேசியப்பார்வையே அகலித்திருக்கிறது.



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 20

மட்டக்களப்புக்கு போக வெளிக்கிட்டு இன்னும் போகாவிட்டாலும் குழு ஒழுங்காக்கி இவையிவைதான் எண்டு சொன்னதோட பட்டியலும் ஒப்படைச்சிட்டதால, அந்த குழுவில உள்ளவைக்கு சாப்பாடு உடுப்பு இதர செலவுகள் எல்லாம் இந்த வழங்கல் முகாமின்ர பொறுப்பில்ல. அதெல்லாம் மட்டக்களப்பு குழுத்தான் செய்யவேணும். எண்டாலும் அவைக்கும் இன்னும் அதுக்கான ஒழுங்குகள் செய்யேல்ல. நிதித்துறை இழுத்தடிச்சுக் கொண்டிருக்கு . அதால இவை இப்ப தற்காலிகமா வந்து தங்குறவையின்ர பட்டியலுக்கதான் இருக்கினம்.



அப்ப இவைக்கு காச்சிப்போடுற அளவுக்கு மூடையில அரிசி இருந்தாலும், அதே அளவு பருப்பு இருந்ததாலும் மூண்டு வேளையும் சோத்தக்காச்சி வாளியில கொணந்து வைப்பினம். பருப்புக்கறியையும் கொணந்து அதுக்கருகில விறாந்தையில வைப்பினம். அதை போட்டுத்தின்ன ஒரு அஞ்சாறு தட்டுகளும் வெளியாலயே வரும், பக்கத்திலயே கிணறு இருந்ததால தண்ணிய அவை அங்கபோய் எடுப்பினம்.

அதேசமயம் அந்த முகாமுக்குரிய பதின்மூன்று பேருக்கு மீன், கீரை, மரக்கறி என்று வருவதை மிக ஈடுபாடாக சமைப்பா எங்கட கூனிக்கிழவி. அப்பளப் பொரியலும் தப்பாது. அந்த சாப்பாட்டில எனக்கும் பங்கிருந்தது. எப்பவும் முகாம் வழங்கலில சோயா மீற் குறைவற இருக்கும். அதைக்கூட சமைக்க மாட்டார்கள். சரியாக ஒரு மாதமாக பருப்பும் சோறுமாக காலம் கழிந்தபின்தான் அவர்களை மட்டக்களப்புக்கு வழிநடத்துவதற்கான கட்டவுட் போட முடிந்தது.

இந்த கட்டவுட்பற்றி தெரியாதவைக்கு, ஒரு அவசிய வேலைகாரணமாக முக்கியஸ்த்தர்கள் ஒரு பகுதிக்கு போனாலோ அல்லது ஒரு டீம் ஒரு இடத்தை கடப்பதாக இருந்தாலோ, அவர்களுக்கு பாதுகாப்பாக எல்லையில் போராளிகளை காவலுக்காக விடுவினம்; இவயள் அந்தப்பகுதி முழுவதையும் சல்லடைபோட்டு பரிசோதிச்ச பின் நிகழ்வு முடியும்வரை அல்லது அவர்களுக்கு கொடுத்த கால அளவுவரை காவலாக நிப்பினம். அப்பாடா ஒருவழியா அந்த பாவப்பட்ட குழு வெளிக்கிட்டிட்டுது.

இதுக்கு முன்னம் அந்தக்குழுவில உள்ள பிள்ளையொண்டுக்கு பெற்றார் அடுத்த தெருவில இருந்தவை. அது யாழ்ப்பாணம் ஏதோ தீவுப்பகுதிச்சனம்; அந்த அம்மா இவைக்கு ஒருநாள் கூப்பிட்டு கோழிக்கறியோட விருந்து வைச்சா. இவை போக மாட்டினம் எண்டு தெரிஞ்சே தன்ர மகனுக்கு பிறந்தநாள் எண்டு பொய் சொல்லித்தான் கூப்பிட்டவா எண்டு நிரோசினி சொன்னவள். தான்தான் தாயிட்ட தங்கட சாப்பாட்டு நிலவரத்தை சொல்லி “ஒருநாளைக்கு சாப்பாடு தாணை “ எண்டு சொன்னவளாம்.

சரி இவை வெளிக்கிட்டு

**தமிழ்க்கவி**

நாயாத்துக்காட்டுக்க அடபங்கட்டி, பெடியள் பெட்டையள் எல்லாங்கூடி நடக்க துவங்கீட்டினம். இவைக்கு இதுவரையில பொறுப்பா நிண்டவன் மாறி இன்னொருவன் தலைமைதாங்கி பயணம் நடக்குது. வழிகாட்டி முன்ன நடக்கிறான்; பிறகால நடக்கிறவை வரிசையக் கைவிடாம கொடியோடினாப்போல நடக்கோணும். பொழுதும் கருகீட்டுது. முதல்ல முரளிக்காட்டுக்க உலுவிந்தபம்பத்தையள் கையால துளாவித்துளாவி நடந்தவைக்கு இரவு நேரஞ்செல்லச்செல்ல எங்க போறமெண்டே தெரியாம, கால்வேற உழையுதா; ....தடுமாத்தமாக்கிடக்கு அதுகும் உந்த கொரியன் கப்பல்ல எடுத்த பாட்டாக்கள் நொய்த சவங்கள். சின்ன முள்ளுத் தைச்சாலும் காலுக்க பாஞ்சிருது. பாட்டாக் கொம்பனிப்பாட்டாவோ டீ.எஸ்.ஐ.யோ பாவிச்சமாதிரி முள்ள விலத்த தெரியேல்ல. கக்கூசுக்கு போகிலும் சைக்கிள் எடுக்கிற எங்கட பிள்ளையளுக்கு இது சாவாலான பயணந்தான்.

“இதென்னடாப்பா விடியுதில்ல, காடும் முடியிதில்ல.“ பொம்பிளப் பிள்ளையளுக்கு பொறுப்பா போன பிள்ளை மன்னார் மாவட்டப் பொறுப்பில நிண்டவள். சண்டைக்காயள்தான் எண்டாலும் நடுவிலதான் இவையள் போகினம்; முன்னும் பின்னுமா பெடியளின்ர குழுத்தான். பிள்ளை லேசாத் திரும்பி “அண்ணாக்கள் இப்ப என்ன நேரம்வரும்.“ கேட்டாள் “உஸ்ஸ்ஸ்“ என்ற எச்சரிக்கைதான் பதிலா வந்தது. எங்கயோ “கிட்றிச் கிட்றிச்எண்டு“ காட்டுக்கோழி குரல் குடுத்துதா....கனபேருக்கு அது என்ன குருவி எண்டது தெரியேல்ல. விடியப்போகுது எண்டு மட்டும் தெரிஞ்சிது பயங்கரமான தாகம்வேற. விடியக்கிட்ட ஓரிடத்தில குழு தங்கல் போட்டிட்டாங்கள்.

“அண்ணை இது எந்த இடம்?“ எண்டாள் கலை.

“ அவசியமாத் தெரியோணுமோ?“ எண்டு கேட்டான் வழிகாட்டி.

“தெரிஞ்சா நல்லம்“

“ அப்ப சொல்லத்தான் வேணும். பொறுங்கோ பின்னுக்கு வாறவையும் வந்து சேரட்டும் “ என்றான் அவன்.

(தொடரும்)

## ‘மரண தண்டனையை மீள அமுல்படுத்த விளைதல் பிரச்சினைகளை அதிகரிக்கும்’ - சட்ட நிபுணர்

தொடர்ச்சி...

நாட்டின் சிறைகளில் ஊழலை ஒழித்தாக வேண்டும்.

அதுவும் கூட சமூகத்தில் இருந்து ஊழலும் ஏனைய வகையான குற்றங்களும் ஒழிக்கப்பட்டால்தான் சாத்தியம்.

பொருளாதார தாராளமயப்படுத்தலின் விளைவு

தமிழ்மாறனின் தகவலின்படி, போதை மருந்து வணிகமும், பாதாள உலக செயற்பாடுகளும் 1978இல் இலங்கையில் தாராளவாத பொருளாதார முறை அமுல்படுத்தப்பட்ட பின்னர்தான் உதயமாகியுள்ளன.

தனியார் முதலீட்டை கொண்டுவருவார்களாக இருந்தால் திருட்டு வணிகர்களைக் கூட தான் வரவேற்பேன் என்று அப்போதைய அதிபர் ஜே. ஆர். ஜயவர்த்தன கூறியிருந்தார்.

பொருளாதார தாராள மயமாக்கலின் பின்னர், சட்டப்படியோ, அல்லது அதற்கு முரணாகவோ எப்படியாவது பணம் சேர்க்கும் ஒருவித மனநிலை மக்கள் மத்தியில் தோன்றியது.

1978க்கு முன்னதாக பாதாள உலகம் என்ற சொல் இலங்கையில் கேள்விப்படாத ஒன்றாக இருந்ததாகவும், சில தெருச்சண்டியர்களும் குழுக்களும் மாத்திரமே இருந்ததாகவும் தமிழ்மாறன் கூறுகிறார்.

சந்தைப் பொருளாதாரத்தின் அறிமுகத்தின் பின்னர், அரசியல்வாதிகளோ, வணிகர்களோ, அதிகாரிகளோ அல்லது சாதாரண பொதுமக்களோ அனைவருக்கும் பெருமளவு பணம் தேவைப்பட்டது. வளைகுடா நாடுகளின் வேலைவாய்ப்புக்கள் மக்களை ஈர்க்க அவர்களும் பெருமளவில் அங்கு ஓடினார்கள். அங்கிருந்து வந்த பணம் சமூகம் முழுவதும் பரவியது. அதனைத் தொடர்ந்து போதை மருந்து வணிகமும் சமூகத்தில் பரவியது. அது அனைவரையும் ஊழல்வாதிகளாகவும் மாற்றியது.

இந்தப் பிரச்சினை, சமூக, பொருளாதார மற்றும் நிர்வாக அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கையாளப்படாவிட்டால், போதைப்பொருள் கடத்தலும் தொடரும் என்கிறார் தமிழ்மாறன்.

சர்வதேச கடப்பாடுகளை மீறல்

மனித உரிமைகள் குறித்த இலங்கையின் கடப்பாடுகளில் மரண தண்டனை ஒழித்தலும் அடங்குகின்றது என்கிறார் கொழும்பு பல்கலைக்கழகத்தை சேர்ந்த தமிழ்மாறன்.

மரண தண்டனை குறித்த இரண்டாவது சர்வதேச சிவில் உரிமைகள் ஒப்பந்தத்தை இலங்கை அங்கீகரிக்காவிட்டாலும், 2015 ஐநா மனித உரிமைகள் தீர்மானத்தில் மனித உரிமைகளை மேம்படுத்த அது ஒப்புக்கொண்டுள்ளது. ஆகவே மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான தீர்மானம் இலங்கைக்கு இன்னுமொரு கரும் புள்ளியாக அங்கு அமையலாம் என்கிறார் தமிழ்மாறன்.

2016இல் இருந்து கொழும்பு துறைமுகத்தின் ஊடாக பெருமளவும் போதை மருந்து கடத்தப்பட்டதும், வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல இடங்களிலும், போதை மருந்துடன் தொடர்புபட்ட குற்றங்கள் அதிகரித்ததுமே, இப்படியான கடுமையான நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியை அழுத்தியது என்று அமைச்சரவை பேச்சாளரான ராஜித சேனரட்ண கூறியுள்ளார்

அண்மையில் 103.9 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. அதன் பெறுமதி 70 லட்சம் அமெரிக்க டொலர். 2016 மற்றும் 2017இல் 1000 கிலோவுக்கும் அதிகமான போதை மருந்து கொழும்பு துறைமுகத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

சிறிசேன அரசு பலவீனமாக இருப்பதும் அறிந்ததே. பௌத்த பிக்குகள் நாட்டுக்கு ஒரு ஹிட்லர் தேவை என்கிறார்கள். வடக்கில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப்புலிகள் மீண்டும் தேவை என்கிறார். இந்த நிலையில் தான் பலவீனமானவர் அல்ல என்று காட்டவேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்கிறது.

மரண தண்டனை குறித்த இலங்கையின் வரலாறு

மன்னர்கள் காலத்தில் மரண தண்டனை பொதுவானதே. ஆயிரக்கணக்கானவர்கள், விசுவாசம் இல்லாதவர்கள் கூட கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், பௌத்த மதத்தை பேணும் இங்கு, 1956 இல் எஸ்.டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்க ஆட்சியில் மரண தண்டனை ரத்துச் செய்யப்பட்டது. ஆனால், பௌத்த பிக்கு ஒருவர் பண்டாரநாயக்காவை கொலை செய்ய 1959 இல் மரண தண்டனை மீண்டும் அமுலுக்கு வந்தது. 1976இல் சிறிமா பண்டாரநாயக்கா, அஹிம்சை அடிப்படையில் அதனை மீண்டும் ரத்துச் செய்தார். ஜே.ஆர் ஆட்சியிலும் அது தொடர்ந்தது. அப்போது சொல்லப்பட்ட காரணம் தர்மிஸ்த.

ஆனால், ஜே.ஆர். ஜயவர்த்தனதான் தாராளவாத பொருளாதாரத்தையும் அறிமுகம் செய்தார். அது சமூக சமத்துவமின்மையை உருவாக்கியது. தெற்கில் மார்க்சிஸ்ட் கிளர்ச்சியும், வடக்கு கிழக்கில் மோதல்களும் உருவாகின.

இலங்கை குற்றவாளிகளுக்கும், பாதாள உலகினருக்கும் வசதியான பூமியாக மாறியது.

# பொத்துவில் செங்காமம் தமிழ்மக்களின் பிரேதம் அடக்கப்படுவது எங்கே?

பொத்துவில் பிரதேசத்திலுள்ள செங்காமம் கிராமத்தில் வாழும் தமிழ், சிங்கள மக்கள் மரணமடையும் தமது உறவுகளின் பிரேதங்களை அடக்கம் செய்வதில் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

**5கி.மீ. சுமந்து வந்து அடக்கும் அவலநிலை: மயானம் கேட்ட மனுக்கள் கிடப்பில்.. !**

இவர்களது பிரேதங்களை 5 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பொத்துவில் இந்து மயானத்திற்கு சுமந்து கொண்டுவந்து அடக்கவேண்டிய அவலநிலையுள்ளது.

இதனால் அங்குள்ள மக்கள் தமக்கென ஒரு மயானத்தை அமைத்துத் தரவேண்டும் என பொத்துவில் பிரதேசசபை, பிரதேச செயலகம் போன்றவற்றிடம் எழுத்து மூல வேண்டுகோள்களை விடுத்திருந்தனர். அந்த மனுக்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஏனெனில், இன்னும் மயானத்திற்கான காணி ஒதுக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அங்குள்ள பொத்துவில் பிரதேசசபை உபதவிசாளர் பெருமாள் பார்தீபனிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

'இது உண்மை. அந்த மக்களின் நியாயமான ஆதங்கம் இது. இது தொடர்பில் நாம் எமது பிரதேசசபை தவிசாளர் எம்.எஸ். அப்துல் வாஸீத்திடம் மனுச் செய்தோம். அவரும் அதனை ஏற்றுக்கொண்டு, கடந்த மே மாதம் 06ஆம் திகதி பொத்துவில் பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அதன் பிரதிகளை எமக்கும் அனுப்பியிருந்தார்.

ஆனால் பொதுமக்கள் கூறுவதுபோன்று இன்னும் மயானம் அமைக்க காணி ஒதுக்கப்படவில்லை. விரைவில் அவருடன் தொடர்புகொண்டு இவ்வேலையை முடித்துத் தருமாறு கேட்கவிருக்கின்றேன்.



அண்மையில் பொத்துவில் செங்காமம் கிராமத்தில் சிங்கள சகோதரர் ஒருவர் காலமாகிவிட்டார். ஆனால் அவரின் பூதவுடலை அடக்கம் செய்வதில் பாரிய சிக்கல் எழுந்தது. காரணம் அங்கு தமிழ் சிங்கள இனத்தவர்கள் வசிக்கின்ற போதும் அவர்களுக்கான பொதுமயானம் இல்லை. அங்கு இருப்பது முஸ்லிம் இனத்தவரின் மையவாடி மாத்திரமே. அதனால் காலம்சென்றவரின் பூதவுடல் அடக்கம் செய்வதில் உண்டான சிக்கல் காரணமாக பிரதேசசபை தமிழ் உறுப்பினர்கள் சிலர் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

நிச்சயம் இதற்கு தீர்வு கிடைக்கவேண்டும். இல்லாவிடில் ஐந்து கிலோமீட்டர் தள்ளி உள்ள பொத்துவில் பொதுமயானத்திற்குத்தான் கொண்டுவரவேண்டும். இது பாரிய சிரமம். ஆகவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும். மரணம் எல்லோருக்கும் பொதுவானது. எனவே யாராயினும் மனிதாபிமானத்துடன் அணுகி 5 கிலோமீற்றர் சிரமத்தைத் தவிர்த்து சொந்த இடத்திலேயே அடக்கம்செய்ய வழிவகுக்குமாறு வேண்டுகின்றேன்' என்றார்.

சாதிப்பாரா பார்த்தீபன்? பொறுத்திருந்து பார்ப்போம்.

(காரைதீவு நிருபர் சகா)

# தாய்லாந்து குகையில் இருந்து மீண்ட சிறார்கள் எதிர்கொள்ளவுள்ள உளநலப் பிரச்சினைகள்

12 சிறார்களும், அவர்களின் கால்பந்து பயிற்சியாளும் இரண்டு வாரங்களுக்கு மேலாக தாய்லாந்து குகைக்குள் சிக்கி, பின்னர், இரண்டு நாட்கள் தொடர்ந்த மீட்பு நடவடிக்கையில் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்ட செய்தியை அனைவரும் அறிவீர்கள்.




இந்தநிலையில் இவ்வாறு இக்கட்டான சூழலில் சிக்கி மீண்டவர்கள் நீண்டகால பாதிப்புகளை அனுபவிப்பார்களா?. பார்ப்போம்.

இத்தகைய நிலையில் இருந்து மீட்கப்பட்ட பின்னர், அவர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களை பிரிட்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரி பல்கலைக்கழகத்தில் குழந்தைகள் மனநல மருத்துவரான அன்டிரியா டனெசி குறிப்பிடுகிறார்.

குறைந்த மற்றும் நீண்டகால உணர்ச்சி அறிகுறிகள்

-----------------------------------------------------------------

இந்த 12 சிறார்களும், அவர்களின் கால்பந்து பயிற்சியாளரும் உளவியல் ரீதியாக அதிர்ச்சிகரமான அனுபவத்தை



பெற்றுள்ளனர். அவர்களின் உயிரை அச்சுறுத்துகின்ற நிலைமையை அவர்கள் அனுபவித்துள்ளனர்.

இதன் விளைவாக, இந்த மீட்புதவி நடவடிக்கை முடிந்து, அவர்கள் பாதுகாப்பாக வெளிவந்த பின்னர், சில குழந்தைகளிடம் உணர்ச்சி அறிகுறிகள் தோன்றலாம். அழுது கொண்டும், பெற்றோரோடு ஒட்டிகொண்டே இருப்பவராக இந்த சிறார்கள் இருக்கலாம்.

ஆனால், பல நாட்களுக்கு பின்னர், அவர்கள் மன அழுத்தம், கவலை மற்றும் பேரதிர்ச்சிக்கு பிந்தைய மன அழுத்தம் போன்ற மன நல பிரச்சனைகளை பெறுகின்ற நிலை ஏற்படலாம்.

பேரதிர்ச்சிக்கு பிந்தைய மன அழுத்தம்

-----------------------------------------------------------------

பேரதிர்ச்சிக்கு பிந்தைய மன அழுத்தத்தால் பாதிக்கப்படும் பல குழந்தைகள், இந்த சம்பவம் பற்றி, நினைவூட்டுவதை தவிர்க்க செய்வதன் மூலம் இதனை சமாளிக்கப் பார்ப்பார்கள்.

இந்த சம்பவத்தை அதிக அளவில் நினைவூட்டப்படும் சூழ்நிலைகள் அவர்களை சுற்றி நிலவும் என்பதால், இத்தகைய நிலைமை அவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும்.

செய்தி நிறுவனங்கள் அவர்களை அணுகுவதாக அல்லது எல்லா ஊடகங்களிலும் தங்களையே பார்ப்பதாக இந்த நிலைமை இருக்கும்.

மேலும், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில், ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர், அவர்கள் அனுபவித்த இந்த சம்பவம் பற்றி விசாரிப்பதாலும் இந்த சம்பவத்தை நினைவூட்டுகின்ற நிலைமை ஏற்படலாம்.

இவ்வாறு இந்த சம்பவத்தை நினைவூட்டுகின்ற சம்பவங்களால், இந்த நிலைமை மிகவும் மோசமாகலாம்.

கேள்விகளை தவிர்த்து விடுவதற்காக பிறரிடம் இருந்து சில குழந்தைகள் தங்களை தனிமைப்படுத்தி கொள்வார்கள்.

இருளை கண்டால் பயம்

-----------------------------------------------------------------

இரவு வேளைகளில் இருட்டாக இருப்பதை விரும்பால் இருப்பது இன்னொரு பிரச்சினையாக அமையலாம்.

இரவுநேரத்து இருள், அவர்கள் குகையில் சிக்குண்டிருந்ததையும், அதற்கு மேற்கொள்ளப்பட்ட மீட்புதவி நடவடிக்கையையும் நினைவூட்டும் என்பதுதான் இதற்கு காரணமாகும்.

இந்த சிறார்களும், அவர்களின் கால்பந்து பயிற்சியாளரும் குறுகிய மற்றும் நீண்ட காலம் மனநல நிபுணர்களின் உதவியை பெறுவது மிகவும் முக்கியமானது.

இயல்பான வாழ்க்கையை பெற தொழில்முறை உதவியும் அவசியம்.

இருள் அல்லது எதிர்மறையான உணர்ச்சிகளால் ஆட்கொள்ளப்படாமல் அவர்களின் அனுபவங்கள் பற்றி பேசப்படுவதை கேட்கிறபோது, இந்த குழந்தைகள் கவலைக்குள்ளாவதை எதிர்கொள்ள உதவுவதற்கு படிப்படியாக தொழில்முறை உதவி வழங்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

2010ம் ஆண்டு சிலி நாட்டு சுரங்க தொழிலாளர்கள் மீட்கப்பட்டது போன்ற, சம்பவங்கள் சமீபத்தில் நிகழ்ந்துள்ளன.

இடிந்த சுரங்கத்தில் அகப்பட்டு கொண்டதால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீள்வது சிலி நாட்டு தொழிலாளர்களுக்கு சிரமமாகவே இருந்ததாம்.

ஆனால், அவர்களுடைய தொழில்முறை வாழ்க்கை மற்றும் பயிற்சிகள் இத்தகைய நிலைமைகளை சமாளிக்க சில ஏற்பாடுகளை செய்திருந்தது. அவர்கள் பெற்ற இந்த அனுபவம் ஏதாவது ஒரு வகையில் எதிர்பார்க்கப்பட்டதாகும்.

ஆனால், குகையில் சிக்கிய இந்த தாய்லாந்து குழந்தைகளை பொறுத்தமட்டில் இந்த சம்பவம் முற்றிலும் எதிர்பார்க்கப்படாதது.

எனவே, பேரதிர்ச்சிக்கு பிந்தைய மன அழுத்த அறிகுறிகள் இவர்களுக்கு தென்படுவதற்கு சாத்தியம் அதிகம்.

இயல்பான வாழ்க்கைக்கு திரும்புவது என்பது இந்த குழந்தைகளுக்கு பெரும் சவாலாகவே இருக்கும்.

--- நன்றி பிபிசி



# கடுகுக்கதை

## அவவுக்கு அவாதந்த அநியாயம்

பிட்டுக்கார பொன்னாச்சியின் தட்டிக்கடைக்கு சித்தர் ஒருவர் வருகை தந்தார். தன் பசியாறிய பின் பொன்னாச்சியின் தமிழ் பண்பழகைக் கண்டு பொன்னி இந்தா இரண்டு கோழிகள் இதிலொன்று தங்க முட்டையிடும், மற்றது வெள்ளி முட்டையிடும். ஆனால் இரண்டும் ஒரே நாளில் முட்டையிடாது. தங்க முட்டையிடும் கோழி முட்டையிட நிறுத்தியதும் வெள்ளிக் கோழி முட்டையிடும். அவைகளை விற்று சிறப்பாக வாழலாம் என்று கூறி இரண்டு கோழிகளையும் கொடுத்துவிட்டு தன் பயணத்தை தொடர்ந்தார் சித்தர்.

பொன்னிக்கு அளவிலா மகிழ்ச்சி. வீட்டுக்கு போனதும் இரண்டு கோழிகளையும்



வெவ்வேறாக அடைத்துவிட்டு, எப்போ விடியுமென காத்திருந்து, விடிந்ததும் தங்க முட்டையிடும் கோழிக்கூட்டை எட்டிப்பார்த்தாள் பொன்னாச்சி. கோழி தங்க முட்டையொன்றை போட்டிருந்தது. அதை எடுத்துக்கொண்டு பொன்னாச்சி கடைத்தெருவுக்குச் சென்றுவிட்டு வரும் வழியில் பேராசை பிழையான சிந்தனையை தந்தது. தினமும் ஒரு தங்க முட்டையை பெறுவதை விட கோழியை அறுத்து உள்ளிருக்கும் சகல முட்டைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அற்ப ஆசையில், வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாக கோழியை அறுத்து குடலைப் பார்த்தாள். அங்கு எதுவுமே இருக்கவில்லை. அடடா வீணாக தங்க கோழியை அறுத்துவிட்டேனே என்று தாங்க முடியாத வேதனைப் பட்டு, மறுநாள் வெள்ளைக் கோழியின் கூட்டை எட்டிப்பார்த்தாள். அது வெள்ளி முட்டை போட்டிருந்தது. பொன்னியை திரும்பவும் பேராசை தொற்றிக்கொண்டது. தங்க கோழியை அறுத்தது போல் இதை அறுத்துவிடக்கூடாது என்று வெள்ளிக்கோழிக்கு அதிகமான சாப்பாட்டை கொடுத்தாள். அது நாள் ஒன்றுக்கு பெரிய அளவிலான இரண்டு முட்டைகளை போடும் என்று தன்



சிந்தனையின் வழியில் சென்று கோழிக்கு கூடுதலான சாப்பாட்டை கொடுத்தாள். கூடுதலான உணவை உட்கொண்டதினால் கோழிக்கு கொழுப்பு மிதமிஞ்சியதுடன் கொழுப்படைந்து வெள்ளிக் கோழி செத்துவிட்டது.

கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

**அணுகுமுறை வேறாக இருந்தாலும்**

**அடிமனதில் வேர் விட்டது பேராசை**

**அவாவுக்கு அணை போட்டிருந்தால்**

**அவை இரண்டும் முட்டை போட்டிருக்கும்**

## குறுக்கெழுத்துப் போட்டி இல:–06 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ன | ந் | 2 த | 3 ன் | | 4 அ |
| ண | | | 5 ச | க | ட | ம் |
| 6 வ | க் | 7 கி | ர | ம் | | பு |
| ம் | | 8 ம் | த | ட | | |
| | 9 வ | ல | ன் | ப | 10 க | |
| 11 மா | டி | | | | ல் | 12 வே |
| | வு | | | 13 ல் | வி | லி |

**சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்:–**

**01. நிர்மலாதேவி புண்ணியநேசன் (காரைதீவு)**

**02. பெர.செபமாலை (அமிர்தகளி)**

**03. எஸ்.பிரணவி (திசைவீரசிங்கம் வீதி)**

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.

# நோர்வேயில் மனித குலத்தை மீட்கும் விதை வங்கி

தொடர்ச்சி...

பல ஆண்டுகளுக்கு முன்னர் சிரியா தமது நாட்டு விதைகள் பலவற்றை வைப்பு செய்திருந்தது. உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததும் அங்கு அழிக்கப்பட்ட விவசாயத்துறையை மீள கட்டியெழுப்புவதற்காக தாம் வைப்பு செய்திருந்த 325 பெட்டி விதைகளில் 130 பெட்டிகளை (116,000 விதை மாதிரிகள்) 2015 இல் மீளப் பெற்றுக்கொண்டது. அவர்கள் மீண்டும் அதுபோல ஒருநாள் திரும்பவும் வைப்பிலிடலாம். அப்படி மீள பெற்றுக்கொண்ட முதலாவது நாடும் அது தான்.

65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தாக்கிய விண்கல்லால் பூமியில் இருந்த டைனோசர்கள் உள்ளிட்ட பல வகை உயிரினங்கள் அழிந்துபோன வரலாறும் உண்டென்பதால் அப்படி ஒன்று நிகழ்ந்தால் என்ன செய்யலாம் என்று சிந்திக்கிற விஞ்ஞானிகள் தாவர விதை வங்கி போலவே, உலக உயிரினங்களின் டீ.என்.ஏ மாதிரிகளையும் வேறு பாதுகாப்பான கிரகத்தில் இப்படி ஒரு வங்கியை உருவாக்கி சேமிக்கலாம் என்கிற அளவுக்கு திட்டமிட்டு வருகிறார்கள்.

எப்படியோ நம்மால் நேரடியாக நடைமுறை சாத்தியப்பட்டிருக்கிற இந்த விதை வங்கி உலகையே காக்கவல்ல ஒரு முக்கிய முன்னுதாரணம். உலக சுற்றுச்சூழல், உலக பாதுகாப்பு, உலக அமைதி விடயத்தில் நோர்வே வெறும் பேச்சோடு நில்லாது நடைமுறையில் பலவற்றை மனித இனத்துக்காக சாதித்து வருகிறது.

தொடர்ச்சி...

# அறம் உணர்த்தும் தமிழ் இலக்கியங்கள்

“அறஒழுங்கு ஊரை ஆளும்” என்பது பழமொழி. அற ஒழுக்கத்தின் படி நடந்தவர்களை நாடு போற்ற தவறுவதில்லை. மனிதன் படித்த பாடத்தை மறந்து விட்டால் மீண்டும் படித்து அறிவை பெற முடியும். அற ஒழுக்கத்தை தவறவிட்டால் அவனது குடிப்பிறப்பு எவ்வளவு உயர்ந்ததாகினும் அதன் பெருமை மங்கி விடும். கல்வியைக் காட்டிலும் அற ஒழுக்கமே சிறந்தது. அற ஒழுக்கமும், பண்பாடும் வளர்ந்தால் தான் வாழ்க்கை முழுமையாக நிறைவு பெறும் என்பதை உணர வேண்டும்.

அந்த அற ஒழுக்கத்தை போதிக்க கூடிய, மனதிற்கு இன்பத்தை தரக்கூடிய இலக்கியங்களை கற்று அதன் வழி அற ஒழுக்கத்தோடு வாழ வேண்டும்.

இலக்கியம் என்பது யாது? “இலக்கினை இயம்புவதே இலக்கியம்“. பொன்னாலும், பொருளாலும் நாம் அடையும் இன்பங்கள் எல்லாம் நிலையற்றது. நிலையான இன்பத்தை தருவது இலக்கியத்தினால் அடையும் இன்பமே, குறிக்கோள் இல்லாதது இலக்கியம் ஆகாது. “இலக்கியம்“ என்பது “வாழ்வின் கண்ணாடி“. வாழ்க்கையை பிரதிபலிப்பது இலக்கியமானால், வாழ்வுக்கு வழிகாட்டிட வேண்டியதும் இலக்கியம். கலை, கலைக்காகவே என்பர் சிலர். அதற்கு மாறாக, கலை வாழ்க்கைக்கே என்பர் சிலர். நம் இலக்கியங்களை நாம் ஆராய்ந்தால், கலை வாழ்க்கைக்காகவே என்பது தெரிய வரும்.

ஒரு இலக்கியத்தின் குறிக்கோள் எதுவோ அதுவே இலக்கியம் தரும் இன்பங்களுள் தலை சிறந்தது. சிலப்பதிகாரத்தை எடுத்துக்கொண்டால் அதில் உணர்த்தப்படும் கற்பின் சிறப்பு, செங்கோலின் இயல்பு அந்நூலால் நாம் பெறும் இன்பம் ஆகும். -----பாண்டியன் நெடுஞ்செழியன் தான் செய்தது குற்றம் என உணர்கிறான். தான் இழைக்க கூடாத துன்பத்தை இழைத்து விட்டதாக எண்ணி நிலை குலைகின்றான். “பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்டயானோ அரசன்? யானே கள்வன்! மன்பதை காக்கும் தென்புலம் காவல்என் முதல் பிழைத்தது ! கெடுகஎன் ஆயுள்““ சிலம்பில் வரும் துன்ப வரிகள் இவை. ஆனால் கற்பவருக்கு இன்பத்தை அளிக்கும். இதுவே இலக்கிய இன்பத்தின் சிறப்பும், பயனும்.

ராமனும் குகனும்: ராமன், குகனுடன் நட்பு கொண்டான். கங்கை ஆற்றை ராமன் கடந்து செல்ல காரணமானான். ராமனிடம் பக்தி கொண்ட குகன், பரதன் படையோடு வருகிறான் என்று உணர்ந்தான். அவன் ராமனை நாட்டிற்கு அழைத்து செல்ல வருகிறான் என்பதை உணரவில்லை. ராமனுடன் போரிட்டு ராமனை அழிக்கவே பரதன் வருகிறான் என உணர்ந்து சினங்கொண்டான். ஆழமான இந்த கங்கை ஆற்றை கடந்து இவர் போவாரோ? அவ்வாறு போவாரானால் என்னை வீரமற்ற வேடன் என்று சொல்ல மாட்டார்களோ? ராமன் என்னை நோக்கி தோழன் என்று கூறியது ஒப்பற்ற சொல்லன்றோ? என்கிறான். இதை கம்பர் அழகுற புனைந்துரைக்கிறார். “ஆழ நெடுந்திரை ஆறுகடந்து இவர் போவாரோ?வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ?ஏழமை வேட னிறந்தில னென்றனை ஏசாரோ?”குகனின் இந்த சினம் நமக்கு இலக்கிய இன்பத்தை அளிக்கிறது. சகோதர வாஞ்சையையும் காட்டுகிறது. இப்படிப்பட்ட இலக்கிய இன்பத்திற்கு எல்லையில்லை. எண்ணும் தோறும் இன்பம் பயந்து துன்பத்தை போக்குகின்றது. அற ஒழுக்கத்தை உணர்த்தும் நூல்கள் இருவகை. ஒன்று நேரிடையாக அறம் உணர்த்துவது. மற்றொன்று மறைமுகமாக உணர்த்துவது.

அற ஒழுக்கத்தை நேரிடையாக உணர்த்தினால் அதை கற்பவருக்கும், கேட்பவருக்கும் சற்று கடினமாக இருக்கும். ஏற்று கொள்வதும் அரிதாகும். ஆதலால் மறைமுகமாக சான்றோர் உரைத்தனர். “அறம் செய விரும்பு” என்பது அவ்வையார் வாக்கு. இதை ஒருவர் ஏற்று கொள்ளலாம். மற்றவர் மறுக்கலாம். ஆனால் ஒரு கதையை சொல்லி அதன் மூலமாக அறப்பயனையும், அறத்திற்கு மாறுபட்டு நடந்தவர் எய்தும் துன்பத்தையும் வெளிப்படுத்துகின்றபோது, “அறமே மேலானது அதுவே வெல்லும்” என்று கற்பவர் நெஞ்சில் நிற்கும்.

ஒரு மருந்தை நேரிடையாக உண்பதை விட, அதன் மேல் இனிப்பு பூசப்பட்டு உண்பது எளிதன்றோ! மனித இனத்தின் கூட்டு வாழ்க்கை சமுதாயம். அதன் அங்கமாக விளங்குகின்ற தனி மனிதனுக்கு இன்பத்தையும், இன்பம் சார்ந்த அற ஒழுக்க நெறியையும் உணர்த்துவதே நல்ல இலக்கியத்தின் பண்பாகும். இது போன்ற பற்பல இலக்கியங்களை நம் தமிழ்மொழி பெற்று உலக சமுதாயத்திற்கே வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும், இலக்கியத்தின் நற்களமாகவும் விளங்குகிறது.

# உடல் துர்நாற்றப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிட்டதா?

உடல் துர்நாற்ற பிரச்னைக்கு தீர்வு காண சிறந்த வழியை தாங்கள் கண்டுபிடித்து விட்டதாக நம்புகின்றனர் நிபுணர்கள்.

தோலில் உள்ள பாக்டீரியா அக்கிளில் இருந்துகொண்டு எப்படி துர்நாற்றத்தை உருவாக்குகிறது என்பது தெரிந்துவிட்டாலே இப்பிரச்னைக்கு தீர்வு கண்டுபிடித்துவிடலாம் என்கின்றனர் அவர்கள்.

யார்க் மற்றும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகங்களை சேர்ந்த இரு குழுவினர் இந்த ஆய்வில் மூலக்கூறு பகுப்பாய்வின் முதல் படியை தாண்டியுள்ளதாக கூறுகின்றனர்.

இது வியர்வை துர்நாற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் புதிய தலைமுறை டியோடரன்ட் எனப்படும் துர்நாற்ற நீக்கியை உருவாக்குவதற்கான பாதையாக அமையக் கூடும். இத்தகவல் 'தி லைஃப்' என்ற இதழில் கூறப்பட்டுள்ளது.



**வியர்வை**

தோலில் உள்ள இரு வகைச் சுரப்பிகளால் வியர்வை உருவாகிறது.

-- உடற்பயிற்சி செய்யும்போது உடலெங்கும் சுரக்கும் வியர்வை எக்ரின் என்ற சுரப்பி மூலம் உருவாகிறது. துர்நாற்றம் அற்ற இந்த வியர்வை உடலை குளிர்ச்சியாக வைக்க உதவுகிறது.

-- முடி நிறைந்த தோள் பகுதி அக்கிளிலும், பிறப்பு உறுப்பு பகுதிகளிலும் சுரக்கும் வியர்வை அபோக்ரின் என்ற சுரப்பி மூலம் உருவாகிறது. இவ்வியர்வையில் புரதம் உள்ளிட்ட சிக்கல் நிறைந்த பல மூலக்கூறுகள் உள்ளன. இவை மணமற்று இருந்தாலும் பாக்டீரியாக்கள் இவற்றை துர்நாற்றம் கொண்டதாக மாற்றுகின்றன.

**டியோடரன்ட்டா அல்லது ஆன்ட்டிபெர்ஸ்பிரன்ட்டா?**

துர்நாற்ற நீக்கிகள் என்பவை உண்மையில் துர்நாற்றத்தை மறைக்க உதவுபவை. மேலும் அவை எத்தனால் அல்லது பாக்டீரியா எதிர்ப்பு பொருள் மூலம் பாக்டீரியாவை அழிக்கின்றன.

ஆன்ட்டிபெர்ஸ்பிரன்ட் என்பவை அலுமினியம் குளோரைடு கொண்டவை. இவை தோலில் உள்ள வியர்வையை வெளியிடும் நுண்ணிய துளைகளை அடைத்து வெளியாகும் வியர்வையின் அளவை குறைக்கின்றன.

நவீன கால டியோடரன்ட்டுகளை கை இடுக்கிற்குள் உள்ள அணுகுண்டை போன்றே பார்க்க முடியும் என்கிறார் யார்க் பல்கலைக்கழக உயிரியல் துறை பேராசிரியரும் கட்டுரையை இணைந்து எழுதியவருமான டாக்டர் கேவின் தாமஸ்.

துர்நாற்றத்தை போக்க பல பாக்டீரியாக்களை செயலிழக்க செய்வது அல்லது அழித்தொழிக்கும் பணியை இந்த டியோடரன்ட்டுகள் செய்வதாக கூறுகிறார் கேவின் தாமஸ்.

ஆனால் நமது அக்கிளிலுள்ள பல பாக்டீரியாக்களில் சில மாத்திரமே உடல் துர்நாற்றத்திற்கு காரணமாகின்றன என்கிறார் தாமஸ்.

ஸ்டாஃபிலோகாக்கஸ் ஹோமினிஸ் எனப்படும் இவ்வகை பாக்டீரியா வியர்வையிலுள்ள உடல் துர்நாற்றத்துக்கு காரணமான சில கூட்டுப்பொருட்களை கண்டறிந்து அவற்றை விழுங்கும் நகரக்கூடிய புரதத்தை பயன்படுத்துவதாக கூறுகின்றனர் நிபுணர்கள்.

உடல் துர்நாற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நுட்பத்தை கண்டறிவதற்கான முதல் படிக்கல்லாக இந்த ஆய்வு முடிவை பயன்படுத்தமுடியும் என்கின்றனர் கேவின் தாமஸும் அவரது உடன் பணிபுரிபவர்களும்.

நகரக்கூடிய புரதங்களை தடுத்து நிறுத்தும் பொருட்களை கொண்ட தெளிப்பான் அல்லது உருளும் தன்மை கொண்ட ஒரு கண்டுபிடிப்பாக அது இருக்கும் என்கின்றனர் அவர்கள். உயிரி தொழில் நுட்பம் மற்றும் உயிரி அறிவியல் ஆராய்ச்சிக்குழு மற்றும் யூனிலீவர் நிறுவனத்தின் தொழிற்கொடை வாயிலாக இதற்கான ஆய்வுகள் நடக்கின்றன.

இதற்கெல்லாம் முன்பாக உடல் துர்நாற்றத்தை தடுக்க சில எளிய வழிகள் உள்ளன.


**வியர்வையை தடுத்து நிறுத்துங்கள்**

-- தினமும் சுத்தமாக இருத்தல்
-- அக்கிளை பாக்டீரியா எதிர்ப்புத் தன்மை உள்ள சோப் உதவியுடன் கழுவுங்கள்
-- டியோடரன்ட் அல்லது ஆன்டிபெர்ஸ் பெர்ஸ்பிரன்ட் பயன்படுத்தவும்
-- வியர்வை விரைவில் காயும் வகையில் அக்கிளிலுள்ள முடிகளை நன்கு மழிக்கவும்.
-- உடலில் நன்கு காற்று படும்படியான பருத்தி ஆடைகளை அணியவும்.
-- தூய்மையான ஆடைகளை அணியவும்.

---நன்றி பிபிசி--



# கதிர்காமம், உகந்தை ஆலயங்களின் கொடியேற்றம்!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம கந்தன் ஆலயம் மற்றும் உகந்தமலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவங்கள் இன்று 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து 15 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும். 15ஆம் நாள் திருவிழாவின் பின்னர் ஜூலை 28ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

கொடியேற்ற தினம் தொடக்கம் கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதி மற்றும் தெயவயானை அம்மந் ஆலய விடுதியிலும் மற்றும் காரைதீவு உகந்தை யாத்திரீகர் விடுதியிலும் அன்னதான நிகழ்வு தொடர்ந்து இடம்பெறும்.

இன்னும் சில மடங்களிலும் அன்னதானம் இடம்பெறும்.

விழாக்காலங்களில் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் அடியார்களுக்கான சகல வசதிகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள என்றும் ஆலய நிருவாகங்கள் தெரிவித்தன.

கல்முனையிலிருந்து கதிர்காமத்திற்கும் உகந்தைக்கும் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கல்முனைச்சாலை அத்தியட்சகர் வெள்ளத்தம்பி ஜௌபர் தெரிவித்தார்.

இதேவேளை கதிர்காம ஆடிவேல் உற்சவத்திற்கென யாழ்ப்பாணத்திலிருந்து 56 நாட்கள் பாதயாத்திரையிலீடுபட்டு தற்சயம் வீரையடியில் தங்கியிருக்கின்ற வேல்சாமி தலைமையிலான குழுவினரும் மற்றும் 3000பேரும் நாளை காலை செல்லக்கதிர்காமத்தைச் சென்றடைந்து பிற்பகலில் கதிர்காமத்தை சென்றடையவுள்ளனர்.

அது அவ்வாறிருக்க உகந்தைமலை முருகனாலய கொடியேற்றத்தின் பின்னர் காட்டுப்பாதையினூடாக கதிர்காமம் நோக்கி பாதயாத்திரையில் பயணிக்க அங்கு சுமார் 4000 பேரளவில் தங்கயிருப்பதாக ஆலயத்தலைவர் சுதுநிலமே திசாநாயக்க தெரிவிக்கிறார்.

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் ஆடி வேல்விழா உற்சவமும் இதே திகதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28 இல் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

(காரைதீவு குறூப் நிருபர் சகா)

## கவிதை

# தானியம்

மயக்கம் வருகிறதா உனக்கு
உனக்கான மருந்து உனக்குள்
இருக்கிறது

மயங்காதே
மருந்தை எடுத்துக் குடி

இந்த உலகம் என்றால் என்ன என்று
நீ தெளிந்தால்
மயக்கம் போய்விடும்
மருந்து வேலை செய்யும்

இந்த உலகத்தில்
நீ மூழ்க மூழ்கத்தான்
மயக்கம் தலை தூக்கும்
ஆற்றுக்குள் மீன்போல
வாழ்க்கையிலும் நீ ஓடு

மீன் மூழ்கியதா
அதனால் அது மயங்கி மிதந்ததா
தண்ணீரைச் செதுக்கி
தன் வழி செய்கிறது
தண்ணீருக்குள் ஓடி விளையாடுகிறது

நீ மூழ்கி மிதக்கிறாய்
மயக்கம் வரும்தானே
வாழ்க்கையும் ஓர் ஆறு அல்லவா
இதிலும் அல்லி ஆம்பல் எல்லாம்
பூக்கின்றன அல்லவா

நீ இதில் நீராடி
தடிமல் வராவண்ணம் தலை துவட்டி
நிமிர்ந்து நிற்காமல்

இது தண்ணி
நம்மை
இழுத்து இழுத்து ஆழத்தில் உள்ள
சேற்றுக்குள் புதைக்கும்
என்று உணராமல்

இதன் குளிர்ச்சியிலே மயங்கிவிட்டாய்

இது பொய்க் குளிர்ச்சி
இந்தக் குளிர்ச்சி உஷ்ணமானது
உன்னை எரித்துவிடும்
மீன் புதைந்ததா
நீருக்கு மேல் வந்து
முட்டையிடுகிறதே
இந்த வாழ்க்கை ஒரு நீர்க்குமிழி
என்று
காட்டுகிறதே

நீ மீனைவிடக் கேவலமா
மயக்கமா
மருந்து உனக்குள் இருக்கிறது
நீதான் நோயாளியும்
நீதான் வைத்தியனும்
நீ மீன்போல வாழ
மயக்கம் வராமல் இந்த ஆற்றில்
உன்னை
அளந்து போடு

நாமும் ஒரு தானியம் அல்லவா
மண்ணுக்குத் தூவும்

---- சோலைக்கிளி ---





# நடந்தாய் வாழி களனி கங்கை

## எங்கள் தேசத்தின் தார்மீகத்தலைவர்(?) பிறந்த இல்லத்தில் ஒரு நாளிதழின் நெடும்பயணம்!

தொடர்ச்சி...

நிரந்தர இடம் தேடுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜே.ஆரின். நெருங்கிய நண்பராகவும் விளங்கியிருந்த அதன் அப்போதைய அதிபரும், சென். அந்தனீஸ், சின்டெக்ஸ் முதலான பெரிய நிறுவனங்களின் தலைவருமாக விளங்கியவரும் தலைநகரில் பெரிய வர்த்தகப்பிரமுகராகவும் திகழ்ந்த ஞானம் அவர்களின் பெரு முயற்சியினால், அரசின் அழுத்தம் குறைந்து மறைந்துபோனது.

அவ்விடத்தில் ஜே.ஆருக்கென பிரமாண்டமான நினைவு மண்டபம் அமைப்பதாயின், அந்தப்பிரதேசத்தில் இயங்கிய பல வர்த்தக நிலையங்களை அப்புறப்படுத்தவேண்டிய நிலை தோன்றலாம். அங்குள்ள குடியிருப்பாளர்களையும் வெளியேற்றவேண்டிய நெருக்கடிகள் ஏற்படலாம். அது அரசுக்கு பல்வேறு சட்டச்சிக்கல்களையும் தோற்றுவிக்கலாம்.

ஒரு தேசத்தின் அதிபருக்காக பிரமாண்டமான நினைவில்லம் அமைவதாயின் அந்தப்பிரதேசம் நவீன முறையில் பாதுகாப்பு பிரதேசமாக உருவாக்கப்படவேண்டும். ஆனால், ஜனநெருக்கடியும் போக்குவரத்து நெரிசலும் நீடிக்கும் அவ்விடத்தை அவ்வாறு மாற்றும் முயற்சி இறுதியில் கைவிடப்பட்டது. இதுவிடயத்தில் அந்தத்தலைவர் தனது கனவை நனவாக்காமலேயே அமரத்துவம் எய்திவிட்டார்!

" நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால், தெய்வம் ஏதுமில்லை. நடந்ததையே நினைத்திருந்தால் நெஞ்சில் அமைதியில்லை. முடிந்த கதை தொடர்வதில்லை!" என்று கவியரசர் கண்ணதாசன் எழுதியிருப்பது போன்று, அந்தத்தலைவரும் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்கவேண்டும்.

அவரது உறவினர்கள் (விஜயவர்தனா குடும்பம்) தலைநகரில் ஏரிக்கரை அருகே ஒரு பெரிய இல்லத்தை உருவாக்கி மும்மொழிகளிலும் பத்திரிகைகளை வெளியிட்டார்கள். அதுதான் LAKE HOUSE.

இவ்வாறு இலங்கை தலைநகரில் தோன்றிய பல பத்திரிகைகளின் கதைகளின் பின்னால் பல சுவாரஸ்யமான செய்திகள் இருக்கின்றன.

வீரகேசரி பத்திரிகையில் நீண்டகாலம் ஊடகவியலாளராக பணியாற்றிய எஸ். எம். கார்மேகம் வீரகேசரியின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆவணமாகவே எழுதிவைத்துவிட்டு அமரத்துவம் எய்திவிட்டார். இதழியல் துறையில் பயிலும் தற்கால தமிழ் மாணாக்கர்கள் அவசியம் படிக்கவேண்டிய ஒரு நூல்தான்: " ஒரு நாளிதழின் நெடும் பயணம்" (A LONG JOURNEY OF A DAILY).

( தொடரும்)

# இரண்டாவது முறை தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள்

தொடர்ச்சி...

ஒரு வகையில் வணிக அரசியலாகியது. உயிரையே அர்ப்பணிக்கும் போராட்டத்தை முன்னெடுத்து வந்த, தியாகத்தை முன்னிறுத்திய தமிழ் அரிசியலானது, அதற்கு முற்றிலும் மாறான வகையில் பகட்டாளர்களிடம் போய்ச்சேர்ந்தது. அதற்கான முறையில் ஒவ்வொரு கட்சியும் தமது வேட்பாளர்களைத் தேடிக்கண்டன.

வரலாற்றில், வாழ்க்கையில் ஒருவர் எத்தகைய அரசியற் பங்களிப்புகளையும் சமூகப் பணிகளையும் செய்திருக்கிறார் என்று பார்ப்பதற்குப் பதிலாக, என்ன பதவியிலிருக்கிறார், அல்லது முன்பு எத்தகைய பதவியிலிருந்தார், எவ்வளவு நிதிப்பலத்தோடிருக்கிறார், என்ன மாதிரியான சாதி, சமூக அடையாளத்தோடிருக்கிறார் என்ற வகையிலேயே ஒவ்வொருவருடைய பின்புலமும் பார்க்கப்பட்டது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது வாய்ப்பளிக்கப்பட்டவர்கள், மிகச் சுலபமாக அரசியல் அதிகாரத்திற்கு வந்தனர். வந்தவுடன் பிரமுகர் முறைமையிலேயே தமிழ் அரசியலைக் கையாளத் தொடங்கினர். இதனால் இன்றைய தமிழ்ச்சமூகத்தின் அரசியலானது, பிரமுகர் அரசியலாக – மக்கள் அரசியலுக்கு அப்பாலானதாக மாறிவிட்டது.

இது தமிழ்ச்சமூகத்தின் நாற்பது ஆண்டுகாலப் போராட்ட அரசியலின் பெறுமானங்களை எல்லாம் இன்று கீழிறக்கியது. இந்தத் தளம்பலான நிலையிலேயே இன்றைய தமிழ் அரசியல் உள்ளது. இதற்குள்தான் தாமே "புதிய புலிகள்" "புதிய போராளிகள்" என்றெல்லாம் வீறாப்பாகக் கம்பு சுத்துகிறார்கள்.

"மீண்டும் புலிகள் வரவேண்டும்" என்று கடந்த வாரம் விஜயகலா மகேஸ்வரன் "கம்பு" சுத்தியதும் இந்த அடிப்படையில்தான். இதை விஜயகலாவே நிரூபித்திருக்கிறார். விஜயகலாவின் உரை ஏற்படுத்திய சர்ச்சைக்குப் பிறகு ரஞ்சன் ராமநாயக்க விஜயகலாவுடன் ஏற்படுத்திய தொலைபேசி உரையாடலின்போது விஜயகலாவே இதைப்பற்றிச் சொல்கிறார், இப்படிப் பேசினால்தான் தேர்தலில் வெல்லலாம் என்ற தொனிப்பட. ஜனாதிபதித்தேர்தலில் மைத்திபால சிறிசேன எதிர்த்தரப்பில் நிறுத்தப்படுவார். அதற்குப் போட்டியாக நிறுத்தப்படும் ரணிலுக்கு ஆதரவு வேண்டுமல்லவா. அதற்கான ஆதரவைப் பெறுவதற்காகவே இப்படிப் பேசினேன் என்பதாக.

இது ஒன்றும் துயருற்ற மனிதர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கான வழியல்ல. சிலருடைய கல்லாப் பெட்டிகளை நிரப்பிக் கொள்வதற்கான உத்திகளே. தந்திரங்களே ஆகும். இந்த மாயமான்களை நம்பித்தான் இன்னும் தமிழ்ச்சமூகம் பயணிக்கப்போகிறதா? இந்தக் கேள்வியே நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குரியதுமாகும்.

இந்த "நாடகத்தனத்தை"க் கண்டும்



காணாததைப்போலவே பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் இவற்றுக்கு இன்னும் முன்னுரிமை அளித்துச் செய்திகளை அறிக்கையிடுகின்றன. இவற்றைக் குறித்து தமிழ்ச்சமூகத்தில் சிந்திக்கக் கூடியவர்கள், புத்திஜீவகள் கூட மறுத்துரைப்புகளையும் விமர்சனங்களையும் முன்வைப்பதில்லை. இவைகளையும் இவர்களையும் தங்களுடைய "கௌரவத்துக்குரிய பிரதிநிதிகளாக" சமூக மேற்தரப்பினர் கூடக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது அபத்தமாகும். சரிவின் பாதையாகும்.

இந்த நிலை மாறினால்தான் தமிழர்களுக்கான அரசியல் சற்று முன்னகரும். தமிழர்களுக்கான அரசியல் என்பது ஒருவகையில் இலங்கைக்கான அரசியலும் கூடத்தான்.

# கதிர்காமம் யாருக்குச் சொந்தம்?

தொடர்ச்சி...

வழியில் உகந்தையின் அழகில் மயங்கிய சன்னியாசியார் கதிர்காமம் போகாமல் இங்கேயே தங்கிவிட்டாராம். கலியாணகிரியார் வெற்றிகரமாகக் கதிர்காமம் போனாலும், தெய்வானையம்மையின் கோரிக்கையை நிறைவேற்றமுடியவில்லை. அவர் பகீரதப்பிரயத்தனம் செய்து அம்மையையும் கதிர்காமத்துக்கு அழைத்துவந்து முருகன், வள்ளியோடு சமாதானப்படுத்தி, குடியிருத்தினார் என்று அக்கதை நீள்கின்றது.

உகந்தையில் தங்கியிருந்த சன்னியாசியார் இம்மலைக்குகையில் தான் வாழ்ந்து வந்ததாகவும், இங்கேயே சமாதி அடைந்ததாகவும் சொல்கிறார்கள். முழுநிலவு நாட்களில் இங்கு தங்கினால், அகில், சந்தனம் மணப்பதையும், யாரோ மந்திரங்களை ஓதும் ஒலியையும் இம்மலையில் கேட்கலாமாம். அது சன்னியாசியார் முருகனைத் துதிக்கும் ஒலி என்கிறார்கள்.

சன்னியாசி மலையில் ஏறினால், நீர்தேங்கி நிற்கும் ஒரு 'கச்சினை'யைக் காணலாம். கற்சுனை என்பதைத் தான் பேச்சுவழக்கில் கச்சினை என்கிறார்கள். அதைத்தாண்டி மேலே ஏறினால் உச்சியில் சிதைந்த கட்டடமொன்றின் இடிபாடுகள் தென்படும். அந்த இடிபாடுகளின் அருகே தற்போது புத்தர் சிலை ஒன்றை நிறுவியிருக்கிறார்கள். அந்த இடிபாடு ஒரு புத்த விகாரைக்குரியது என்று உரிமைகோரப்படுவதுடன், சன்னியாசி மலையும் "வெஹெரகல" என்று புதுப்பெயரைச் சூடி இருக்கிறது. மலையடிவாரப் பிள்ளையார் கோயிலில் மகா சுமண சமனின் திருவுருவம் வைக்கப்பட்டிருக்கிறது. பாணமையிலிருந்து விசேட நாட்களில் இங்கு வந்து வழிபாடுகளைச் செய்து வைக்கும் பூசகர், சமன் தெய்வத்தையும் மும்மணிகளையும் போற்றும் சிங்கள மந்திரங்களையும் கூடவே ஓதுகிறார்.

சன்னியாசி மலையிலிருந்து 7 கி.மீ தெற்கே சென்றால் உகந்தையை அடைந்துவிடலாம். சரி, நாம் பாதயாத்திரை போகவில்லை தானே, உகந்தைக்குப் பிறகொருமுறை ஆறுதலாகப் போவோம். கதிர்காமத்தைப் பார்ப்போம் வாருங்கள்!

(தொடரும்)

## கவிதை

# எழுத்துக் கொசுக்கள்



கொசுக்களைக் கோர்த்து
காகிதத்தில் கிடத்துவது
எழுத்துகளல்ல
ஒரு நாளைக்கு இரண்டு
வரியேனும்
எழுத்தாக
சிறப்பாக எழுதவேண்டும்

உன் எழுத்து
உன் காகிதம்
உன் பேனை
உன் மேசை
எல்லாம் மெய்தான்
உனது உரிமைதான்
எனினும் நீ எழுதும் பக்கங்களில்
பூந்தோட்டம் வாடிக்
கிடப்பதைப்போல்
வேர் இல்லாத எழுத்துகள்
வதங்கிக் கிடக்கக் கூடாது

வதங்கிய பூந்தோட்டம்
வடிவாக இருக்காது
யாரும் மனம் கனிந்து
உலா வரமாட்டார்கள்

இரும்பால் வார்த்து எடுத்தாற்போல்
ஒரு நாளைக்கு இரண்டு
எழுத்தேனும்
பேனையால் பூவேலை
செய்ததுபோல்
எழுதினாலே போதும்
காகிதம் தோட்டமாகிவிடும்

ஆமைகள்போல் உன்னுடைய
எழுத்துகள்
தலையை உள்ளே இழுத்தபடி
கிடந்தாலும் உன்னுடைய
எழுத்துகள்
இலக்குக் கெட்டவை
எழுத்து ஓர் அம்பு
அவை கூராக எழுந்து
நிற்கவேண்டும்

விளக்காக எரியவேண்டும்

நீ எழுதிய காகிதம்
இருட்டடைந்து கிடந்தால்
வௌவால் அடையுமே

துரத்தத் துரத்த
படிப்பவர் கண் பூச்சி
மொய்த்து மொய்த்து திரிகின்ற
ஊராய்
நீ
எழுதிய
காகிதம் ஆனால்
யாருக்கும் ஆனந்தம்
அதற்கு நீ
எழுத்து எழுத்தாக எழுதவேண்டும்
கொசுக்கள் கொசுக்களாக
குவிக்காமல்

--- சோலைக்கிளி ---







Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa